கர்மயோகி

# லேடி இராமநாதன்



KARMAYOGI

# Lady Ramanathan

கர்மயோகி

# லேடி இராமநாதன்

Karmayogi Lady Ramanathan


பதிப்பாசிரியர்

**கலாநிதி. ஆறு.திருமுருகன்**

Editor

Dr. Aru Thirumurugan



**சிவபூமி அறக்கட்டளை, இலங்கை**

Sivapoomi Trust, Sri Lanka

**2025**

கா்மயோகி லேடி இராமநாதன் / பதிப்பாசிரியா்: கலாநிதி ஆறு.திருமுருகன் / சிவபூமி அறக்கட்டளை / யாழ்ப்பாணம் / 2025 / ISBN :978-624-94766-2-2 / பக்கம்: 92 / அச்சுப்பதிப்பு: மிக்கி பிறிண்டிங் ஸ்பெசலிஸ்ற், கண்டி வீதி, சங்கத்தானை, சாவகச்சேரி.

Karmayogi lady Ramanathan / Editerd by:Aru.Thirumurugan / Sivapoomi Trust / Jaffna. / 2025/
ISBN :978-624-94766-2-2 / Pages:92 / Printed by: Mickey Printing Specialist, Kandy Road, Sankathanai, Chavakachcheri.

# வாழ்த்துச் செய்தி



**பேராசிரியர் இராசரட்ணம் குமாரவடிவேல்**
வேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

*இலங்கையில் சைவத்துக்கும் தமிழுக்கும் கல்விக்கும் பெருந்தொண்டாற்றிய பெருமகன் சேர். பொன்னம்பலம் இரமநாதன் அவர்கள். சிறந்த கல்விமான், சட்ட வல்லுநர், அப்பெருமகனாரின் பணிகளுக்குப் பெருந்துணையாக விளங்கியவர் திருமதி. லீலாவதி இராமநாதன் அவர்கள். இப்பெருமக்கள் ஆற்றிய பணிகள் என்றும் மதிப்புடன் போற்றவேண்டியது எம் சமூகக் கடனாகும்.*

*சேர். பொன்னம்பலம் இராமநாதனின் பாரியார் லேடி இராமநாதன் அவர்களைக் கௌரவித்து இராமநாதன் கல்லூரி வளாகத்தில் உருவச்சிலை நிறுவுவது அறிந்து வாழ்த்துகிறேன். அம்மையாரின் தொண்டு அளப்பெரியது. அவர்கள் பிறநாட்டில் பிறந்து நம்மண்ணில் வாழ்ந்து நற்பணிகள் ஆற்றியவர். சைவ மங்கயர் கழகத்தைத் தோற்றுவித்து கழகத்தினூடாக கனதியான பணிகளை ஆற்றியவர். இராமநாத வள்ளலின் மறைவுக்குப் பின் அப்பெருமகனாரின் பாரிய பணிகளைப் பாதுகாத்துப் பேணியவர். அன்னாரின் அரிய சேவையை கௌரவித்து இலங்கைப் பல்கலைக்கழகம் தனது முதலாவது பட்டமளிப்பு விழாவுக்கு அழைத்து கௌரவ டாக்டர் பட்டத்தை வழங்கியமை மறக்கமுடியாது.*

*சீரிய பணியாற்றிய அம்மையாரை எதிர்காலத் தலைமுறை நன்கு அறிவதற்கு ஏதுவாக செஞ்சொற்செல்வர். கலாநிதி. ஆறு.திருமுருகன் அவர்கள் லேடி இராமநாதன் அர்களின் வாழ்வை ஓர் அரிய நூலாக 'லேடி இராமநாதன்' என்ற பெயரில் வெளியிடுவது மிகுந்த பாராட்டுக்குரியது. காலத்துக்குப் பொருத்தமான, காத்திரமான பணிகளை ஆற்றி வருபவர் ஆறு.திருமுருகன் அவர்கள், உண்மையான பணி செய்த சீமாட்டி இராமநாதன் அவர்களை என்றும் எம் சமூகம் நினைப்பதற்கு வழி செய்துள்ளார். இப்பணி என்றும் பெறுமதியானது.*

# வாழ்த்துச் செய்தி



**பேராசிரியர் சி. சிறிசற்குணராசா**
துணைவேந்தர்,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

*குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயிற் குமிண் சிரிப்பும்*
*பனித்த சடையும் பவளம் போல் மேனியில் பால் வெண்ணீறும்*
*இனித்தமுடைய எடுத்த பொற்பாதமும் காணப்பெற்றால்*
*மனி(த்)தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே*
*திருநாவுக்கரசர் தேவாரம்*

*சைவ சமயத்தின் முழுமுதற் கடவுள் சிவபெருமான். உலக இயக்கத்தில் சிவனது நடனம் விஞ்ஞானத்தை விளக்கும் தன்மையில் போற்றப்படுகின்றது. சிதம்பரம் சிற்சபையில் நடனமாடும் நடராஜரது சிவானந்த நடனத்தை உணரும் வகையில்;*

*"திரிகரண தொனிப்பொருளைக் கொண்டு சைவத்தையும் தமிழையும் ஒன்றிணைத்து சைவப் பண்பாடு மிளிரவேண்டும் என மரபுமாறாத வகையில் சேர். பொன். இராமநாதனால் சைவ மகளிருக்கென **1913.01.20** அன்று ஸ்தாபிக்கப்பட்டதே இராமநாதன் கல்லூரி ஆகும்.*

*இராமநாதன் கல்லூரியின் நிறுவுனர் நினைவு நாளில் சீமாட்டி லீலாவதி இராமநாதன் அவர்களது நினைவுகளை மீட்டுவது அவசியமானதாகும். சேர். பொன். இராமநாதனது அமெரிக்க நாட்டு சைவசித்தாந்த சொற்பொழிவு வேளையில் குறிப்பெடுக்கும் செயலாளராகவும் தொடர்ந்து மனைவியாகவும் இராமநாதவள்ளலுக்காக தமது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்தார். அவுஸ்திரேலிய நாட்டுப் பெண்மணி ஆர். எல். ஹரிசன் சைவத்தமிழ்ப் பண்பாட்டினை வளம் சேர்க்கும் வகையில் நெற்றியிலே திருநீறும், கழுத்தினிலே உருத்திராக்கமும் அணிந்து, மெல்லிய மஞ்சள் நிற ஆடையுடன் இராமநாதன் கல்லூரி எங்கும் காட்சியளிக்கும் கோலம் இன்றும் நினைவுகூரத்தக்கது. இராமநாதவள்ளல் வாழும் காலத்திலும் தொடர்ந்தும் தாம் ஈட்டிய பொருட்களை வழங்கி ஆற்றிய பணிகள் அளப்பரியன. இவற்றுள் இராமநாதவள்ளலின் சமாதிக்கோவில் இந்தியா கொடைக்கானல் குறிஞ்சிக்குமரன் கோவில் நிர்மாணம் என்பன சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும்.*

*இப்பெருந்தகை, சீமாட்டி லீலாவதி இராமநாதன் அவர்களது சேவையை ஆவணப்படுத்தும் மலரினை வெளியிட முனைவது மிகுந்த மகிழ்வளிக்கின்றது. இத்தகைய*

அரிய முயற்சியினை முன்னெடுக்கும் செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்களது சேவைகள் அளப்பரியன. திருக்கேதீச்சரத்தலத்தின் இலக்கியப் பெட்டகம், ஆவணப் பெட்டகம் என்பன நடமாடும் தகவல் களஞ்சியத்தின் உரைகற்களாகும். சிவபூமி அறக்கட்டளையினூடாக ஆற்றிவரும் சேவைகள் பழைமைசார் மரபுகளை அழியாப்பெருமையோடு பாதுகாக்கும் பணிகளாகும். இவற்றுள் திருவாசக அரண்மனை, திருவள்ளுவர் கோட்டம், திருமந்திர அரண்மனை என அவை நீண்டு செல்லும், சிவத்தமிழ்ச்செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களது வழிப்படுத்தலில் தம்மை நெறிப்படுத்திய இவர் திருவாளர் ஆறுமுக உபாத்தியாயர் தம்பதியினரின் வழித்தோன்றல் என்பது சிறப்பம்சமாகும்.

சேர்.பொன்.இராமநாத வள்ளலின் தீர்க்க தரிசன சிந்தனையுடன் கூடிய கல்விப்பணியில் மருதனார்மடத்தில் சைவப் பெண்களுக்கென இராமநாதன் கல்லூரி 1913ல் ஆரம்பிக்கப்பட்டது. ஆண்களுக்கென பரமேஸ்வராக் கல்லூரி 1921ல் ஆரம்பிக்கப்பட்டதும் மகத்தான பணிகளாகும். பரமேஸ்வராக் கல்லூரி இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமாக பரிணாமம் பெற்று தனது பொன்விழா ஆண்டினையும் கொண்டாடி நிற்கின்றது.

திருவாளர் பொன்னபலம் முதலியாரின் மரபில் இலங்கைப் பல்கலைக்கழக உருவாக்கத்திற்காக உழைத்த சேர் பொன் அருணாசலம் அவர்களும், இந்துக் கலை மரபை உலகறியச் செய்த கலாயோகி ஆனந்த குமாரசாமி அவர்களதும் பங்களிப்புக்களும் மகத்தானவை.

இராமநாதன் கல்லூரியின் வளர்ச்சியில் சேர்.பொன்.இராமநாத வள்ளலின் வழி சீமாட்டி லீலாவதி இராமநாதன், பேரறிஞர் சு.நடேசபிள்ளை ஆகியோரின் அர்ப்பணிப்புகள் நினைவுகூரத்தக்கவை. சைவப் பண்பாட்டை கட்டியெழுப்ப சைவப் பெண்கள் பண்புடையவர்களாக மட்டுமன்றி கல்வியறிவுடையவர்களாகவும் மிளிர வேண்டும் என்பதற்காக கல்லூரியின் சைவப் பண்பாடு விழுமியங்கள் கல்லூரிக் கீதத்தின் வழி உறுதிசெய்யப்படுகின்றன.

இராமநாதன் நுண்கலைக்கழகம், இராமநாதன் கல்லூரியின் கிளைமரபாக கவின் கலைகள் வளம்பெறும் வகையில் ஆரம்பிக்கப்பட்டதாகும். இவ் நுண்கலைக் கழகம் இன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பீடங்களில் சேர்.பொன்.இராமநாதன் கட்புல அவைக்காற்றுகை பீடமாக மிளிருவது குறிப்பிடத்தக்கது.

சேர்.பொன்.இராமநாதன் வள்ளலின் பெயரும், பெருமையும், மரபும், ஆர்வமும் சிந்தனைகளும் அழியாது வளர்ச்சி பெற வேண்டுமெனும் அர்ப்பணிப்போடு தம் வாழ்வினை தியாகம் செய்த சீமாட்டி லீலாவதி இராமநாதன் அவர்தம் சேவை பற்றிய ஆவணத்தொகுப்பு காலத்தினால் செயற்கரிய பெரும்பணியாய் அமையும் என நம்பிக்கை கொள்ளுகின்றேன்.

செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறுதிருமுருகன் அவர்களது பல்பரிமாண தன்னலமற்ற சேவைகள் தொடர மனப்பூர்வமாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"வாழ்க வளமுடன்"

# வாழ்த்துச் செய்தி



**திருமதி அம்பிகை சிவஞானம்,**
அதிபர், யா/இராமநாதன் கல்லூரி.

“லேடி இராமநாதன்” எனும் நூலுக்கு வாழ்த்துசெய்தி வழங்குவதையிட்டுப் பெருமகிழ்வு அடைகின்றேன். யாழ்ப்பாணப் புலமைப் பாரம்பரியத்தில் பெண் புலமைத்துவத்துக்கும், பெண் கல்விக்கும் முன்னுதாரணமாகச் செயற்பட்டவர் லீலாவதி அம்மையார். இவர் இனம், மதம், மொழியால் வேறுபட்டிருந்தபோதும் எமது மண்ணில் வாழ்ந்து அரும் பணி ஆற்றியுள்ளார்.

இராமநாதன் மகளிர் கல்லூரியின் முதல்வியாக இருந்து பாடசாலை வளர்ச்சிக்கு அரும்பணி புரிந்ததோடு முன்னுதாரண அதிபராகவும் செயற்பட்ட பெருமாட்டி இவராவார்.

இவரது பணிகளையும் சேவை மனப்பான்மையையும் நயந்து ‘கர்மயோகி லேடி இராமநாதன்’ நூல் வெளிவருகின்றமை பாராட்டப்படத்தக்க விடயமாகும்.

இன்றைய சூழலில் வாழும் பிள்ளைகளுக்கு வரலாறு, செயற்கரிய செயல்கள் புரிந்த பெண் ஆளுமைகள், அவர்களின் நாடு தாண்டிய அர்ப்பணிப்பான செயற்பாடுகளை எடுத்துக் கூறும் நல்ல ஊடகமாக இந்நுல் அமைந்துள்ளமை சிறப்பான, பாராட்டத்தக்க ஒரு விடயமாகும்.

இந்நூல் உருவாக்கத்தில் முன்னின்று உழைத்த கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களையும் அத்தனை நல் உள்ளங்களையும் அகமகிழ்ந்து பாராட்டி இப்பணி தொடர வாழ்த்தி இறையாசி வேண்டி என் வாழ்த்துரையை பேருவகையுடன் சமர்ப்பிக்கின்றேன்.

# வெளியீட்டுரை




**கலாநிதி ஆறு. திருமுருகன்**
தலைவர்,
சிவபூமி அறக்கட்டளை
(பழைய மாணவன், இராமநாதன் கல்லூரி ஆரம்பப்பிரிவு)


*கர்மயோகி லேடி இராமநாதன் ஈழத்திருநாட்டில் சைவத்தமிழ்ப் பெண்களின் கல்வி வளர்ச்சிக்கு அயராது உழைத்தவர். திருமதி.லீலாவதி இராமநாதன் அவர்கள் மிகவும் வசதியான குடும்பத்தில் அவுஸ்திரேலியாவில் பிறந்தவர். அம்மையார் அவர்களின் வாழ்வு மகத்தானது. இறைவனின் படைப்புகள் யாவும் அதிசயமானவைதான். மனிதப்பிறப்பு மகத்தானது. மனித வாழ்வில் சிலர் சாதிக்கிறார்கள், சிலர் சாதாரணமாகவே வாழ்ந்து முடிக்கிறார்கள். எங்கோ பிறந்து, வேறு எங்கோ வாழ்ந்து, இன்று மறையும் மானிடம் அதிகம். சிலர் இடப்பெயர்வினால் பிற தேசம் போய் வாழ்கிறார்கள். சிலர் தொழிலுக்காகச் சென்று பிற தேசங்களில் குடியேறுகிறார்கள். சிலர் மதரீதியான பணிகளுக்காக பிறந்த நாட்டைவிட்டு பிற தேசங்களில் குடியேறி அங்கேயே வாழ்ந்ததும் உண்டு. அவுஸ்திரேலியா மண்ணில் மிக வசதியான பிரித்தானிய கிறீஸ்தவ குடும்பத்தில் பிறந்தவர் ஹர்சின் என்ற பெண்மணி. கல்வியில் வல்லவராகி உலக ஆன்மீக தத்துவக்கோட்பாடுகளை ஆராய்வதில் ஆர்வம் கொண்ட இளம் ஆய்வாளராக இவர் விளங்கினார்.*

*கீழைத்தேசமாகிய இலங்கையிலிருந்து அவுஸ்திரேலியா சென்று ஆங்கிலத்தில் இந்துதத்துவக் கருத்துகளை அழகாக உரையாற்றிய பெரியார் சேர்.பொன் இராமநாதனை ஹர்சின் ஆன்மீக தத்துவ உரையரங்கில் சந்தித்தார். ஆழமான அழகான இராமநாதனின் உரை கேட்டு ஆச்சரியப்பட்டார். உரையரங்கு முடிந்ததும் தனது ஐயங்களை உரையாடி சேர்.பொன்.இராமநாதனிடம் கேட்ட இப்பெண்மணி அவரது அற்புதமான ஆற்றல்கண்டு அவரிடம் கற்க விரும்பினார். அவரது முகவரியையும் பெற்று, தொடர்ந்து தனது ஆன்மீக தத்துவார்த்த ரீதியான ஐயங்களைத் தெளிவுபடுத்துமாறு கொழும்பில் வசிக்கும் இராமநாதன் அவர்கட்கு கடிதங்கள் எழுதி அறிந்தார். காலப்போக்கில் நேரில் அவரிடம் கற்க ஆசைப்பட்டார்.*

*சேர்.பொன் இராமநாதனிடம் கற்பதற்கு கொழும்புக்கு வருகை தந்து விடுதியொன்றில் தங்கியிருந்து இராமநாதனின் “சுகஸ்தான்” இல்லத்திற்குச் சென்று கற்று வந்தார். காலப்போக்கில் இப்பெண்மணியின் ஆற்றல் கண்டு தனது செயலாளராக பணியாற்றுமாறு இராமநாதன் வேண்டினார். இராமநாதன் உரையாற்றும் அரங்குகளில் குறிப்பெடுப்பதும் அவற்றைத் தொகுப்பதும் இவரது ஆரம்பப் பணியாக இருந்தது.*

அமெரிக்கா,லண்டன் போன்ற நாடுகளில் நடைபெற்ற ஆன்மீக தத்துவார்த்த கூட்டங்களுக்கும் சட்ட விடயங்கள் சார்ந்த கூட்டங்களுக்கும் இவர் இராமநாதனோடு உடன் சென்றார். இதனால் ஏற்பட்ட உறவால் சேர்.பொன்.இராமநாதனது வாழ்க்கைத் துணைநலமாக மாறும் நியதி ஏற்பட்டது. ஏற்கனவே நெருங்கிய உறவினராகிய தாய்மாமன் மகள் செல்லாட்சி அம்மாளைத் திருமணம் செய்த இராமநாதன் தனது புலமைப் பணிகளுக்கு மிகுந்த துணையாக அமைந்த ஹர்சனை மணந்தபின் பல்வேறு சமய, சமூக ,அரசியல் விடயங்களில் பங்கு கொண்டு உழைத்தாரென அவரது வரலாற்றை எழுதிய சான்றோர்கள் வியந்து போற்றியுள்ளனர்.

லேடி இராமநாதன் என்றும் திருமதி லீலாவதி இராமநாதன் என்றும் சமூகம் மிகுந்த மதிப்பைக்கொடுத்து. அவரது ஆற்றல் கண்டு வியந்தனர். ஆன்மீகத்தில் பிறப்பிலேயே அதிகம் நாட்டம் கொண்ட அம்மையார் அவர்கள் எட்டுமுழச் சேலை கட்டி சைவத்தமிழ்ப் பண்பாட்டுக் கோலத்தோடு வாழத்தொடங்கினார். பெரிய குங்குமப் பொட்டு, தாலி,ஆபரணங்கள் அணிந்து சைவப் பாரம்பரியங்களையும் வழிபாட்டு மரபுகளையும் பேணிப்பாதுகாப்பதில் அக்கறை செலுத்தினார். தஞ்சாவூரில் வாழ்ந்த சுவாமி அருட்பரானந்தநீதர் என்னும் ஞானகுருவை இராமநாதனும் அம்மையாரும் தங்கள் ஞானகுருவாக ஏற்று அவரது ஞான உபதேசங்களை ஏற்றுப் பின்பற்றத் தொடங்கினர். தர்மகாரியங்களில் ஈடுபடுமாறு அருட்பரானந்தர் வழிகாட்டிய நாள்முதல் இருவரும் தலயாத்திரைகள் மேற்கொண்டு ஆன்மீகத்துக்கு முக்கியத்துவம் கொடுக்கத் தொடங்கினர். அரசியலில் மிகுந்த ஈடுபாடுடைய இராமநாதன் அவர்களை ஆன்மீகத்தின் ஊடாக பரோபகாரி ஆக்கியவர்கள் ஆன்மீகப் பெரியவர்கள்.

நல்லூரின் தேரடிச்சித்தர் செல்லப்பா சுவாமிகளின் ஆசியும் இராமநாதன் தம்பதிகளின் வாழ்வில் நற்பணிகளுக்கு வித்திட்டது எனப் பலரும் கூறுவர்.

சைவத்தமிழர்களின் வாழ்வை மேம்படுத்த நல்லைநகர் நாவலர் பெருமான் சேர்.பொன் இராமநாதன் அவர்களை ஆற்றுப்படுத்தினார். இதன் பயனால் தமிழரின் கல்வியை மேம்படுத்துவதில் இராமநாதன் அக்கறை காட்டத் தொடங்கினார்.

1909ஆம் ஆண்டில் இராமநாதன் கல்லூரிக்கான அடிக்கல் நாட்டப்பட்டது. கல்லூ ரியின் கட்டுமான வளர்ச்சியில் முழு அக்கறையும் செலுத்தியவர் லேடி இராமநாதன் அவர்கள். அவுஸ்திரேலியாவில் தான் கற்ற பாடசாலைகளை உள்வாங்கி மிகப்பெரிய விடுதிச்சாலையோடு கூடிய பாடசாலையும் அதன் அழகிய தோற்றம் அனைத்தும் லேடி இராமநாதன் அவர்களே திட்டமிட்டார் என்பது உண்மை. கட்டுமானப் பணிகளை மேற்பார்வை செய்ததுடன் விடுதிச்சாலை, மலசலகூடம் யாவும் மேலை நாட்டுப் பாணியில் உட்புறமாக அமைப்பித்தார் என அன்னாரைப்பற்றிய சிறப்புகள் உரைக்கும் போது குறிப்பிடுவர்.

பாடசாலையின் முன்பக்க பூங்கா முதல் கல்லூரியில் எழுந்த மரங்கள் அனைத்தும் அம்மையாரின் செயற்பாடே என அமரத்துவம் அடைந்த ஆசிரியை திருமதி.ருக்மணி அம்மையார் உரையாடும் போது ஒரு சமயம் குறிப்பிட்டார்.

*1913 முதல் இராமநாதன் கல்லூரியில் அமைந்த வீட்டில் வசித்த லேடி இராமநாதன் கல்லூரியின் அதிபராக, முகாமையாளராக மிகச் சிறப்பாகச் செயற்பட்டுள்ளார். திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரி வேலைகள் ஆரம்பித்தபோதும் அக்கட்டட அமைப்பு, மேற்பார்வை, திட்டமிடல் யாவற்றையும் அம்மையாரே கண்காணித்துள்ளார். 1928ல் பரமேஸ்வரன் கோவிலைக் கட்டுவித்தமையும் அம்மையாரின் திட்டமிடலே. இரண்டு கல்லூரிகளின் முகாமைத்துவத்தையும் 1930முதல் கண்காணித்த பெருமை அம்மையாரைச் சாரும். இராமநாதன் அவர்களின் மருகர் சு.நடேசன் அவர்கள் முகாமைத்துவப் பொறுப்புக்களை ஏற்கும் வரை பாரிய பொறுப்புக்களைச் சுமந்த பெருமை அம்மையாருக்குரியது.*

*சேர் பொன் இராமநாதனை மிகவும் நேசித்து சைவசமயத்தின் பால் ஈர்க்கப்பட்ட அம்மையார் அவர்கள்; இராமநாதன் அவர்கள் பின்பற்றிய சிவ பூசையை தினமும் தானும் சிறப்பாக மேற்கொண்டார். அதிகாலையில் விழித்து, நீராடி, சிவகாமி அம்பாள் சமேத நடராசப் பெருமானுக்கு பூவைத்து வழிபாடு செய்வதோடு சிறிய சிவலிங்கம் வைத்துப் பூசித்து வந்தார். சிவபுராணம் மனனம் செய்து பாடி வணங்கி வந்ததாக விடுதிச்சாலையிலிருந்து படித்தவர்கள் பலரும் கூறுவர். சைவ போசனம் மட்டும் உண்பதோடு கழுத்தில் உருத்திராட்சமாலை தினமும் அணிந்து வலம் வந்தார். தினமும் தியானப் பயிற்சி பெற்று வணங்குவது அவரது நித்திய கடமை. நேரக் கட்டுப்பாட்டில் மிகவும் அக்கறை செலுத்திய அம்மையார் இராமநாதன் கல்லூரி ஆசிரியர்கள், விடுதிச்சாலை மற்றும் மாணவர்கள், பணியாளர்கள் அனைவரையும் சீரான ஒழுங்கு கட்டுப்பாட்டு நெறிமுறைகளைப் பின்பற்ற வைத்தார்.*

*சேர் பொன் இராமநாதன் அவர்களின் மறைவு இவரைப் பெரிதும் வாட்டியது. அவரது இறுதி வைபவத்தை மருகர் நடேசன் அவர்களோடு இணைந்து இவர் சிறப்பாக நடாத்தி முடித்தார். இராமநாதனின் விருப்பத்துக்கு அமைய கல்லூரியின் தென் திசையில் இராமநாதனின் உடம்பை சமாதி வைப்பித்தார். சமாதியை சிவன் கோவிலாக அமைப்பதில் மிகவும் அக்கறை செலுத்தினார். இவரது முயற்சியால் இந்திய சிற்பாசாரிகள் வரவழைக்கப்பட்டு தனிக்கருங்கற்களால் சமாதிக்கோவில் அழகாகக் கட்டப்பட்டது. இன்று இராமநாதேஸ்வரம் என மிளிரும் (சமாதி) ஆலயத்துக்கு இருவேளைப் பூசைகள் செய்ய ஏற்பாடு செய்வித்தார்.*

*லேடி இராமநாதன் அவர்கள் இராமநாதன் கல்லூரியில் சிறந்த ஆசிரியர்களை நியமித்து அவர்களுக்கான சிறப்புக் கடமைகளை வழங்கி முகாமைத்துவம் செய்தார். காலையில் முன் மண்டப வாயிலில் நின்று வணக்கம் என்று தமிழில் ஆசிரியர்களையும் மாணவர்களையும் வரவேற்பார் என அவர் காலத்திற் கற்றவர்கள் கூறுவர். தனது கணவனின் இறப்பிற்குப் பின் தூய மென்மஞ்சள் சேலை கட்டி தனி உருத்திராட்ச மாலை மட்டும் அணிந்து மிக எளிமையாக வாழ்ந்துள்ளார். ஆரம்ப காலத்தில் வைர ஆபரணங்களும் மிகப் பெறுமதியான நகைகளும் அணிந்த அம்மையார் பிற்காலத்தில் முற்றும் துறந்த துறவி போல் தன் வாழ்வை அமைத்துக்கொண்டார்.*

சைவ மங்கையர் கழகம் என்ற அமைப்பை யாழ்ப்பாணத்தில் தோற்றுவித்தவர் லேடி இராமநாதன். இக்கழகத்தில் இராமநாதன் கல்லூரி அதிபர், ஆசிரியர்கள், பழைய மாணவர்கள் மற்றும் புலமை மிக்க சில பெண்கள் அங்கம் வகித்தனர். இவரது ஆளுமையால் சைவமங்கையர் கழகம் பெரு வளர்ச்சி கண்டது. குறுகிய காலத்தில் கழகத்தின் செயற்பாடுகள் சமூகத்தில் பெரும் மதிப்பைப் பெற்றது. பல இந்திய ஆத்மீக பெரியவர்களை அழைத்து சமய நிகழ்வுகளையும் உரை அரங்குகளையும் இக்கழகம் நடாத்தியது. இக் கழகம் ஏழை மாணாக்கர்களின் கல்வியில் அக்கறை கொண்டது. சில சமய நூல்களையும் இக்கழகம் வெளியிட்டுள்ளது. இக்கழகத்தில் ஆளுமை பெற்றவர்கள் கொழும்பிலும் ஓர் சைவ மங்கையர் கழகத்தை உருவாக்கினர். அக்கழகம் இன்று ஓர் சைவப் பாடசாலையையும் விடுதிச் சாலையையும் நல்ல முறையில் வளர்த்தெடுத்துள்ளன. சைவ மங்கையர் கழகத்தினூடாக ஆத்மீக யாத்திரைகள் பல இடம்பெற்றுள்ளது. திருக்கேதீஸ்வர திருப்பணிக்கும் கீரிமலை நகுலேஸ்வர ஆலயத் திருப்பணிக்கும் சைவ மங்கையர் கழகம் நிதி சேகரித்து வழங்கியுள்ளது.

இராமநாதன் கல்லூரியில் குருபூசைகளை சிறப்பாக நடாத்துவதில் இக்கழகம் பெரிதும் உதவி வந்துள்ளது. சிவராத்திரியை முன்னிட்டு பல போட்டிகளை நடாத்தி வெற்றி பெற்ற நிகழ்ச்சிகளை அரங்கேற்றி பரிசில்களையும் வழங்கி வந்துள்ளது. கீரிமலை சிறாப்பர் மடத்தில் சைவ மங்கையர் கழகம் காலத்திற்கு காலம் பல நிகழ்ச்சிகளை நடாத்தி வந்துள்ளது. இவை அனைத்திற்கும் மூல காரணமாகவும் விளங்கியர் லேடி இராமநாதன் அவர்கள். அம்மையாரின் மறைவிற்குப் பின் அவரது நினைவு நாளை சைவ மங்கையர் கழகம் பெரியளவில் செய்து வந்துள்ளது. 70களில் சைவ மங்கையர் கழகத் தலைவராக விளங்கிய திருமதி ரட்ணா நவரட்ணம் அவர்கள் கொழும்புத்துறையில் ஆதரவற்ற பெண் பிள்ளைகளுக்கான ஆன்மீக விடுதிச் சாலையை நடாத்தி வந்தமை குறிப்பிடத்தக்கது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் உருவாக்கப்பட்டபோது அன்று இயங்கிய சைவ மங்கையர் கழகம் ஆண்டுதோறும் பல்கலைக்கழகத்தில் லேடி இராமநாதன் நினைவுப் பேருரை பல்கலைக்கழகத்தில் நடாத்த வேண்டும் என வேண்டுதல் விடுத்தனர். அப் பேருரைக்கான செலவினை ஈடு செய்வதற்கு பல்கலைக்கழகத்திற்கு ஒரு தொகை நிதியை சைவமங்கையர் கழகம் நிரந்தர வைப்பிலிட்டது. அதனால் ஆண்டுதோறும் லேடி இராமநாதன் நினைவுப் பேருரை சான்றோர்களால் நிகழ்த்தப்பட்டு வருகின்றது.

யாழ்ப்பாணத்தில் 1920களில் இயங்கிய இளைஞர் காங்கிரஸ் அமைப்பு சிறப்பாக செயற்பட்டது. இவ் அமைப்பு 1926ம் ஆண்டு மகாத்மா காந்தியை யாழ்ப்பாணத்திற்கு அழைத்து எம் சமூகத்தின் மத்தியில் சுதேசிய சிந்தனைகளை வளர்க்க ஆவல் கொண்டது. அவ்வேளை காந்தியடிகள் ரூபா ஒரு லட்சத்திற்கு மேல் யாழ்ப்பாணத்தில் தனக்கு நிதி சேகரித்து தர வேண்டும். அந்நிதி இந்தியப் போராட்டத்திற்குப் பயன்படுத்துவேன் என வேண்டினார். இளைஞர் காங்கிரஸ் பிரமுகர்கள் லேடி இராமநாதனைச் சந்தித்து உதவி கேட்டனர். ரூபா ஆயிரத்து நூற்றுப் பதினொன்று வழங்கி, சைவ மங்கையர் கழகத்தினூடாக மேலும் நிதி சேகரித்து வழங்குவதாக அம்மையார் உறுதியளித்தார்.

*அன்று அம்மையார் கொடுத்த நிதி உதவி பெரு நிதியாகக் கருதப்பட்டது.*

*இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் மகாத்மா காந்தி யாழ்ப்பாணம் வந்தபோது இராமநாதன் கல்லூரியில் லேடி இராமநாதன் தலைமையில் சிறப்பு வரவேற்பு அளிக்கப்பட்டது. அக்கூட்டத்தில் இராமநாதன் பங்குபற்றவில்லை. அம்மையாரே முழுவதும் நெறிப்படுத்தினார். கல்லூரி வளவை சுற்றிப் பார்த்த காந்தியடிகள் வியந்து போற்றியுள்ளார். பெண்களுக்கான கல்வி மற்றும் ஆன்மீக முறைகள் காந்தியை பெரிதும் கவர்ந்தது. காந்தி இராமநாதனையும் லேடி இராமநாதனையும் வாழ்த்திச் சென்றார். சேர் பொன் இராமநாதனை தேசியத் தலைவராக மதித்து பல பெரியவர்கள் அவரது மறைவிற்குப் பின்னும் மரியாதையின் நிமித்தம் இராமநாதன் கல்லூரிக்கு வருவார்கள். அவர்களை கௌரவமாக உபசரிப்பதில் அம்மையார் அக்கறை செலுத்துவார்.*

*இராமநாதன் கல்லூரியில் பெண் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை ஆரம்பிக்கப்பட்டு சிறப்பாக இயங்கியது. அவ் ஆசிரிய கலாசாலையை முறையாக நடாத்துவதில் அம்மையார் அக்கறை காட்டினார். பயிற்சி பெறும் ஆசிரியைகள் அனைவரும் விடுதிச் சாலையில் தங்கினர். அவர்களை நெறிப்படுத்துவதிலும் அம்மையார் பெரும் பங்கு வகித்தார். அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி போன்ற பல ஆற்றலாளர்கள் இவ் ஆசிரிய கலாசாலையில் கற்றவர்களே. லேடி இராமநாதன் அவர்களும் அவரது மருகர் சுப்பையா நடேசர் அவர்களும் இந்தியாவிலிருந்து பல அறிஞர்களை அழைத்து ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்கினர். அவர்களில் பிரபல்யமானவர்களாக பிரம்மஸ்ரீ கணபதி ஐயர், திரு.நவநீத கிருஷ்ண பாரதியார், திரு சுந்தரராஜ ஐயங்கார், பிரம்மஸ்ரீ இராமசுவாமி ஐயர் இவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். அம்மையார் அவர்கள் பிரித்தானியாவிலிருந்து சில பெண் ஆங்கில ஆசிரியர்களை அழைத்து இராமநாதன் கல்லூரி சுற்றாடலில் தங்கவைத்து கல்லூரியின் கல்வியில் பெரும் பங்கு வகித்தார்.*

*1930ஆம் ஆண்டிற்குப் பின் தான் வசித்த பெரிய வீட்டை தனது மகள் சிவகாமசுந்தரி நடேசன் வசிப்பதற்கு வழங்கிவிட்டு தனியான ஒரு அறைகட்டி இறக்கும் வரை அவ் அறையில் தனிமையில் வசித்துள்ளார். இராமநாத வள்ளலின் உயிலை சரியான முறையில் சட்டப்பிரகாரம் செயற்படுத்தினார். கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள இராமநாதபுரம் 2000 ஏக்கர் நிலம், கொழும்பு சுஹஸ்தான் கார்டின் வீடு,கோப்பாய் இருபாலையில் உள்ள 200 பரப்பு நிலம் மேலும் பல கோடி பெறுமதியான உடைமைகள் சேர். பொன் இராமநாதன் அறக்கட்டளை நிறுவி அவற்றைக் கையளிப்பதில் முன்னின்று உழைத்துள்ளார். மிகுதியாக இருந்த தனது உடைமைகள் சிலவற்றை பயன்படுத்தி இந்தியா, தமிழ்நாடு, கொடைக்கானல் மலையில் குறிஞ்சி முருகன் ஆலயத்தை கட்டுவித்து அதற்கு சிவாச்சாரியார்களை பூசை செய்ய வகை செய்தார். இன்று இத்திருக்கோவில் மிகவும் பிரபல்யமடைந்து விளங்குகிறது. இராமேஸ்வரத்தில் சேர் பொன் இராமநாதனால் உருவாக்கப்பட்ட மடத்தை அங்கு ஒரு குழுவிடம் கையளித்து அதற்கும் பெரும் நிதியை வழங்கினார். சேர் பொன் இராமநாதனின் முதற் தாரத்தினுடைய பிள்ளைகள் மற்றும் குடும்ப உறுப்பினர்களுக்கு சேர வேண்டிய அனைத்தையும் சேர்ப்பித்து தான் பாரமற்ற*

*சுதந்திரப் பறவையாக வாழ வேண்டுமென வாழ்ந்தார். தனது அருமை மகள் சிவகாம சுந்தரிக்கு பிள்ளை இல்லை என்ற கவலை இவரிற்கு இருந்தது. எனினும் தெளிந்த ஞானம் உடைய அம்மையார் சுந்தரி அவர்களிற்கும் ஆறுதல் கூறி ஓர் பற்றற்ற நிலையை உருவாக்கினார். அம்மையாரின் வாழ்வு மகத்தானது. 50 வயது நிரம்பிய இராமநாதனை மிகக் குறைந்த வயதிலே திருமணம் செய்து தன் வாழ்வை அர்ப்பணித்து வாழ்ந்த வாழ்வு நினைத்துப் பார்க்க முடியாது. மிக வசதியான குடும்பத்தில் வாழ்ந்த இப் பெண்மணி இணுவில் மருதனார் மடம் செம்பாட்டு மண்ணில் 24 மணி நேரமும் பம்பரம் போல் சுழன்று பல்வேறு தூய பணிகளை ஆற்றிவிட்டு அமைதியடைந்துவிட்டார்.*

*அம்மையார் தனது இறுதிக்காலப்பகுதியில் நடை தளர்ந்து சக்கர நாற்காலியில் இராமநாதன் கல்லூரியை வலம் வந்துள்ளார். தனது இறுதி விருப்பத்தை மகள் சிவகாம சுந்தரிக்கும் மருகர் நடேசனுக்கும் வெளிப்படுத்தியுள்ளார்.*

*அம்மையாரின் விருப்பப்படி அவர் மறைந்தபோது இராமநாதேஸ்வர ஆலயத்திற்கு அருகில் அம்மையார் உருவாக்கிய நந்தவனம் அமைந்த வளவில் கிரியைகள் இடம்பெற்றது. சுன்னாகத்தைச் சேர்ந்த சைவக்குருவான மாணிக்க தியாகராஜா ஐயர்அவர்கள் இறுதிக் கிரியைகளை நெறிப்படுத்தியுள்ளார். அன்னாரின் விருப்பத்தை பூர்த்தி செய்யும் வண்ணம் கீரிமலைக் கடற்கரைக்கு உடலைக்கொண்டு சென்று கடலோடு விறகு வைத்து எரித்து முழுச் சாம்பலையும் கடலோடு சேர்த்து விட்டாற் போதும் பின் வேறொன்றும் எனக்கு வேண்டாம். கடல் என் அஸ்தியை அவுஸ்திரேலியா வரை கொண்டு போகட்டும் என வேண்டியுள்ளார். அவரது கூற்றுப்படியே பூ ரதம் உருவாக்கப்பட்டு இராமநாதன் கல்லூரியில் இருந்து அவரது பூதவுடல் ஊர்வலமாக ஆறரை மைல்கள் கொண்டு செல்லப்பட்டு கீரிமலையில் தகனம் செய்யப்பட்டது. மருகர் நடேசன் அவர்கள் கொள்ளிக் கடனைச் செய்தார் என அறியமுடிகிறது.*

*"உற்றாரை யான் வேண்டேன்; ஊர் வேண்டேன்*
*பேர் வேண்டேன்;*
*கற்றாரை யான் வேண்டேன்; கற்பனவும்*
*இனி அமையும்;*
*குற்றாலத்து அமர்ந்துறையும் கூத்தா! உன்*
*குரை கழற்கே*
*கற்றாவின் மனம் போலக் கசிந்து உருக*
*வேண்டுவனே!*

*என்ற கூற்றிற்கு இணங்க இறைவன் திருவடிகள் மட்டுமே முழுமையாக எமக்கு இறுதி என்று தன் வாழ்வை நிறைவு செய்தவர் அம்மையார்.*

*இவர் செய்த பணிகளுக்கு நாம் என்ன கைம்மாறு செய்வோம். தற்போது அம்மையார் இறந்து எழுபத்திரண்டு ஆண்டுகளின் பின் ஓர் நினைவுச் சிலையை இராமநாதன் கல்லூரிச் சமூகம் நிறுவ முன்வந்துள்ளமை பாராட்டிற்குரியது. அந்த வகையில் சிலை நிறுவும் நாளில் கர்ம யோகியாக செயற்பட்ட லேடி இராமநாதனின் தூய பணிகளை எம்*

தலைமுறை அறிவதற்கும் அவரது சேவைகளை ஆவணப்படுத்துவதற்கும் இராமநாதன் கல்லூரியில் ஆரம்பக்கல்வியை கற்ற சிறியேன் முயன்றுள்ளேன். அம்மையார் பற்றிய தகவல்களை தேடுவதில் பல சிரமங்களைச் சந்தித்தேன். போர்ச் சூழலில் இராமநாதன் கல்லூரி ஆவணங்கள் அழிந்துவிட்டன. நூலகம் மிகவும் பாதிக்கப்பட்டு விட்டது. எதையும் பெறமுடியாத நிலை. இந்நிலையில் சில சான்றோர்களின் ஆலோசனையும் கல்லூரியால் வெளியிடப்பட்ட மலர்களும் இந்நூலாக்கத்திற்கு உதவின. நூலகம் பவுண்டேஷன் பல அரிய மலர்களை பாதுகாப்பதனால் அந்நிறுவனத்திலிருந்து பல விடயங்களை பெறக்கூடியதாயிருந்தது. அந்நிறுவனத்திற்கு எனது இதயபூரவமான நன்றிகள் உரித்தாகட்டும். தகவல்களை திரட்டுவதில் எனக்கு உதவிய புதுடில்ல ஆய்வு மாணவனும் யாழ் பல்கலைக்கழக பகுதிநேர விரிவுரையாளருமான திரு.விக்கினேஸ்வரன் மகாசேனன், யாழ்.பல்கலைக்கழக நூலகத்தில் நூலக தகவல் உதவியாளராக பணியாற்றிவரும் திரு. இ. தனஞ்சயன் இருவரிற்கும் என்றும் நான் நன்றி உடையேன். அச்சு ஒப்பு நோக்குதலில் உதவிய திருமதி கேதீஸ்வரி ஆனந்தரட்ணம் ஆசிரியர் அவர்கட்கும் திரு வீ.ஜெயசிங்கம் அவர்களுக்கும் சிறப்பாக அச்சிட்டுதவிய மிக்கி பிறிண்டிங் ஸ்பொஷலிஸ்ற் அச்சகத்தினருக்கும் வாழ்த்துரைகளை வழங்கி சிறப்பித்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தர் முதுபெரும் கல்விமான் பேராசிரியர் இராசரத்தினம் குமாரவடிவேல் அவர்களிற்கும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் ஸ்ரீ சற்குணராஜா அவர்களிற்கும் இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி அம்பிகை சிவஞானம் புகைப்படத் தேடலில் உதவிய எந்திரி ச.சந்தோஷன் மற்றும் எந்திரி திரு மயூரநாதன் அவர்கட்கும் மனம் நிறைந்த நன்றிகள்.

இந்நூலில் தவறவிடப்பட்ட தகவல்களை அறிஞர்கள் தந்து உதவுவார்களானால் அவை மறுபதிப்பில் பதிவு செய்யலாம் என தெரிவித்து அமைகிறேன்.



ஒப்புரவாளர்

**லேடி இராமநாதன்** அவர்களின்

நினைவாக

யா/ இராமநாதன் கல்லூரி அதிபர்

திருமதி **அம்பிகை சிவஞானம்** அவர்களால்

அடிக்கல் நாட்டப்பட்டு


18.12.2025 அன்று நிறுவப்பட்டது.

திரைநீக்கம் செய்தவர் :–


**கலாநிதி ஆறு.திருமுருகன்** அவர்கள்

சிற்பி :–

**க.ஶ்ரீஸ்கந்தமூர்த்தி**



சேர் பொன் இராமநாதன் அவர்களுக்கும் லேடி இராமநாதன் அவர்களுக்கும் ஞானகுருவாக விளங்கியர் அருட்பரானந்தசுவாமிகள் (தஞ்சாவூர்) இப்பெருமகன் இத்தம்பதிகளை தர்மகாரியங்களில் ஈடுபடுமாறு வெளிப்படுத்தினார்.



நல்லூர் தேரடிச் சித்தராகிய செல்லப்பா சுவாமிகளின் அருளாணையைப் பெற்று இரு கல்லூரிகளையும் கட்டுவித்தார்கள். செல்லப்பா சுவாமிகள் வழங்கிய பழைய ஓலை விசிறியை இராமநாதன் தம்பதிகள் தமது நித்திய பூசை வழிபாட்டறையில் வைத்துப் பேணினார்கள்.

திருமதி லேடி இராமநாதன்

(1875-1953)





செல்லாச்சி அம்மாள்



சேர் பென் இராமநாதன்



ஆர்.எல்.ஹரிசன்



இராமநாதனுடன் லேடி இராமநாதன்





லேடி இராமநாதன் தனது கணவர் சேர் பென் இராமநாதனுடனும் ஏக புதல்வி சிவகாமசுந்தரியுடனும் அமர்ந்திருக்கும் காட்சி



லேடி இராமநாதனின் ஓவியம்



மலேசியாவிலிருந்து வருகை தந்து இராமநாதன் கல்லூரியில் கல்வி கற்ற மாணவியொருவர் வரைந்த ஓவியம்



வெளிநாட்டு விஜயத்தின்போது



லேடி இராமநாதனின் புதல்வி சிவகாமசுந்தரி இந்திய, இலங்கை தமிழ் அறிஞர்களுடன் காணப்படுகிறார்

## லேடி இராமநாதன் அவர்கள் வாழ்ந்த இல்லங்கள்



மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள லேடி இராமநாதன் அவர்களின் இல்லம்



கொழும்பில் உள்ள லேடி இராமநாதன் அவர்களின் இல்லம்

## லேடி இராமநாதனின் நேரடி மேற்பார்வையில் கட்டப்பட்ட இரு பாடசாலைகள்



பரமேஸ்வராக் கல்லூரி, திருநெல்வேலி. யழ்ப்பாணம்.



இராமநாதன் கல்லூரி, மருதனார்மடம், இணுவில் சுன்னாகம்.

## லேடி இராமநாதனால் கட்டப்பட்ட இரு ஆலயங்கள்



பார்வதி சமேத பரமேஸ்வரன் ஆலயம், திருநெல்வேலி.




இந்தியா தமிழ்நாடு கொடைக்கானல் குறிஞ்சி முருகன் கோயில்.

**இராமநாதன் மகளிர் கல்லூரி வளாகத்தில் சேர் பொன் இராமநாதனின் சமாதிக்கோயிலை இராமநாதீஸ்வரம் எனும் பெயரில் தனிக் கருங்கற்களால் கட்டுவித்தவர் லேடி இராமநாதன்**

**(1930-1933)**



இராமநாதீஸ்வரம் முதலாவது கும்பாபிஷேகம்



இராமநாதீஸ்வரம் முதலாவது கும்பாபிஷேகம்




இராமநாதீஸ்வரம் தற்போதைய தோற்றம்



இலங்கையில் முதன்முதலாகத் தோற்றம் பெற்ற கலாசாலையின் முதலாவது பட்டமளிப்பு விழாவில் இரண்டு கல்லூரிகளை மிகச்சிறப்பாக நிர்வகிப்பதற்காக அம்மையாரைப் பெருமைப்படுத்தும் வகையில் கௌரவ கலாநிதிப் பட்டத்தை வழங்கிக் கௌரவித்தது.

**கர்மயோகி லேடி இராமநாதனின் இறுதிக்கிரியை**




லேடி இராமநாதனின் மருகரும், தபால்தகவல் அமைச்சருமான திரு. எஸ். நடேசன் கல்லூரி மண்டபத்தில் சைவக்குருக்களுக்கு உதவியாக கிரியைகளில் ஈடுபட்டிருக்கிறார்.




சுன்னாகம் இராமநாதன் கல்லூரியைச் சேர்ந்த உயர்வகுப்பு மாணவிகள் லேடி இராமநாதனின் பூதவுடலுக்கு இறுதி வணக்கம் செலுத்தும் காட்சி.



பூதவுடலைச் சுற்றி நின்று இறுதி அஞ்சலி செலுத்தும் இராமநாதன் கல்லூரி ஆசிரியைகளிடையே திருமதி நடேசனும் காணப்படுகிறார்.



பிரதமரின் சார்பில் சமூகமளித்த ஸ்தலஸ்தாபன அமைச்சர் டாக்டர் ஸி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரா லேடி இராமநாதனின் சமூகசேவைகளை நினைவூட்டும் சொற்பொழிவை நிகழ்த்துகிறார்.



காலஞ்சென்ற லேடி இராமநாதனின் பூதவுடல் வைக்கப்பட்டிருக்கும் இரதம் கல்லூரி மண்டபத்திலிருந்து புறப்படுகிறது.



கீரிமலை கடற்கரையில் அம்மையாரின் விருப்பத்திற்கு அமைய விசேடமாக விறகு அடுக்கப்பட்டு மரகர் சு. நடேசன் அவர்களால் தீ மூட்டப்பட்டு அஸ்தி முழுதும் கீரிமலை கடலில் சேர்க்கப்பட்டது.

# லேடி இராமநாதன் நினைவாலயத் திறப்பு விழா - 20.08.2024





# லேடி இராமநாதனுடனான அனுபவப்பகிர்வு - 1



**திருமதி. செல்லத்துரை கமலாதேவி,**
சிவபூமி முதியோர் இல்லம்

*2010 தை 23 தொடக்கம் இன்றுவரை சிவபூமி நிழலில் சுவாசித்து ஞான வைரவருடைய அருளாலும் "கனம் ஐயா' அவரது அரவணைப்பிலும் வாழும் பேறு கிடைத்தது. நான் காலடி வைத்த அன்றே ஐயா, என்னைக் கேட்டது... "நீங்கள் எந்தப் பாடசாலையில் படித்தீர்கள்? என்பதாகும். அதற்கு என் பதில் "இராமநாதன் கல்லூரி" அதற்கிணங்க, என் அனுபவத்தினை பகிரலாம் என நினைக்கின்றேன்.*

*அந்தவகையில் என் சிறுபராயத்தில் எனது சிறிய தாயார் என்னை பரமேஸ்வரன் ஆலயத்தில் வித்தியாரம்பம் செய்வதற்காக அழைத்துச் சென்று அங்கு அதனை நிறைவேற்றினார்கள். எனது சிறிய தாயார் சேர். பொன். இராமநாதன் காலத்தில் இருந்த ஒரேயொரு பெண் ஆசிரியர் திருமதி. நல்லம்மா தெட்சணாமூர்த்தி (தையல் அக்கா). அவர் விவாகம் ஆகிய நேரம் சேர் பொன் இராமநாதன் ஒரு Broch (தங்கத்தாலானது) இனை வழங்கி ஆசீர்வதித்தார். இதன்போது அவரது பாரியாரும் கூட இருந்தார். அதிபர் Mrs. பிள்ளை இராமநாதன் கல்லூரியில் அதிபராக இருந்த காலத்தில் இராமநாதன் தம்பதிகளின் வழிகாட்டலின் கீழ் கல்லூரி வழிநடாத்தப்பட்டு இருந்தது.*

*சேர் பொன் இராமநாதன் காலமாகியதன் பிற்பாடு திருமதி இராமநாதன் லீலாவதி அவர்கள் சேர் பொன் இராமநாதன் காட்டிய வழியில் நேராக நின்று செயற்படுத்தி வந்தார். அதன்படி கல்லூரியுடன் இணைந்த விடுதியும் காணப்பட்டது. வீட்டிலிருந்து வந்து செல்லும் மாணவர்களும் காணப்பட்டார்கள். பெண் பிள்ளைகளின் ஒழுக்கம் மேம்பட வேண்டும் என்பதற்காக வீட்டிலிருந்து வரும் மாணவர்கள் வீதியில் இறங்கி, கல்லூரிக்கு வருவது தவிர்க்கப்பட்டு கல்லூரிக்கு உள்ளே உள்ள "போட்டிக்கோ" வரையில் வாகனங்கள் மூலம் வந்து இறங்குவதற்கான வசதி செய்து கொடுத்திருந்தார்.*

*இதன் பின்னர் நாற்சார மண்டபத்தில் உள்ள வில்வமரத்தின் கீழ் தேவாரபாராயணம் (Assembly) மற்றும் தேசிய கீதம் என்பன இசைக்கப்படும். இங்குள்ள பெண் பிள்ளைகள் "நமஸ்காரம்" ஒருவருக்கொருவர் கூறுதல் கட்டாயமான ஒன்றாகும். இவர்கள் Assembly இல் மட்டும் தேவாரம் பாடுவதுடன் நின்றுவிடாமல், தங்கள் வகுப்பறைகளில் பாடம் தொடங்கும் முதலும் தேவாரம் பாடுவார்கள். பாடம் முடியும் போதும் தேவாரம் பாடுவார்கள்.*

விடுதியில் உள்ள பிள்ளைகளுக்கு மேல்மாடியில் உள்ள நடராஜர் சிலை உள்ள கோயில் உள்ளது. இதன்போது சரஸ்வதி படத்தினை ஆராதித்து பின் கோயிலுக்கு உள்ளே செல்ல வேண்டும். Pray பண்ணுவதற்கான மணி அடித்தவுடன் பிள்ளைகள் ஒழுங்காக அங்கே செல்வார்கள். கோவில் பணியாளர்கள் என்ற சிறு குழு ஒன்று பிள்ளைகளுக்குள்ளேயே ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும். இங்கு பூப்பறித்தல், மாலை கட்டல், அலங்காரம் செய்தல் என்பவற்றை அவர்களே கோயிலில் செய்வார்கள்.

வகுப்பு முடிந்ததும் தேநீர் இடைவேளை அதன் பிற்பாடு விளையாட்டு நேரம். இவ்வாறாக நேரகால அட்டவணைக்கு ஏற்றபடி ஒழுங்கமைக்கபட்டிருக்கிறது.

Evening → 1.Tea Time →Games Time →Temple Time → Dinner → Study →Secound Study

பெண் பிள்ளைகள் கட்டாயமாக வீபூதிப்பூச்சுடன் பொட்டு வைத்த நெற்றி, ஒற்றை பின்னலுடன் குஞ்சம் கட்டி இருத்தல் வேண்டும். அவர்கள் அணியும் ஆடைகள் வயதைப் பொறுத்து முழுநீட்டு வெள்ளைப்பாவாடை சட்டை மற்றும் பாவாடை தாவணி வெள்ளைச்சேலை அணிந்தும் வருதல் வேண்டும்.

செல்வி.பரமேஸ்வரி சுவாமிநாதன் அவர்கள் சங்கீத ஆசிரியராக கடமையாற்றிய வேளை அனைத்து மாணவர்களுக்கும் கட்டாயமாக ஒருவேளை சங்கீத வகுப்பு நடாத்துமாறு பணிக்கபட்டு அவ்வாறே நிகழ்த்தப்பட்டது. கொக்குவில் குமாரசுவாமி புலவர் அவர்களால் தேவாரவகுப்பு நடாத்தப்பட்டது. தேவாரம், பண், இராகம் என்பவற்றை முறையாக மனதில் பதிய வைக்க வேண்டும் என்பதற்காக அதனை அவர்கள் முறையாக நடாத்தி வந்தனர் வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில், கந்தபுராண கலாசாரத்தை வளர்க்கும் நோக்கில் கந்தபுராண சொற்பொழிவுகள் இடம்பெறும்.

லீலாவதி அம்மையாரின் ஏகபுத்திரி சிவகாமசுந்தரியை பரமேஸ்வரா கல்லூரி அதிபர் சுப்பையா நடேசபிள்ளை (தபால் மந்திரி)அவர்களை மணம் புரிந்து வைத்தனர். இவர்களுக்கும், விடுதியிலுள்ள மாணவர்களுக்கும் சமையல் புரிவதற்காக சமையலாளர்கள் இந்தியாவிலிருந்து வரவழைக்கப்பட்டனர். உணவினை சுவையோடு தயார் செய்து பரிமாறினார்கள்.

தோட்டம் செய்தவற்கேற்ற மண்வளம் கொண்ட பல ஏக்கர் காணிகளிலேயே தமக்குத் தேவையான காய்கறிகள், தேங்காய்கள் என்பவற்றை தயார் செய்தனர். அது மட்டுமன்றி இந்தியா நாட்டில் இருந்து பசுக்களை கொண்டுவந்து பால், தயிர் என்பவற்றைத் தயார் செய்து கொண்டனர்.

மனைப்பொருளியற் கூடம், தையல் பயிற்சி என்பவற்றை ஆரம்பித்து அவற்றைப் பிள்ளைகளுக்கு கற்பித்தார். வீரமணி ஐயா அவர்களினால் பிள்ளைகளிற்கு நடன வகுப்புகள் கற்பித்துக் கொடுக்கப்பட்டது. இவருடன் சண்முகம் பிள்ளை அம்மையாரும் இணைந்து கற்பித்தார்.

# லேடி இராமநாதனுடனான அனுபவப்பகிர்வு - 2



திருமதி. தில்லைராஜேஸ்வரி இராமலிங்கம்

*லேடி இராமநாதன் காலத்தில் இராமநாதன் கல்லூரி விடுதிச்சாலையில் 1926-1931வரை தங்கி இருந்து கற்ற மாணவி திருமதி தில்லைராஜேஸ்வரி இராமலிங்கம் அவர்கள் வழங்கிய சில குறிப்புக்கள்*

*(இப்பழைய மாணவியை இராமநாதன் கல்லூரி நூற்றாண்டு விழாவின் போது நூற்றாண்டு விழாக்குழுவினர் பாடசாலைக்கு அழைத்து இவரை மேடையில் அமர்த்தி பொன்னாடை போர்த்தி கௌரவித்தமை முக்கிய விடயமாகும்.)*

*திருமதி தில்லைராஜேஸ்வரி இராமலிங்கம் ஆகிய யான் யாழ்ப்பாணம் நல்லூரி செட்டித்தெருவில் பிறந்து வளர்ந்தவள். நாங்கள் நல்லூர் செட்டி குடும்பத்தைச் சார்ந்தவர்கள். எங்களது உறவினர்கள் பலர் கொழும்புத்துறையில் உள்ளனர். 05.01.1911ம் ஆண்டு யான் பிறந்தேன். ஆரம்பக் கல்வியை நல்லூரில் உள்ள மிஷனரிப் பாடசாலையில் கற்றேன். பின் எனது உறவினர்கள் மலாயாவில் இருந்தும் பர்மாவில் இருந்தும் யாழ்ப்பாணம் வ ந்து இராமநாதன் கல்லூரியின் விடுதிச் சாலையில் தங்கி கற்றனர். அதனைக் கேள்வியுற்ற எனது பெற்றோர் என்னையும் இராமநாதன் கல்லூ ரி விடுதிச்சாலையில் சேர்த்தனர். நான் மிகவும் பயந்துகொண்டு அழுது அழுது விடுதிச் சாலைக்குச் சென்றேன். லேடி இராமநாதன் அவர்களைச் சந்தித்து, வணங்கி பாடசாலையில் சேர்த்தார்கள். மிகப்பெரிய பாடசாலை இராமநாதன் கல்லூரி. பெரிய விடுதிச்சாலை. விடுதிச் சாலையில் 5 பேரில் இல்லங்கள் இருந்தன. எனது ஞாபகம் நான் ஜானகி இல்லத்தில் சேர்க்கப்பட்டேன். விடுதிச் சாலையில் 4.30 மணிக்கு காலை நித்திரையால் எழும்புவேன். நான் சேர்ந்து கடும் குளிர் காலத்தில் என்னை மறந்து நித்திரை கொண்டேன். மணி அடித்ததும் எனக்கு தெரியாது. மேர்ற்றன் தண்ணீர் தெளித்து என்னை எழுப்பினார். இது விடுதிச்சாலை. வீடல்ல என்று எழுப்பினார். அன்று முதல் இன்று 103 வயதுவரை காலை 4.30 மணிக்கு எழும்பி விடுவேன். 5 மணிக்கு முன்னர் எல்லோரும் நீராடி விடுவோம். எங்கள் கல்லூரியைச் சுற்றி எத்தனையோ விதமான பூமரங்கள் பூத்துக் குலுங்கும். இல்லப் பிள்ளைகள் போட்டி போட்டு மாலை கட்டுவர். 5.30 இற்கு மேல் மாடியில் உள்ள நடேசன் கோவிலில் நாம் அமைதியாக வணங்குவோம். எஜமானர் அவர்களும் லேடி இராமநாதன் அம்மா அவர்களும் வழிபாட்டில் கலந்து கொள்வர். மௌனம் நிலவும். பண்ணோடு தேவாரம் பாடுவார்கள்.*

பூசைப்பாத்திரங்கள் யாவும் பளிச்சிடும். விடுதிச் சாலையில் ஒவ்வொரு குழுவிற்கும் வேலைகள் பகிர்ந்தளிப்பார்கள். அவற்றை நாம் செய்வோம். லேடி இராமநாதன் அம்மையார் தினமும் பாடசாலையைச் சுற்றி பார்வையிடுவார். கழுத்து, கைமுட்ட சட்டை அணிவார். 8 முழசேலை அணிவார். வைரத்தோடு போட்டிருப்பார். கையில் பெரிய மணிக்கூடு போட்டிருப்பார். நான் முதல் முதல் மணிக்கூடு கண்டிருப்பது அவர் கையில். வேக நடை நடப்பார். விளையாட்டுப் போட்டி பயிற்சிகள் நடைபெறும் இடத்தில் தவறாமல் நிற்பார். தினமும் மாலையிலே இருபத்தைந்து ஏக்கர் நிலத்தில் உள்ள பாடசாலை வளவை சுற்றி வருவார். அவருக்கு அருகில் பணியாளர்களும் வருவார்கள். அப்பணியாளர்கள் ஆங்கிலம் நன்றாகப் பேசுவார்கள். பல இடங்களில் மல்லிகைப் பந்தல்கள் இருந்தன. பாடசாலை வளவில் மலர்கள் வாசம் நினைத்தால் இப்பொழுதும் ஆசையாக இருக்கிறது. நாங்கள் லேடி இராமநாதன் அவர்களை Madam என்று வணக்கம் செலுத்துவோம். கொஞ்சம் கொஞ்சம் தமிழ் பேசுவார். எங்களை சுகம் கேட்பார். சாப்பிட்டதா என்று திடீரென்று கேட்பார். சாப்பாட்டின் சுவை பற்றியும் கேட்பார். நாங்கள் எல்லாவற்றிற்கும் நல்லது என்று சொல்வோம்.

அவரது வெள்ளைக்கால்கள் எமது பாடசாலை செம்பாட்டு மண்ணில் தோய்ந்திருக்கும். அதையும் நாங்கள் பார்த்து இரசிப்போம். எமது தோழிகள் எவ்வளவு வசதியான நாட்டில் பிறந்த வெள்ளைக்காரி இங்கு வந்து கஷ்டப்படுகிறார் என்று சம்பாஷணை செய்வர். காலப்போக்கில் எமக்கு அவர் கடவுள் போல காட்சியளித்தார். நான் மிகவும் கெட்டித்தனமாகப் படித்தேன். ஆனால் எமது பெற்றோர் எனது படிப்பைக் குழப்பி திருமணத்தை நிச்சயப்படுத்தினார்கள். நான் விடுதிச் சாலையிலிருந்து விடைபெறும் போது நிறைய அழுதேன். தோழிகளும் அழுதார்கள். வீங்கிய முகத்தோடு லேடி இராமநாதனிடம விடுதியை விட்டு போவதைக் கூறப்போனேன். அவர் மிகவும் கவலைப்பட்டார். படிப்பைக் குழப்புவது எவ்வளவு தவறு என்று என் குடும்பத்தினருக்கு விளக்கம் செய்தார். ஆனால் வீட்டில் எல்லா ஏற்பாடுகளும் செய்துவிட்டனர். என்னோடு படித்த சிலர் மேற்படிப்பிற்கு இந்தியா சென்று பட்டம் பெற்றனர். நான் பெரிய குடும்பகாரியாகி விட்டேன். எனக்கு பதினொரு பூட்டப் பிள்ளைகள் உள்ளனர். யாழ்ப்பாணத்தில் யாருமில்லை. தற்போது நான் சிவபூமி முதியோர் இல்லத்தில் தொல்புரத்தில் வசிக்கின்றேன். இங்கு பல இராமநாதன் கல்லூரி பழைய மாணவர்கள் வசிக்கிறார்கள். நூற்றாண்டு விழாவிற்கு வருமாறு கேட்டிருக்கிறார்கள். எனக்கு ஆசையாக உள்ளது. 102 வயதில் நான் படித்த இராமநாதன் கல்லூரிக்குச் செல்லப் போகிறேன். இப்போது எப்படி எனது விடுதிச் சாலை உள்ளதோ தெரியாது. எல்லாம் சுற்றிப் பார்க்க ஆசை. ஆனால் உடம்பு இயலாது.

மேற்குறித்த வார்த்தைகள் அம்மையாரின் வாய்வழியாகப் பெறப்பட்டது.

மகாத்மா காந்தியின் யாழ்ப்பாண வருகை. இராமநாதன் கல்லூரியில் லேடி இராமநாதன் தலைமையில் காந்தியின் வரவேற்பு நிகழ்ச்சி இடம்பெற்றது. ரூ.1111 பணத்தை காந்தியினுடைய பணிகளுக்காக அம்மையார் வழங்கினார். காந்தியின் சிறப்புரை இடம்பெற்றது. அவ்வுரையினை இங்கு பதிவு செய்கிறேன்.

# Gandhiji Speech at Sir Ramanathan Girls' School

November 29, 1927
From The Hindu, 2.12.1927

It has given me great joy indeed to be able to come here this morning as if to put a finishing touch to the whole round of visits to different scholastic institutions in Jaffna. The exquisite taste and simplicity with which the whole of this ceremony has been arranged this morning, I assure you, has not escaped my observation. I appreciate also the generous purse of Rs.1,111/- which too unlike most purses is given in a khadi bag. To crown all, Lady Ramanathan has placed in my hands a kind telegram from Sir P. Ramanathan who himself is unable to attend this function. I should have always regretted if I had not been able to visit this institution, the monument of Sir Ramanathan's generosity and thoughtfulness. Lady Ramanathan had furnished me very considerately with an advance copy of your address and the report of this institution and two copies of your magazine.

Your promise in your address that you are going to observe this day as an annual function and devote it to collections for khadi work has touched me to the heart. I know that this is no idle promise on your part, but that you are going to fulfil that promise religiously. If the famishing millions on whose behalf I am touring could possibly understand this determination on the part of their sisters, I know it will gladden their hearts, but you will be pained to be informed by me that these dumb millions in whose behalf you have given me this purse and so many purses have been given in Ceylon would not even understand such things, if I attempted to tell them. No description that I can give you of their miserable life can possibly give you a proper perspective of what that position means.

This immediately brings me to the question - what are you to do for these and such people. It is easy enough to suggest a little more simplicity, a little more hardness in life, but that would be merely tinkering with the question. Thoughts and thoughts like this brought me to the spinning- wheel. I said to myself, as I say to you now, that if you could but establish a living link between those famishing

millions and yourselves, there is some hope for you, for them and for the world. Religious instruction you have, and very properly, in this institution. You have got also a beautiful temple. I see from your time-table that you begin the day by offering worship, all of which is good and elevating, but it may easily amount to a beautiful ceremonial and nothing else if that worship is not translated day after day into some practical work. So, I say, in order to follow out that act of worship, take up the spinning-wheel, sit at it for half an hour and think of those millions that I have described to you and say in the name of God: 'I spin for the sake of them'. You will find at once, if you do it with your heart, with knowledge, that you are the humbler and the purer for that real act of devotion. If you will dress not for show, but for covering your limbs, you will certainly not have any hesitation in wearing khadi and establish that bond between you and the millions. This is not all that I want to say to the girls of this institution.

If you will be deserving of the care and attention that Sir Ramanathan has bestowed upon you and that is being bestowed upon you by Lady Ramanathan and the staff working under her care, you will have to do many more things. I saw in your magazines mention made with some degree of pardonable pride of what some of the old schoolgirls had been doing. I saw notices after this style. So and so married so and so - four or five notices. There is, I know, nothing wrong in a girl who has come of age, about 25 or even 22 years old, in getting married. But I miss in these notices a single mention of a girl who had dedicated herself to service only. So, I propose to tell you what I told the girls of His Highness the Maharaja's College for Girls in Bangalore that we get a poor return for the great efforts that are being made by educationists and by layish charities, if you all become mere dolls and disappear from life as soon as you are discharged from such institutions. A vast majority of girls disappear from public life as soon as they are discharged from schools and colleges. You of this institution have no such business. You have the example of Miss Emery and the example of others who have been super- intending, and who have been, if I am not speaking incorrectly, maidens. Every girl, every Indian girl is not born to marry. I can show many girls who are today dedicating themselves to service instead of serving a single man. It is high time that Hindu girls produce or reproduce an edition, and if possible a glorified edition, of Parvati and Sita. You claim to be Saivites. You know what Parvati did. She did not spend money for a husband, nor would she allow herself to be bought, and she today adors the Hindu firmament by being classed with one of the seven satis not because of the degrees in an educational institution that she received, but because of her unheard-of tapasya. Here I understand that there is the fateful system of dowry whereby it becomes most difficult for young women to get suitable matches. The grown-up girls - some of you are grown up are expected to resist all such temptations. If you will resist these evil customs, you will, some of you, have to begin by remaining maidens either for life, or at least for a number of years. Then, when it is time for you to marry, and you feel that you must have a partner in life, you will not be in thirst of one who has money, or fame, or beauty of person, but you will be in search

of one even as Parvati was, one who has got all the matchless qualities which can go to make good character. You know how Naradji described Siva to Parvati - a mere pauper smeared with ashes, no handsomeness about him and a brahmachari; and Parvati said - that is my husband. You won't have several editions of Siva unless some of you will be content to offer tapas, not for thousands of years as Parvati did. We frail human beings cannot afford to do it, but you can do so at least during your lifetime. If you will accept these conditions, you will refuse to disappear in the kingdom of dolls, but will aspire to be satis like Parvati, Damayanti, Sita and Savitri. Then and not till then, in my humble opinion, will you have deserved an institution of this character. May God fire you with this ambition, and if you are inspired, may He help you to realize this ambition.

*The Collected Works of Mahatma Gandhi, Vol XXXV, Ministry of information and broadcasting Government of India, 1969.*

# Letter from Lady R.L. Ramanathan

Ramanathan College
Chunnakam
14th December 1928

Revered Sir,

I trust that your health and that of our dear mother is good. May God keep you from all sorrow! You have both lived in our hearts ever since your brief stay here. The 29th of November was the day on which you both rested beneath our humble roof last year, and this year we celebrated this anniversary of that day and devoted it to you and mother and gathered our mite for the beggin bowl of our Dharidra Narayana. We have so far collected Rs.1200/- but as much people have asked us to wait for another week before sending it. I expect we shall get a little more. We place our offering at your feet. It won't go far amongst those starving millions, but may it be a help to some. At least let it be an expression of our devotion and deep desire to help you in this endless work you have undertaken to do.

With our kindest wishes for the good health of mother and yourself; and the good workers and devotees.

Yours sincerely,
R.L. Ramanathan

# Letter to Lady R. L. Ramanathan[1]

The Ashram,
Sabarmati
December 30, 1928

Dear Friend,

I have your touching letter. It revived all the memories of my visit to your college[2]. The handsome collection made by you should be sent to Sabarmati which I reach about the 6th of January.

Yours sincerely,
Lady Ramanathan,
Ramanathan College,
Chunnakam (Ceylon)

1. Lady R.L. Ramanathan (1875-1953) was born in Australia, married Sir Ponnambalam Ramanathan and devoted herself to women's education; a Theosophist and student of Eastern Philosophy; the 'L' in her name stood for Lilavati.
2. On November 29, 1927. On the anniversary of that event, the college collected Rs.1,200/- to be sent to Gandhiji.

# Letter from Lady R.L. Ramanathan

57 Ward Place Colombo
Ceylon
7th January 1929

Revered Sir,

Your second letter - to me a blessing beyond words reached me today. I am enclosing a Bank Draft for Rs.1560/- which is the amount collected by the Shaiva Mangaiyar Sabai for the anniversary of your visit on 29th November in aid of your Khadi Fund. We forward it with our greetings to you all. Our constant prayer is for your good health and peace, and strength to carrying the load you have taken up. We daily watch for news of you, and read all your words with joy. May our beloved India rise to your ideal. How glad I am that Sarojini Devi[1] has gone forth to help India and the world! How deeply I appreciate Mirabai Devi's[2] devoted work! May God keep them both in health and strength and devotion, and may our service grow to be like theirs.

Yours sincerely,
R.L. Ramanathan

P.S. I return to college on 15th inst. Just now we have vacation.

1. Sarojini Naidu (1879-1949), poet and patriot; President of the Congress 1925; Governor of Uttar Pradesh 1947-1949.
2. Mirabehn.

# Indian Music in Schools

## Lady Ramanathan

Indian music has become very popular in the Schools in Madras. Every Indian School of any standing there has a music teacher on the staff, and the Schools have public demonstrations of their music. These demonstrations have been held annually for five years now. To quote from the last annual demonstration programme.-

“The object of these Annual Demonstrations of Indian music is to bring about a gradual improvement in the standard of performance and a finer appreciation of classical music. By periodically inviting the co-operation of the public and by encouraging healthy emulation among the various schools and by prescribing as much as possible classical pieces for study, this object is being gradually achieved.

“This is the fifth Annual Demonstration of school music contributed by the Indian Schools of Madras. The first event took place on 27th February, 1930, and within this short period the Demonstrations have already proved their utility. They have also helped to emphasize the necessity of including music as a subject in the school curriculum, and of providing a qualified music teacher on the staff of each school. The extent to which music as a school subject can be developed depends very much on the possibilities it provides for group work rather than individual work, and it is this aspect that the organisers of the demonstration are trying to develop at present.

“Each year shows progress in some direction. This year the advance is in the orchestral side. The pieces selected are more ambitious and represent a higher standard of attainment. This has been made possible by the issue of a printed copy of the pieces in sa ri ga ma notation to each performer for individual study and practice. The Orchestra this year consists of 51 instruments. The total number of performers, vocal and instrumental is 167.

“Owing to the keen interest taken and the large number of schools anxious to take part, it has been necessary to limit the demonstration to secondary schools. It is hoped to organize later in the year, a separate demonstration for Elementary schools.”

The programme of the 1935 demonstration consisted of compositions by celebrated composers such as Muthuswami Dikshitar and Tyagaraja, and were rendered very creditably considering the performers were all the school children. They had not the finished grace of Tagore's school, but they had a charm and grace all their own. At the end of the concert, which was held in the Museum Theatre, Lady Marjorie Erskine congratulated the pupils on their performance which she said she had enjoyed and she hoped that all had enjoyed it as much as she had. She also congratulated Prof. P. Sambamoorthi on his excellent organisation of the entertainment, as its success was very largely due to his tireless work, and perseverance in encouraging the schools to participate and leading them as regards their selections. He conducted the performance throughout. Every item was a classical one, and every school had kept to that high level. The instruments used consisted of vinas, tamburs, violins, flutes and a little drum. It was a delight to find that only one school had resorted to the use of the harmonium, on account of which their voices were hard, their music loud, and out of proper tune. Mr. Champion, Director of Public Instruction, in proposing a vote of thanks to Lady Marjorie Erskine, said that the three noteworthy features of the concert were the perfect tonal pitch, the unison of voice and orchestra and the rhythmic modulation of the voice. He had heard Indian music rendered by the girls in schools for the last twenty-five years and would say without hesitation that the music they had that day marked a very great step forward, and he would also say, a revolutionary step forward brought about by the enthusiasm of Prof. Sambamoorthi. The music they heard was of a very high quality. He hoped that the movement started in Madras would spread over the Presidency. The presence of Lady Marjorie Erskine and her appreciative reference would encourage them to go still further and the speaker expressed on behalf of those present their thanks to her.

This Demonstration was indeed a revelation as to what can be done by schools as regards group work and the rendering of the very difficult classical Indian Music. At the close of the performance the whole group of students numbering 167, sang "God Save the King" together in excellent time and tune.

*Ramanathan College Magazine, 1936, Vol.9-No.1*

யாழ்ப்பாணம் சைவ மங்கையர் கழகம் என்ற பெயரில் சமய சமூகப் பணியாற்றுவதற்கு பெண்களுக்கான அமைப்பை முதன் முதலில் தோற்றுவித்தவர் லேடி இராமநாதன். இவ் அமைப்பு பல விழாக்களை யாழ்ப்பாணத்தில் தொடர்ந்து நடாத்தி வந்துள்ளார்கள். மகாத்மா காந்தியின் யாழ்ப்பாண வருகைக்கு இவ் அமைப்பு நிதி சேகரித்து வழங்கியது. இவ் கழகத்தில் பங்குபற்றியவர்கள் சிலர் கொழும்பில் சைவ மங்கையர் கழகம் உருவாக வித்திட்டார்கள். இதன் பெயரில் பாடசாலை ஒன்றும் கொழும்பில் தோற்றுவிக்கப்பட்டது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டபோது சைவ மங்கையர் கழகத்தின் தலைவியாக விளங்கிய திருமதி ரட்ணா நவரத்தினம் அவர்கள் லேடி இராமநாதன் நினைவுப் பேருரையினை நடாத்துவதற்கு உறுதுணை செய்தார். இன்றுவரை நினைவுப் பேருரை தொடர்ந்து நடாத்தப்படுகின்றது.

# லேடி இராமநாதன் அவர்களின் பிரிவிற்குப் பின் பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட முக்கிய குறிப்புக்கள்

# லேடி இராமநாதனின் பூதவுடல் கீரிமலையில் தகனம்

## ஆறுமைல் தூரம் மாணவ மாணவிகளின் கடைசி அஞ்சலி

“இந்த வடஇலங்கைப்பகுதியில் வாழ்ந்த பல பெரியார்கள் மறைந்தபோதெல்லாம் அவ்வப்போது பலரும் அவர்களது நஷ்டத்தைக் குறித்து வருத்தப்படவே செய்தார்கள். ஆனால் யாருமே லேடி ராம னாதனைப்போல ஒரு பெரியாராக இங்கு வாழ்ந்ததில்லை. சிங்கள மக்களுக்கு சேர் ராமனாதனும், லேடி ராமனாதனும் ஆற்றிய அரும்பெரும் சேவைகளை சிங்களமக்கள் என்றைக்குமே மறந்துவிடமாட்டார்கள்” என்று பிரதம மந்திரியின் சார்பில் விசேஷ தனி விமானமொன்றில் இங்குவந்து இன்று நடைபெற்ற காலஞ்சென்ற லேடி ராமனாதனின் தகனக் கிரியைகளில் கலந்துகொண்ட மந்திரி டாக்டர் ஸி.டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கரா கூறினார்.

பொது மக்கள் அவர்களின் கடைசி வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்வதற்காக இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த இராமநாதன் அம்மையாரின் பூதவுடல், சைவாசாரப்படி எல்லா அந்திமக்கிரியைகளும் நடைபெற்றபின் இராமநாதன் சமாதியில் மலர்ச்சிவிகையில் வைத்து பரமேஸ்வரக் கல்லூரி ஆசிரியர்களாலும் மாணவர்களாலும் ஊர்வலமாக இழுத்துச் செல்லப்பட்டது. இராமநாதன் கல்லூரி மாணவிகள் பக்திப் பாடல்கள் பாடிச் சென்றார்கள். ஏராளமான ஆண்களும் பெண்களும் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். மந்திரி திரு. கன்னங்கரா செனட்டர்கள் திரு. ராஜேந்திரா, திரு.கனகநாயகம் ஆகியோருடன் திரு. சிற்றம்பலம் உட்பட பார்லிமென்ட் அங்கத்தவர்களும், இரு யாழ்ப்பாண பிஷப்பாண்டவர்களும், மாகாண அதிபர் பி.ஜே.ஹட்சனும் மற்றும் பல பிரமுகர்களும் கலந்துகொண்டனர். சென்னை முதல் மந்திரி திரு. ராஜகோபாலாச்சாரி, கவர்னர் ஜெனரல் சோல்பரி முதலானோர் அனுதாபச் செய்திகள் அனுப்பியிருந்தனர்.

மந்திரி திரு. கன்னங்கரா மேலும் பேசுகையில் சேர். இராமநாதனின் தீரசேவைகளுக்கு அவரது மனைவியார் அவர்பால் செலுத்திய அன்பும் பிரியமுமே பெரிதும் காரணமாயிருந்தன வென்றும் முதலாவது உலக யுத்தத்தின் போது ஆபத்துகள் நிறைந்த கடற் பிரயாணம் செய்து சிங்கள மக்களுக்கு நேரவிருந்த பெரியதொரு சங்கடத்தை சேர். ராமநாதன் நிவர்த்தி செய்து வைக்க லேடி இராமநாதனே தூண்டுகோலாயிருந்தாரென்றும் கடந்த 40வருஷ காலத்தில் இராமராதன் அம்மையார் அரிய சேவை செய்து வந்தாரென்றும் பாராட்டினார்.

சேர் இராமநாதனின் மருகரும் தபால்மந்திரியுமான திரு. நடேசன் சிதைக்குத் தீமூட்ட தகனம் கீரிமலையில் நடைபெற்றது.

*வீரகேசரி*

# லேடி இராமநாதன் காலமானார்

*இலங்கையின் மாபெரும் தேச பக்தரும் தலைசிறந்த தேசியத் தலைவர்களில் ஒருவரும் காலஞ்சென்ற சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் பாரியாரான லேடி இராமநாதன் அவர்கள் நேற்றுப் பிற்பகல் இரண்டு மணிக்கு சிவபதம் அடைந்தாரென்ற செய்தியை ஆழ்ந்த துக்கத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். லேடி இராமநாதன் அவர்கள் சிலகாலமாகச் சுகவீனமுற்றிருந்தார். சமீபத்தில் யாழ்ப்பாண நகரமண்டபத்தில் நடைபெற்ற சனசமூக நிலையங்கள் மகாநாட்டை ஆரம்பித்துவைத்து ஸ்தலஸ்தாபன அமைச்சர் டாக்டர் ஸி.டபிள்யூ.டபிள்யூ கன்னங்கரா பேசுகையில்கூட லேடி இராமநாதன் அம்மையார் நோய்வாய்ப்பட்டிருத்தலைக் குறிப்பிட்டு அன்னாரின் சேவை களைப்பற்றி எடுத்துரைத்திருந்தார்.*

*லேடி இராமநாதனுக்கு வயது 77 ஆகும்.*

*சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் ஸ்தாபித்த இராமநாதன் கல்லூரியின் நிர்வாகிகள் சபைத் தலைவியாக 1913ம் ஆண்டிலிருந்து இவர் கடமையாற்றினார். இவரது ஒரே புதல்வியான திருமதி நடேசன் தபால் தகவல் அமைச்சரின் பாரியாராவர்.*

*நாளை (திங்கட்கிழமை) ஈமச் சடங்குகள் நடைபெறுமென்று அறியப்படுகிறது.*

*தினகரன். 01.02.1953*

*லேடி இராமநாதனின் இறுதி ஊர்வலம் இராமநாதன் கல்லூரி இராமநாதீஸ்வரம் வாயிலில் இருந்து இணுவில் புகையிரத வீதி ஊடாக ஊர்வலம் ஆரம்பிக்கப்பட்டு கீரிமலை வரை பெருந் தொகையான அன்பர்கள் சூழ சென்றடைந்தது. தேர் போன்ற அமைப்பில் ஊர்தி உருவாக்கப்பட்டு பரமேஸ்வரா மாணவர்கள் ஒரு பக்கமும் இராமநாதன் கல்லூரி மாணவிகள் ஒரு பக்கமும் அத்தேரை கீரிமலை வரை இழுத்துச் சென்றதாக ஆவணங்களில் தெரியவருகின்றது.*

# லேடி இராமநாதன்

**லே**டி இராமநாதன் சிறந்த தேசாபிமானியும் ஈழ நாட்டின் அரசியற் சுதந்திரத்துக்கு அருந்தொண்டாற்றியவரும், மக்கள் மனதில் கீர்த்தியை நிலைநாட்டி மறைந்தவருமான சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் அருமைப் பத்தினியாகிய லீலாவதி இராமநாதன் அவர்கள் கடந்த 31.1.53 ல் காலமான செய்திகேட்ட தமிழகம் துன்பக் கடலுள் ஆழ்ந்தது. மாபெருந் தியாகி இராமநாதன் மறைந்தாரெனினும், அன்னாரின் தியாக வாழ்க்கையையும், சீரிய ஒழுக்கங்களையும் தொடர்ந்து நிலை நாட்டுவான்போன்று, அவுஸ்திரேலியாவிற் பிறந்த ஆங்கில மங்கை இறுதிவரை ஈழநாட்டுக்கு ஈட்டிய நன்மைகளை இரத்தினச் சுருக்கமாகவெனினும் கூறவேண்டியது எமது முக்கிய கடமையாகும்.

லேடி இராமநாதன் அவுஸ்திரேலியாவில் அடலெயிட் எனுமிடத்தில் பிறந்தார். அவர் இளமை தொட்டு சேர். இராமநாதனை மணக்கும் வரையும் செல்வி. ஹரிஸன் என்ற பெயராலழைக்கப்பட்டார்.

1907 ம். ஆண்டில் சேர். இராமநாதனை மணந்த இம்மங்கை கிறிஸ்தவ மதத்தை விட்டு இந்துமதத்தைத் தழுவினார். செவிக்கினிய செந்தமிழைத் தெளிவுறக்கற்று அதன் இனிமையை அனுபவித்த ஆங்கில மாது அவரேயெனல் மிகையாகாது. இராமாயணம் என்னும் தமிழ் நூலைப் பயின்று அதன் சுவையை வெளிநாட்டார்க்கெடுத்து விளக்குமாறு, அதனை எளிய ஆங்கில நடையில் மொழி பெயர்த்த பெருமையை அந்த மாது உலகினுக்கே விட்டுச்சென்றுள்ளார். சேர். இராமநாதன் கல்வித்துறைக்கு ஈட்டிய பணிகள்யாவும் அவரின் படிசொற்தவறாத பத்தினியின் பக்க பலத்தைப் பெற்றன. லேடி இராமநாதனின் சேவைகளைப் பாராட்டுமுகமாக இலங்கைச் சர்வகலாசாலை 1942 ம் ஆண்டில் டாக்டர் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருக்கும் இராமநாதன் கல்லூரியும் பரமேஸ்வரக் கல்லூரியும் இராமநாதன் தம்பதிகள் கல்வி விருத்திக்காகச் செய்த சேவைகளுக்கு அழியாச் சான்றுகளாக மிளிர்கின்றன. லேடி இராமநாதன், திருவாசகம், தேவாரம் முதலிய இந்துமதப் பாடல்களையெல்லாம் மனப்பாடஞ்செய்து நாள்தோறும் பக்தி பரவசத்துடன் அவற்றைப் பாராயணம்பண்ணி வந்தார். சங்கீதம், நடனம் முதலியவற்றில் வெகு பிரியமுள்ள அம்மையார், இராமநாதன் கல்லூரியில் அவற்றுக்கென விசேஷ வகுப்புக்களை நிறுவி அடிக்கடி மேற்பார்வை செய்து திருப்திகொண்டார்.

இறுதிவரை இராமநாதன் கல்லூரியிலேயேயிருந்து, ஆசிரியைகளதும், மாணவிகளதும் மதிப்பைப் பெற்று அவர்களுக்கு ஊக்கமளித்த அன்னையின் மறைவு அநேகரைத் துன்பப்படுத்துகிறது.

அவரின் பூதவுடலைத் தரிசிக்க ஆயிரக்கணக்கான பிரமுகர்களும், சிறுவர் சிறுமியர்களும், பெண்களும், நண்பர்களும் மூன்று நாட்களாக இரவும் பகலும் வந்து குவிந்தவண்ணமிருந்தனர்.

காலஞ்சென்றவரின் ஒரேயொரு புத்திரியும், தபால், தகவல் மந்திரி கௌரவ திரு.சு. நடேசபிள்ளை அவர்களின் மனைவியுமான திருமதி. சிவகாமசுந்தரி நடேசபிள்ளை அவர்களுக்கு எண்ணற்ற மக்கள் தம் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டனர். கல்லூ ரி மாணவர்கள் தேவார, திருவாசகங்களை ஓதியவண்ணம் பூதவுடலின் நாற்புறமும் குழுமி நின்றனர்.

பெப்ருவரி 2 ந் திகதி பல்லாயிரக்கணக்கான மக்கள் மத்தியில் சைவக் குருமார்கள் பலர் கூடி ஈமச்சடங்குகளை முறைப்படி நடத்தினர். லேடி இராமநாதரின் மருகரான மந்திரி நடேசபிள்ளை அவர்கள் இறுதிக் கிரியைகளைச் செய்தார்.

பூதவுடலை நீத்துப் புகழுடம்பை விட்டுச் சென்றுள்ள அம்மையாரின் சார்பாக, அன்னாரின் ஏக புத்திரியான திருமதி. நடேசபிள்ளை அவர்களுக்கும், திரு. நடேசபிள்ளை அவர்களுக்கும் ஏனைய உறவினர்க்கும் எமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*SriLanka 1953 Vol 5 No 3*

## சீமாட்டி இராமநாதன் இவ்வுலக வாழ்வை நீத்தார்

சீமாட்டி இராமநாதன் அவர்கள் இராமநாதன் கல்லூரியிலுள்ள தமதில்லத்தில் சென்ற சனிக்கிழமை இவ்வுலக வாழ்வை நீத்தார். ஈழ மக்களுக்குப் பொதுவாகவும், யாழ்ப்பாண மக்களுக்குச் சிறப்பாகவும் ஆற்றிய தொண்டுகள் மிகப் பல. சேர் இராமநாதனவர்களின் வள்ளன் மைக்கும், அறிவுப் பெருக்கத்துக்கும் வரம்பிலா அன்புக்கும் அறிகுறியாய் விளங்குகின்ற இராமநாதன் கல்லூரி பரமேஸ்வரக் கல்லூரிகளுடன் சிவாலயங்கள் முதலியன சிறப்புறுமாறும் இன்ன பல தொண்டுகள் சிறக்குமாறும் எம்பெருமானது இடப்பாகத்தமைந்த அம்மையாரைப்போலமைந்து அருந்தொண்டாற்றிய இவ்வம்மையார் இராமநாதன் கல்லூரியிலும் கோடைக்கனாவிலும் இவர் அமைத்த சிவாலயங்கள் இவரது சைவ உள்ளச் சிறப்புக்குச் சிறந்த சான்றுகளாகும். சேர் இராமநாதன் அவர்கள் மறைந்த பின்னரும் இத்தொண்டுகளை இவர் செவ்வனே செய்த பெருமை என்றும் போற்றற்பாலது.

இவர் மறைவாலுண்டான குறைவு எவ்வாற்றானும் நிறைந்தற் பாலதன்று. எங்கள் நன்றி இவருக்கு எஞ்ஞான்றும் உரியது. அம்மையாரின் ஏகபுதல்வி ஸ்ரீ சுந்தரி அம்மையார் தளர்வுற்று நிற்ப. நன்மருகனார் மந்திரி திரு. சு.நடேசன் அவர்கள் இவரது உடலுடன் ஊர்வலமாகச் சென்று ஈமக் கிரியைகளைக் கீரிமலையிற் சிறப்புறச்செய்தார். இறைவன் திருவருளால் இவருக்கு ஆன்மசாந்தி கிரியைகள் சிறப்பாக நடைபெற்றது.

*இந்துசாதனம். 03.02.1953*

# லேடி இராமநாதனின் இறுதிக் கிரியைகள்

## அமைச்சர்கள், பிரமுகர்கள் உட்பட ஏராளமானோர் சமுகமளித்தனர்.

*லேடி இராமநாதன் அவர்கள் காலமான செய்தி கிட்டியதும் யாழ்ப்பாணக்குடாநாட்டின் பலபாகங்களிலுமிருந்து அநேகம் பிரமுகர்கள் உட்பட பெரும்பாலும் பெண்களும், சிறுமிகளும் சுன்னாகத்திலுள்ள இராமநாதன் கல்லூரிக்கு சனிக்கிழமையிரவு தொடக்கம் வந்து குவியத்தொடங்கினர்.*

*இந்தக்கல்லூரியில் தான் லேடி இராமநாதனின் பூதவுடல் வைக்கப்பட்டிருந்தது. சனிக்கிழமையிரவும், மறுநாள் முழுவதும் இன்றும் கல்லூரி மாணவர் கோஷ்டிகள் தேவார, திருவாசகம் ஓதிய வண்ணம் பூதவுடலைக் காத்துநின்றனர்.*

*அந்திமக்கிரியைகளுக்கான ஏற்பாடுகள் அனைத்தும் பரமேஸ்வரக்கல்லூரி மாணவர்களாலும் ஆசிரியர் குழுவினாலும் கவனிக்கப்பட்டன. இன்று பிற்பகல் 3 மணிக்கு நாட்டின் பல்வேறு பகுதிகளையும் சேர்ந்த ஏராளமான ஆண்களும், பெண்களும் அடங்கிய பெருங்கூட்டத்தின் முன்பு சைவக்குருமார்கள் பலர் முறைப்படி ஈமச்சடங்குகளை நடத்தினர். தபால், தகவல் அமைச்சரும், காலஞ்சென்ற லேடி இராமநாதனின் மருகருமான திரு எஸ். நடேசன் இறுதிக்கிரியைகளைச் செய்தார்.*

*பிரதமரின் சார்பில் ஸ்தலஸ்தாபன அமைச்சர் டாக்டர் ஸி. டபிள்யூ. டபிள்யூ கன்னங்கர சமுகமளித்து லேடி இராமநாதனின் சேவைகளை நினைவூட்டும் அனுதாபச் சொற்பொழி வொன்றை நிகழ்த்தினார். மற்றும் பல பிரமுகர்களும் அனுதாபச் சொற்பொழிவுகளை நிகழ்த்தினர். கவர்னர் ஜெனரல், பிரதமர், மற்றும் அமைச்சர்கள் சென்னை முதல்அமைச்சர் திரு. இராசகோபாலாச்சாரி ஆகியோரும், மற்றும் பல தலைவர்களும் திரு நடேசனுக்கு அனுதாபச் செய்திகள் அனுப்பியிருந்தனர். பூதவுடல் மாலை ஐந்துமணிக்கு சுன்னாகத்திலிருந்து கொண்டுசெல்லப்பட்டு காங்கேசன்துறை வழியாகக் கீரிமலையை அடைந்தது. கீரிமலையில் தகனக்கிரியை நிகழ்ந்தது.*

*தினகரன். 03.02.1953*

# TRIBUTES TO DR. LADY RAMANATHAN

Portrait Unveiled by
Dr. C. W. W. Kannangara

"I am what I am today due to my long association with the late Sir Ponrambalam Ramanathan" said Sir Waitilingam Duraiswamy, Speaker of the State Council, while presiding at the unveiling of the portrait of Dr. Lady Ramanahan at the Ramanathan College, Chunnakam, on Wednesday the 5th inst. by Dr. C. W. W. Kannangara, Minister of Education and Pro-Chancellor of the University of Ceylon, who, in the course of his speech, asked What would have been the position of higher education in Ceylon to-day had Sir Ponnambalam not lived? What would have been national education in this country if he did not give a start to it thirty years ago among your girls?"

In inviting Dr. Kannangara to unveil the portrait of Dr. Lady Ramanathan, President of the Ramanathan College, presented by the staff and students of the College, Sir Waitilingam said that his association with Sir Ponnambalam and Lady Ramanathan was a long one and he had spent a most pleasant time with them participating in a small measure in the labours they were engaged in. Sir Ponnambalam was a great teacher in every aspect of his life from the highest to the lowest problems of life. He was full of his regard, respect and admiration to Lady Ramanathan who was bearing a heavy burden of the work started by Sir Ponnambalam and was carrying on that stupendous work with joy, courage, pleasure and devotion. Sir Ponnambalam, the speaker continued, came to know Dr. Kananangara in 1923 when the letter entered the Legislative Council and one day told him (the speaker) "Here is a promising young man. His speech is ringing with sincerity". The steaker had keenly watched the Doctor's work as Minister of Education who had admirers as well as opponents and whenever he raised violent criticism he easily overcame them. The speaker had great pleasure in inviting the Minister of Education and Pro chancellor of the University of Ceylon to unveil the portrait of a great personage.

Dr. Kannangara's Address

I regard this pleasant duty today as one of the greatest I have performed in my life. I accepted the invitation with some hesitation as it struck me that some pronouncement would be expected of me on educational matters on an occasion like this and it would be subjected to much criticism. However, I must say something about the baby which is supposed to be of my creation and Which has surprised the world. I know that that report of the Special Committee on Education, although it has raised a lot of interest and opposition, is bound to be accepted. You know the story of the five blind beggars who touched and felt an elephant and described it in different ways without getting a proper conception of what it was because they

were all blind. Let the critics' blindness be cured and they will see what the Report really stands for

While doing the pleasant duty I am entrusted with I must say why I stand here today. It was in 1911 I came to know Sir Ponnambalam Ramanathan first. I had heard and read of him before but it was when he came forward as a candidate for the Educated Ceylonese seat I came to know him more closely and formed the opinion that he was the most educated man in the Island. Again after entering the Legislative Council day by day my admiration grew for that great Ceylonese. As an orator he was not to be touched by any man in the Island. Even in the future he cannot be easily touched. As a philosopher, lawyer and statesman he was in the first rank. In the educational world he occupied a unique position not to be reached by anybody. Just imagine what would have happened to higher education in this country had Sir Ponnambalam not lived. What would Have been national education in this country if he did not give a start to it 30 years ago among your girls?

When Sir Poanambalam asked the Government for a building grant for his two colleges it was a new request, Why did he do it? It was to create a precedent for other schools as well. Besides the Government grant be obtained not a cost of anybody else's money went towards the buildings All his wealth was devoted to the two colleges I understand that he originally wanted to build two Hindu Colleges in Colombo and that it was Lady Ramanathan who by peaceful persuasion made him alter his plans and build in Jaffna. What has she done now? After the demise of her husband she bare the burden herself and has gone through all trials and tribulations. She has really gone through hell to come to this heaven. The girls' college today has over 350 pupils and requires extension. The boys' college also is growing steadily. At national institutions where children are brought up in their own national traditions this is wonderful achievement. It is fortunate that Lady Ramanathan is ably assisted in her work by her daughter and son-in- law. It is time we stopped aping the Westerners. We have aped them too much.

Lady Ramanathan did not come to this country to destroy. She came to build. Generations will bless her. An eternal glory and credit to her educational, social, cultural and religious contribution to this country! What is the meaning of hanging one's portrait on the wall? According to a Sinhalese poet of 1400 A. D. the figure in the portrait always tells you "In prosperity and adversity, in pain and comfort, I am always with you". That figure never turns its back on you. When you look at this portrait Lady Ramanathan's eternal smile will cheer you and comfort you. Those who carry on her work after her will not miss even a hundredth part of her enthusiasm, interact and devotion. Jaffna in particular and the whole Island in general owes her a deep debt of gratitude. May all those who come to this Island professing to do good follow in the foot steps of this noble lady. May here eternal and loving smile always great everybody who steps into this great institution!

Mr. V. K. Nathan, Divisional Inspector of Schools, Miss. R. Chelliah, Inspectress of schools and former Vice-Principal of Ramanathan College, Mr. V. Veerasingam, Principal, Manipay Hindu College, and Mrs. C. N. Deva Rajan, an Old Girl of the college also paid their tributes.

Mrs. N.P. Pillai, Vice Principal proposed a vote of thanks.

*Hindu Organ, 20.04.1944*

# Lady Ramanathan Dead

The death occurred at her residence at Chunnakam on Saturday afternoon of the seventy-seven year-old widow of the late Sir Ponnambalam Ramanathan.

Lady Ramanathan was for many years actively interested in the educational and literary affairs of the country.

As the President of the Boards of Directors of both Ramanathan College for Hindu Girls and Parameshwara College she had rendered a great service to academic education in the Peninsula.

She was also the author of two books entitled "Eastern Pictures for Western Students" and an English version of "Ramayana". She also edited Sir Ponnambalam's commentaries on St. John and St. Matthew In appreciation of her services the University of Ceylon conferred on her the Honorary Doctorate of Laws, a rare distinction.

She has only daughter Mrs. Natesan, wife of the Minister of Posts and Information.

The cremation takes place in the evening at Chunnakam,

*The Ceylon Daily News. 02.02.1953*

# Lady Ramanathan Passes Away

## A Large-Hearted Benefactor

We regret to record the death of Lady Ramanathan which occurred on Saturday last at her residence in Chunnakam.

As President of the Board of Directors of the Ramanathan College for girls from the time of its establishment Lady Ramanathan had evinced an abiding interest in the educational welfare of Hindu girls. After the death of Sir P. Ramanathan she became President of the Board of Directors of Parameshwara College also and contributed to the educational progress of the Peninsula In recognition of her services to the cause of Education the University of Ceylon conferred on her the Honorary Doctorate of Laws.

Apart from her keen interest in educational affairs Lady Ramanathan was also author of Eastern Pictures for Western students' and 'Ramayana' in English.

A Hindu by conviction, Lady Ramanathan successfully continued the great and philanthropic services rendered by Sir Ramanathan, The shrines built by her at Kodaikanal South India and in the premises of the Ramanathan College bear testimony to the fact of her love for the religion of her adoption

Mrs. Suntari Natesan wife of Mr. S. Natesan, Minister of Posts and Information, is her only daughter.

The last rites were performed according to Hindu rites in the presence of a very large and representative gathering consisting of past and present students and staff of Ramanathan College and Parameshwara College and leading citizens of the country.

At 5 p. m. the cortege left the premises of the Ramanathan College to the accompainment of the chanting of prayers and blowing of chanks and reached the Keerimalai crematorium at 9 p. m.

Mr. Natesan set fire to the funeral pyre.

Earlier the Hon. Mr. C. W. W. Kannangara delivered a funeral oration and paid a high tribute to the great qualities of Lady Ramanathan particularly to the convincing manner in which she had continued the noble work of Sir P. Ramanathan to the very letter and spirit of his program of work.

*Hindu Organ, 03.03.1953*

*ஒரு கற்பகதருவாக விளங்கிய இச் சீமாட்டியின் நினைவு இலங்கையில் என்றும் நின்று நிலவுமென்பதற்கு ஐயமின்று*

# நற்பணி செய்த சீமாட்டி

## இராமநாதன் அம்மையார் பிரிவு

*சேர் பொன்னம்பலம் இராமநாதனுக்கு பக்கபலமாக நின்று சோர்வின்றி நாட்டுக்கு பணியாற்றுவதற்கு உற்சாகமூட்டி உறுதுணை புரிந்த பெருமாட்டி டொக்டர் லீலாவதி இராமநாதன் அம்மையார் என்பதை இந்நாட்டு மக்களும் பிறநாட்டினரும் அறிவார்கள். பொதுவாக இலங்கை மக்களுக்கு சிறப்பாகத் தமிழர்களுக்கும் சேர் பொன். இராமநாதன் எவ்வித சேவைகளைச் செய்தாரோ. அவற்றை எல்லாம் அச்சமின்றிச் சிறப்புடன் செய்வதற்கு இராமநாதன் அம்மையார் தூண்டுகோலாக இருந்து வந்துள்ளார். இத்தகைய வீரப்பண்பு வாய்ந்த இலட்சியப் பெண்மணி சென்ற **31-1-53** சனிக்கிழமை பிற்பகல் **2-15** க்குச் சிவபதமடைந்த செய்தியைக் கேட்டு யாழ்ப்பாணம் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்தது. சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் விளங்கும் கல்லூரி இல்லத்தில் அம்மையார் அமைதியாகக் காலமானார். துக்ககரமான இச் செய்தி யாழ்ப்பாணத்தைத் தாண்டி இங்கையின் பல பாகங்களுக்கும் எட்டியதுமன்றி இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் பத்திரிகை மூலம் பரவலாயிற்று. இலங்கைப் பிரதம தேசாதிபதி அனுதாபச் செய்தி அனுப்பியிருந்ததுடன் விசேஷ மலர்வளையமும் அனுப்பியிருந்தார். இலங்கை அமைச்சர்களும் பாராளுமன்றப் பிரதிநிதிகளும் அதிக தொகையினரான பிரமுகர்களும் அனுதாபச் செய்திகள் அனுப்பியிருந்தனர்.*

*சென்னைப் பிரதமர் திரு. வி. இராஜகோபாலச்சாரியார் இராமநாதன் அம்மையாரினதும் அவர் தம் குடும்பத்தினரதும் நண்பராவார்.*

*இராஜாஜி அவர்கள் இந்தியாவின் பிரதம தேசாதிபதியாக டெல்லியிற் பதவி வகித்த காலத்தில் இராமநாதன் அம்மையார் இராஜாஜியின் விருந்தினராக டெல்லியில் ஒரு சமயம் தங்கியிருந்தார். அம்மையாரின் பிரிவைக்கேட்டு*

*அம்மையாரின் மருகரான தபால்-செய்தி அமைச்சர் கௌரவ சு.நடேசபிள்ளை அவர்களுக்கு அனுப்பிய அனுதாபச் செய்தி அனைவருக்கும் ஆறுதல் அளிப்பதாகவிருக்கினறது. அச் செய்தி வருமாறு*

*"....அம்மையாரின் பிரிவுச் செய்தி கேட்டுப்பெருந்துயர் அடைகின்றேன். அன்னாரின் அரிய ஆத்துமா இறைவனடி எய்திவிட்டது. நாங்கள் துயருறுகின்றோம். ஆனால் அம்மையார் இறைவனின் ஆசியைப் பெற்றுவிட்டார்....*

*"ஒரு நண்பரை இழந்துவிட்டேன்" என அண்ணாமலைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராகச் சமீபத்தில் பதவியேற்ற டொக்டர் ஸி.பி. இராமசுவாமி ஐயர் அவர்கள் மனமுருகித் தமது அனுதாபத்தைத் தெரிவித்திருந்தார். இப்போது புதுடில்லியிலுள்ள கௌரவ கிரி அவர்களும் வேறும் பல பிரமுகர்களும் அனுதாபச்செய்திகள்*

*அனுப்பியுள்ளனர். செட்டிநாட்டரசர் இராஜா சேர் முத்தையாச் செட்டியார் அவர்கள் விமான மார்க்கமாக மலர் வளையம் அனுப்பியிருந்தார்கள். அம்மையாரின் பூதவுடலைத் தரிசித்துத் தங்கள் மரியாதையைத் தெரிவிப்பதற்காகச் சென்ற சனிக்கிழமை மாலை தொடக்கம் திங்கட்கிழமை வரையும் ஆண்களும் பெண்களும் மாணவரும் மாணவிகளும் நாட்டின் பலபாகங்களிலுமுள்ள பிரமுகர்களும் இராமநாதன் கல்லூரிக்கு வருவதும் போவதுமாகவே இருந்தனர். அன்னாரின் பூதவுடல் அழகுற அமைக்கப்பட்ட பேழையில் வைக்கப்பட்டிருந்தது. பேழை வைக்கப்பட்டிருந்த இடம் மலர் மாலைகளினாலும் மலர் வளையங்களினாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. இராமநாதன் கல்லூரி மாணவிகளும் பரமேஸ்வராக் கல்லூரி மாணவர்களும் ஆசிரியர்களும் அன்பர்களும் அமைதியாகவிருந்து தேவார திருவாசகங்களை ஓதினர்.*

*திங்கட்கிழமை (2.2.53) பிற்பகல் 3 மணிக்கு இறுதிச் சடங்குகள் சைவாசாரப்படி ஆரம்பமாயின. அம்மையாரின் புத்திரி சிவகாமசுந்தரி நடேசன் அவர்களும் மருகரான அமைச்சர் கௌரவ சு. நடேசன் அவர்களும் அருகிலிருந்து இறுதிச் சடங்குகளை நிறைவேற்றினர். தொகையான மக்கள் சூழ்ந்து இருந்து இராமநாதன் அம்மையாருக்குத் தங்கள் மரியாதையைத் தெரிவித்துக்கொண்டனர். இலங்கைப் பிரதமர் கௌரவ டட்லி சேனநாயக்கா அவர்களின் சார்பில் அமைச்சர் கௌரவ ஸி.டபிள்யூ.டபிள்யூ. கன்னங்கரா அவர்கள் கொழும்பிலிருந்து விசேட விமானத்தில் வந்து இராமநாதன் அம்மையாரின் தேசப்பணிகளை நினைவூட்டி அபிமானத்துடன் பேசினார். அவர் கூறியதாவது:*

*'இராமநாதன் அம்மையாரின் இலட்சிய வாழ்க்கை எம்மனைவருக்கும் முன்மாதிரியானதொன்று. சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள் சிங்கள மக்களுக்கு ஆற்றிய அரும்பணிகளை நாங்கள் ஒருபோதும் மறக்கமாட்டோம். முதலாவது யுத்தத்தின்போது சிங்கள மக்களுக்கு உண்டான ஆபத்தை நீககுவதற்காகச் சேர் இராமநாதன் யுத்தகால அபாயங்களையும் பொருட்படுத்தாது அலைகடலைத் தாண்டி இலண்டன் சென்றார். இப்பெரும் பணியில் சேர் இராமநாதனை ஈடுபடச் செய்தவர் இராமநாதன் அம்மையாரேயாவர். சிங்கள மக்களுக்கு மாத்திரமன்றித் தமிழர்களுக்கும் சேர் இராமநாதன் சேவை செய்துள்ளார். இப்பணிகளில் எல்லாம் பங்கெடுத்துத் தமது கணவனுக்குப் பெருமை தேடிக்கொடுத்த அம்மையார் நாட்டின் கல்வித்துறையிலும் சமூக வாழ்விலும் சலியாது உழைத்துவந்தார். அவரைத் தக்கவாறு அரசினரும் இலங்கைப் பல்கலைக்கழகத்தினரும் கௌரவித்துள்ள னர். ஒரு கற்பகதருவாக விளங்கிய இச் சீமாட்டியின் நினைவு இலங்கையில் எனறும் நின்று நிலவு மென்பதற்கு ஐயமின்று."*

*பல்வேறு அரசியற் தலைவர்களும் சமய குரவர்களும் சாதி மத பேதமின்றித் தமது இறுதி மரியாதையைத் தெரிவித்தனர். அம்மையாரின் சடலம் அழகாக அலங்கரிக்கப்பட்ட வெள்ளை இரதத்தில் கீரிமலைக்கு ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்டது. வழி நெடுகிலும் மக்கள் கூடி நின்று அம்மையாரின் இறுதி ஊர்வலத்திற் பங்குபற்றினர். யாழ்ப்பாணக் கல்லூரிகளின் சாரணர்களும் அணிவகுத்துச்சென்றனர். சங்கு சேகண்டிகளின் சப்தமும் தமிழ் வேத பாராயண ஒலியும் உள்ளத்தை உருக்குவனவாயிருந்தன. ஊர்வலம் இரவு 9 மணிக்குக் கீரிமலையைச் சென்றடைந்தது. ஈமச் சடங்குகள் அம்மையாரின் மருமகன் அமைச்சர் நடேசன் அவர்களாற் செய்யப்பட்டன.*

யாழ்ப்பாணம் நடன கலாசாலையினர் இராமநாத அம்மையாரின் பிரிவாற்றாமையைக் குறிதது்ப் பாடிய ஆத்மசாந்திப் பிரார்த்தனைப் பாக்களை நடனகலாசாலை மாணவிகள் பாடினர்.

இராமநாதஅம்மையார் அவுஸ்திரேலியாவிலுள்ள அடிலேட் என்ற நகரில் 1879ற் பிறந்தார். தந்தையாரின் பெயர் திரு.ஹரிசன். பிரம்மஞானத்துறையில் ஆர்வமுள்ள அம்மையார் கீழ்நாடுகளிற்கு பிரயாணம் செய்தார். சேர் பொன். இராமநாதனை அக்காலத்திற் சந்தித்து சைவ சமயத்தைத் தழுவி 1907ம் ஆண்டில் அவரை மணஞ் செய்தார். அன்றுதொட்டு இறுதிவரையும் சைவத்திற்கும் கல்விக்கும் பணியாற்றிவந்தார். இராமநாதன் கல்லூரியினதும் பரமேசுவரக் சல்லூரியினதும் அதிபராகவும் விளங்கிவந்தார். பண்புமிக்க இவ்வம்மையார் பல நூல்களை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். இராமாயணம், பரிலூக்காவின் சுவிசேஷம் என்பன மிக உயர்வான நூல்களாகும். நாட்டின் அபிவிருத்தியில் முக்கிய பங்கெடுத்துப் பணியாற்றிய அம்மையார் தமிழ்ப் பெண்களின் கல்வி விஷயத்தில் விசேட சிரத்தையெடுத்து வந்தார். சைவ மதப்பற்று இவருக்கு மிகுதியும் உண்டு. சுன்னாகத்தில் இராமநாதன்கல்லூரியில் இராமநாதாலயத்தையும், கோடைக்கானலிற் குறிஞ்சி ஆண்டவர் கோயிலையும் அமைத்துள்ளார். திருமதி சிவகாமசுந்தரி நடேசன் அவர்கள் அம்மையாரின் ஒரே புத்திரியாவர். இறக்கும்போது இவருக்கு வயது 77. இலங்கை மக்கள் அம்மையாரின் சேவைகளை ஒருபோதும் மறக்கவே மாட்டார்கள்.

ஈழகேசரி. 08.02.1953

# லேடி இராமநாதன் காலமானார்

இலங்கையின் மாபெருந் தலைவர்களில் ஒருவராக விளங்கியிருந்து காலஞ் சென்ற சேர் பொன்னம்பலம் இராமநாதன் அவர்களின் பாரியாரான லேடி இராமநாதன் அவர்கள் சென்ற சனிக்கிழமை பிற்பகல் சுன்னாகத்திலுள்ள “கல்லூரி மனை” என்ற இல்லத்தில் காலஞ்செல்லலாயினார். மரிக்கும்போது இவருக்கு வயது 77. இவர் ஆஸ்திரேலியாவிலே அடெலெயிட் நகரில் 1879ம் ஆண்டு பிறந்தார். 1907ம் ஆண்டு சேர் இராமநாதன் அவர்களை இவர் விவாகஞ்செய்து கொண்டார். இவரின் ஏகபுதல்வியான சிவகாமசுந்தரி தற்போது தபால் - தகவல் மந்திரியாராய் இருந்து வருகின்ற திரு.எஸ். நடேசன் அவர்களை விவாகஞ்செய்துள்ளார்.

சத்தியவேத பாதுகாவலன் 03.02.1953

சேர். பொன். இராமநாதன் விடுமுறைக் காலத்தில் தமிழ்நாடு கொடைக்கானல் மலைப்பகுதியில் தம்பதியினராக தங்குவது வழக்கம். அந்த மலையில் சிறிய குறிஞ்சிக் குமரன் கோயிலை தம்பதிகள் தரிசிப்பது வழக்கம். அந்த மலைப்பகுதியில் இருந்து பழனி மலையை தரிசிக்கலாம். ஒருமுறை வானத்தில் புகார்கள் அதிகமாக இருந்ததால் பழனி மலையை தரிசிக்க முடியவில்லை. லேடி இராமநாதனின் கனவில் நான் இங்கே நிறைவாக இருக்கின்றேன் என முருகனை கனவில் தரிசித்தார். கொடைக்கானல் குறிஞ்சிக்குமரனுக்கு பெரும் கோயில் கட்டவேண்டும் என்ற ஆசை பொன். இராமநாதனுக்கும், லேடி இராமநாதனுக்கும் ஏற்பட்டது. அவ் எண்ணம் ஏற்பட முன் இராமநாதன் காலமானார். லேடி இராமநாதன், சேர் பொன் இராமநாதனின் மறைவுக்குப் பின் தனது பெறுமதி மிக்க ஆபரணங்கள் வைர நகைகள் அனைத்தையும் விற்று கொடைக்கானல் கோயிலை அழகாகக் கட்டி முடித்தார். இவ் ஆலயம் பிற்காலத்தில் பழனி ஆலய நிர்வாகத்திடம் சு. நடேசபிள்ளை அவர்களின் உறவினர்கள் ஒப்படைத்ததாக அறியமுடிகின்றது.

# லேடி இராமநாதனைப் பற்றிய நினைவுக் குறிப்புக்கள்

# LADY RAMANATHAN

*"We shall be failing in our duty, if we do not pay our tribute to the noble lady who was Ramanathan's partner in his late, life, who shared all his joys and sorrows. She was born in a country thousands of miles away; nevertheless, she has dedicated her life to the service of a society quite different from the one in the land of her birth."*

*C. Coomaraswamy*
*High Commissioner for Ceylon in India*

When Ramanathan was Solicitor-General, there came into his life a woman of great culture and refinement, of singular charm of character and person, who was destined to be one of the most potent influences both upon his intellectual and spiritual development and upon his whole subsequent career. She was no other than Miss R. L. Harrison who later became Lady Ramanathan. Her father was an Englishman of high birth and considerable fortune from Bradford in Yorkshire who, impelled by the lure of gold and adventure, emigrated to Australia in the middle of the 19th century and opened up gold mines there.

The comparative study of religion and the search for spiritual truths was a passion of her early life. For a time she came under the spell of the Theosophical Movement in Australia but could find little in it to allay her spiritual thirst. She had heard of high-souled saints and master- spirits of religion living in India and Ceylon, who could lead her to a Knowledge of Reality and was determined to seek them out and learn at their feet.

The quest brought her to Ramanathan who, at this time, combined with his official duties a comparative study of religion and the pursuit of Truth. She knew she had found her Guru, her Master and would not depart from him until she had achieved her life's purpose. Ramanathan made her a disciple of his and expounded to her the mysteries of religion and guided her in the path of spiritual enlightenment. She renounced all ties of home and country and strove at his feet to solve the manifold questions of life and religion.

Ramanathan chose the Bible for his first text of religious exposition to her, as it was the one with which she was most familiar. His expositions of the Gospels were subsequently collected and edited by her in two substantial volumes under the title The Commentaries of St. Mathew and St. John' and won international renown. Under his guidance, she took to an enthusiastic study of the Hindu classics and became in her own right an authority on Hindu religion and philosophy. She became enamoured of Tamil and Sanskrit learning and translated many classics into superb English prose for the benefit of Western readers. Amidst the multitudinous labours of a very crowded and tumultuous life, Ramanathan found in her a true friend, an intelligent companion, an able collaborator in his many-sided intellectual and spiritual activity and an unfailing source of inspiration and refreshment to him.

When he proceeded to America on his lecture tour, she accompanied him as his Private-Secretary and was in no small measure responsible for its spectacular success. The Book, Western Pictures for Eastern Students', an elaborate account of his American lecture-tour, was mainly the fruit of her labours. In 1906 when Ramanathan visited England, on his return from America, he felt that the selfless and devoted labours of a woman who had stood by him through the many vicissitudes of an arduous life should not go unrewarded. Being then a widower, he made her his second wife and registered their marriage there. It would be impossible to exaggerate the importance of her contribution to his subsequent success and renown.

In her Ramanathan found a lady of latent intellectual and spiritual power, endowed with a passion for selfless service and philosophic learning, just the sort of woman Ramanathan sorely needed, the sort of woman that fosters genius and fashions greatness, just the sort that one could take into active partnership in the multitudinous labours of a very versatile and dedicated life. To say that she, though heir to an alien culture and an alien upbringing, in every way exemplified the noblest traditions of Hindu womanhood by un- questioning obedience to her lord's will, by perfect trust in and passionate adoration of him, by cheerful and complete subordination of her personal comforts to his is not to be guilty of an overstatement. His happiness, his comfort, his peace of mind was her supreme concern. She fulfilled his wishes with scrupulous attention to detail both when he was alive and after he was dead, never pausing to consider whether the wish accorded with hers. "My Master willed it," she would say, 'and therefore it must be done."

And the husband was far too exacting. This man whose chief cause of complaint against his first wife was that she was out of sympathy with him and could not rise to the level of his higher aspirations nor provide that intellectual and spiritual companionship which great minds generally long for in their women, was equally severe with the second. The truth of it was that Ramanathan, though alive to the subtle charm of a woman's personality, was never its victim. invariable complaint of his first wife was that he never gave any of his time to her nor indulged her with any of those blandishments, that good-natured and loving gaiety, that convivial converse so dear to the heart of every woman and makes her his captive. Absorbed in his work he would forget to tell her in advance what his movements would be, whither he intended to travel, but she could, as if by some intuitive impulse, divine them and make all preparations for them. Whenever he made a train journey, the noble lady would be the first to enter the train compartment, dust and clean his seat, personally provide for every detail of his comfort on the journey and, when the husband was comfortably seated and the train steamed out, return home content.

He would go on working at his desk far into the day and night completely oblivious of food and drink and would brook no interference. If she asked him for lunch or dinner, he would up- braid her for interrupting him. Knowing this side of his nature, she would gently steal into his presence, employ all the arts that only a

knows of ingratiating herself with cautiously cajole him into conversation on the subject that preoccupied him and then let slip a mild suggestion that it would be wise to have a hurried meal and resume.

She played host to his numerous friends who came to him from far and near, supervised his large retinue of servants, managed his extensive estates and farms and did a host of other things in a supreme endeavour to free him from the many anxieties and worries which are generally the portion of men in high places. She was a vegetarian ever since she came under his influence and remained so to the end of life. In her last days, when in the grip of a dire illness that finally ended her, the doctors advised her to take liver extract, she stubbornly refused to do so. Ramanathan loved her dearly as became a good husband and held her in high esteem to the end of his days. Their only daughter: Sivagamasundari was married to S. Natesapillai, scholar, educationist, historian and politician.

How came it that Natesapillai became a member of the Ramanathan family. As has already been observed, he was the lineal descendant of Swami Arulparananda Dhesikar, Ramanathan's revered Guru and admittedly the most vitalizing and transforming influence on his whole life. Prompted by the tradition of enduring friendship, conscious of the love and veneration the children of Ponnambala Mudaliyar had for his saintly ancestor, the accomplished youth on the threshold of a bright career at the Indian Bar, met Ramanathan at his summer-residence at Kodai Kanal in S. India. The veteran statesman was apparently impressed by the youth's scholarship and charming presence. In the course of a prolonged conversation, Natesapillai told his interlocutor that he was a professional lawyer. Ramanathan said, 'Law is meant to be studied but not practised. Why don't you do something nobler than that?" Strange commentary from the immortals of the trade! The masterful personality of the great statesman and jurist prevailed and the youth accepted an appointment to the staff of Parameshvara College. The new find, in addition to being a votary of the legal art, was also a scholar of great erudition, particularly in the realm of Oriental learning. Whenever Ramanathan addressed learned audiences in Tamil, it was his practice to have the scholarly youth at his side. He would quote profusely from the Tamil classics and, if on occasions his aged memory betrayed any he would call upon the youth to fill them up and it was unfailingly done. Natesapillai helped Ramanathan immensely in the many literary and philosophical works the latter accomplished in Tamil. As Principal of Parameshvara College for many years, he left the imprint of his personality on it.

Lady Ramanathan's wide scholarship and her untiring labours in the cause of women's education received recognition when the University of Ceylon conferred on her the Doctorate of Laws, honoris causa.

She died in 1953 full of years and honour mourned by the people whom she loved so well, whom she served for half a century with surprising loyalty and devotion.

*M.Vythilingam, The Life of Sir Ponnambalam Ramanathan, 1971*

# லீலாவதி இராமநாதன் பெருமாட்டி

**சே**ர் பொன்னம்பலம் இராமநாதன் சிறந்த அரசியல் வாதியாகவும், கல்விமானாகவும், சமயப்பற்றுள்ளவராக வும், கலை கலாசாரத்தைப் பேணி வளர்ப்பவராகவும் விளங்குவதற்கு மனையறத்தின் வேரனையராக விளங்கியவர், பெருமாட்டி லீலாவதி இராமநாதன் ஆவர். அவருடைய உயர்ந்த இலட்சியங்களும் கொள்கைகளும் அவருடைய துணைவியாரால் நிறைவுபெற்றன. ஒருவர் புகழுடனும், சகல சிறப்புகளுடனும் விளங்குவதற்கு மாண்புமிக்க இல்லாள் காரணம் என்றால் மிகையில்லை. ஒரு நாட்டிற் பிறந்து வேறு ஒரு நாட்டில் வளர்ந்து இறுதியாக இலங்கை வாழ் சைவமக்களுடைய முன்னேற்றத்துக்காகப் பணியாற்றிய பெருமை அம்மையாருக்குரியது.

இங்கிலாந்தில் யோக்சயர் என்ற இடத்தைச் சேர்ந்த செல்வி R.L. ஹரிசனுடைய முன்னோர், 19-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் அவுஸ்திரேலியாவிற் குடியேறி வாழ்ந்தனர். அவருடைய பெற்றோர் மிகவும் உயர்ந்த பண்பாடும் செல்வச் சிறப்பும் மிக்கவர்கள். செல்வி சு.டு. ஹரிசன் அவர்களுக்குப் பொருட்செல்வத்திலும் பார்க்க அருட்செல்வத்தில் அதிக நாட்டம் இருந்தது. சமயத்தை ஒப்பீட்டு முறையில் ஆராய்ந்து, உண்மையை அறியும் ஆர்வத்தால் ஞானிகளைத் தேடி, கீழைத்தேசங்களுக்கு வந்த செல்வி R. L. ஹரிசன், சேர். பொன். இராமநாதனைச் சந்தித்தார். சேர் பொன்.இராமநாதனிடம் குரு சிஷ்ய முறையிற் சமயத்தைக் கற்க ஆரம்பித்து, முதலிலே விவிலிய நூலை ஆராய்ந்து சில நூல்களை வெளியிட்டார். வழமையாக மேற்கு நாட்டவர்களைக் கவரும் இந்து தத்துவம், சமய இலக்கியம், வடமொழி என்பன இவரையும் கவர்ந்ததில் வியப்பில்லை. நமது இந்துசமயக் கோட்பாடுகளைப் பிறநாட்டவர் போற்றிக் கைக்கொள்ளும் வண்ணம் சமய இலக்கியங்களை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார்.

செல்வி சு.டு. ஹரிசனுடைய அறிவு, ஆற்றல், காரணமாக சேர். பொன்.இராமநாதன், அம்மையாரைத் தமது அந்தரங்கச் செயலாளராக நியமித்தார். சேர் பொன். இராமநாதன் அவர்கள் சமயச் சொற்பொழிவாற்ற அமெரிக்கா சென்றபொழுது அவரும் உடன் சென்று, செயலாளர் என்ற நிலையில் வெற்றியும் புகழும் ஏற்படப் பெரிதும் முயன்றார், அமெரிக்காவிலிருந்து திரும்பியபின் சேர் பொன். இராமநாதன் செவ்வி சு. டு.ஹரிசனைத் திருமணஞ் செய்தார். இனத்தால் மதத்தால், மொழியால் வேறுபட்ட செல்வி சு. டு ஹரிசன் சைவப்பெண்மணியாக, எல்லோருக்கும் ஒரு முன்மாதிரியாக விளங்கித் தமது கணவனுடைய கோட்பாடுகளை மிகநுணுக்கமாகப் பின்பற்றி வாழ்ந்தார். அன்பு, பணிவு கடமையுணர்வு, பொறுப்புணர்ச்சி என்பன அவரிடம் காணப்பட்ட சிறப்பியல்புகளாகும். சேர்.பொன். இராமநாதனின் பாரிய திட்டங்களைச் செயற்படுத்துவதிலும், கல்வி நிலையங்களை நிர்வகிப்பதிலும், விருந்தினரை உபசரிப்பதிலும், கலைகளை வளர்ப்பதிலும் மக்களை அன்பாகவும் பண்பாகவும் நடத்துவதிலும் இவர் நிகரற்று விளங்கினார்.

சேர் பொன். இராமதாதனால் 1924-ம் ஆண்டு தொடக்கப்பெற்ற சைவ மங்கையர் சபையின் தலைவராக அவர் ஆற்றிய பணிகள் அளப்பில. சைவப் பெண்களுடைய உயர்ச்சிக்காக அமைக்கப்பட்ட இச்சபை இன்றுவரை நற்பணி ஆற்றிவருவது வரவேற்கத்தக்கது. லேடி இராமநாதனுடைய பலதரப்பட்ட பணிகளைப் பாராட்டி

அவருக்கு இலங்கைப் பல்கலைக்கழகம் கலாநிதிப்பட்டம் வழங்கிக் கௌரவித்தது. அன்னாருடைய பணிகளை நினைவுபடுத்துமுகமாக சைவ மங்கையர் சபையினர் இரு அறக்கட்டளைகளை நிறுவியுள்ளனர். இந்து நாகரிகத்தில் முதுகலைமாணி, கலாநிதிப் பட்டங்கள் பெறுவதற்குத் திறமை அடிப்படையில் ஒரு புலமைப் பரிசில் வழங்கப்படுகின்றது. மேலும் வருடந்தோறும் இந்து நாகரிகம், சமய தத்துவம், கலை, கலாசாரம் ஆகியதுறைகளில் ஒரு நினைவுப் பேருரை நடைபெற நடவடிக்கை எடுத்துள்ளது. இந் நினைவுப் பேருரை 1981-ம் ஆண்டில், பேராசிரியர் கலாநிதி பா. நடராஜன் அவர்களாலும், 1984-ம் ஆண்டில்,பேராசிரியர் வ. அய். சுப்பிரமணியம் அவர்களாலும், 1985- ம் ஆண்டில் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்கள் அவர்களாலும் நிகழ்த்தப்பட்டது. பெருமாட்டி லீலாவதி இராமநாதன் நினைவுப்பேருரை நடைபெறச் சைவமங்கையர் சபைத் தலைவர் திருமதி இரத்தினா நவரத்தினம் அவர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கை என்றும் பாராட்டப் படவேண்டிய தொன்றாகும்.

*லீலாவதி இராமநாதன் பெருமாட்டி நினைவுப்பேருரை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1986*

வாய்மைநிறை கற்பிலருந் ததியுமுயர் கல்வியில் வெண்
மலர்வாழ் மாதுஞ்
சேய்மையுறு புகழ்குணத்தி லன்பினில்வா சுகியுமெனச்
சிறந்து வாழும்
தூய்மையுறு மம்மைலீலாவதியா நன்மனைசேய்
சுற்றத் தோடும்
வாய்மைபுகல் பெருவள்ளால் பல்லாண்டு நீடூழி
வாழி வாழி!

- புலவர் அரசன் சண்முகனார்

# பெருமாட்டி லீலாவதி இராமநாதன்

**திருமதி.மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்**
*விரிவுரையாளர், ஆசிரியகலாசாலை, கோப்பாய்*

*இலங்கையிலே தலைசிறந்த அரசியல்வாதியும், கல்விமானும் சமயத் தொண்டனுமாக விளங்கிய சேர். பொன் இராமநாதனின் கல்விப் பணியை எடுத்துக்காட்டும் அழியாச் சின்னம் இராமநாதன் கல்லூரியாகும். பெண்கள் தமிழ்ப் பண்பாட்டையும். சமய மரபையும் பேணிக் குருசிஷ்ய முறையில் கல்வி கற்று பெண்ணினத்தின் பெருமையை உலகுக்கு உணர்த்த வேண்டும் என்ற உயர் நோக்குடன் 1913ம் ஆண்டு தாபித்தார். கல்லூரியை நல்ல முறையில் தனது நேரடி நிர்வாகத்தின் கீழ் வளர்ச்சியடையச் செய்தது மட்டுமல்ல அதன் பல்துறை வளர்ச்சிக்கு பல திட்டங்களை வகுத்துச் செயலாற்றினார். சேர். பொன். இராமநாதனின் மறைவுக்குப் பின் அன்னார் வழி நின்று பணியாற்றியவர்கள் லேடி லீலாவதி இராமநாதனும், நடேசபிள்ளை தம்பதிகளுமாவர்.*

*லேடி லீலாவதி இராமநாதன் தோற்றத்தாலும் பண்பாலும் தமிழ்ப் பெண்களுக்கு ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினார். நெற்றியிலே திருநீறு தரித்து, கழுத்திலே உருத்திராக்கம் அணிந்து. மெல்லிய மஞ்சள் ஆடையுடன் அவர் எந்நேரமும் காட்சிய யளிப்பார். அடக்கமான தோற்றம் அமைதியான அதே சமயம் இனிமையான பேச்சு அன்பாகப் பழகும் சுபாவம், சமயவாழ்வு, பயன் கருதாது பணியாறறும் பண்பு நல்லவற்றைத் துணிந்து செய்யும் திறமை, மன உறுதி என்பன அவரை அணி செய்தன.*

*கடலிடைப் பிறந்த முத்தும், வீணையின் நாதமும், சந்தனமும் முறையே கடலுக்கோ, வீணைக்கோ, மலைக்கோ, எவ்வித நற்பயனையும் கொடுப்பதில்லை. ஆனால் அவற்றை முறையாகப் பயன்படுத்துபவர்கள். அதிக நன்மை அடைவார்கள். அதே போல அம்மையாரும் தான் பிறந்த அவுஸ்திரேலிய நாட்டிலும் பார்க்க இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கு அளப்பரும் சேவையாற்றியுள்ளார். அவருடைய முன்னோர்கள் இங்கிலாந்தில் யோக்சயர் என்ற இடத்தைச் சேர்ந்தவர்கள் பொருள் ஈட்டும் நோக்கோடு அவர்கள் அவுஸ்திரேலியா சென்று குடியேறினார்கள். அவர்கள் பொருட் செல்வம், கல்விச் செல்வம் என்பவற்றை நிரம்பப்பெற்று உயர் பண்பாட்டைப் பேணி வாழ்ந்தனர். நிலையில்லாத பெரும் செல்வத்தைத் தேடுவதிலும் பார்க்க நிலையான அருட்செல்வத்தைப் பெற விரும்பி செல்வி R.L ஹரிசன் இலங்கை வந்தார். மேலை நாட்டவரின் ஆடம்பரமான வாழ்க்கை அவரைக் கவரவில்லை. அதே சமயம் தமிழ் மக்களுடைய உயர்ந்த ஆழமான சிந்தனையும், எளிய வாழ்க்கை முறையும் அவரைக் கவரத் தவறவில்லை. இலங்கை வந்து சேர்ந்த அம்மையார் ஒப்பீட்டு முறையில் சமயக் கோட்பாடுகளைப் பற்றி ஆராய விரும்பி சேர். பொன் இராமநாதன் அவர்களை முன் செய்தவம் காரணமாக சந்திக்க நேரிட்டது. அவருடைய சமய வாழ்வு, சமயப்பணி சொற்பொழிவாற்றும் திறன் என்பன செல்வி .R.L ஹரிசனைப் பெரிதும் கவர்ந்தன. தனக்கு ஏற்ற ஒரு குரு கிடைத்து விட்டார். என்ற மகிழ்ச்சியோடு அவரிடம் குருசிஷ்ய முறையில் சமயத்தைக் கற்று ஆழமான பரந்த அறிவு பெற்றார். மேலும் சமயதத்துவம், வடமொழி என்பவற்றையும் கற்றார்.*

*சேர். பொன் இராமநாத னுடைய தொடர்பும் போதனையும் அவரை முற்றாக மாற்றி விட்டது. செல்வி R.L ஹரிசன் சைவசமயத்தைக் கடைப்பிடித்து, முறையாக ஆலய வழிபாட்டை மேற்கொண்டு, தமிழ்ப் பெண் போல தனது வாழ்க்கையை அமைத்துக் கொண்டார். அம்மையாரின் நற்பண்புகள், அறிவு, ஆற்றல், காரணமாக சேர். பொன் இராம நாதன் அவரைத் தன் அந்தரங்கச் செயலாளராக நியமித்தார்.*

*சேர். பொன் இராமநாதன் அமெரிக்கா சென்று சைவசித்தாந்தம் பற்றிப் பல இடங்களிலே சொற்பொழிவு செய்து அங்கு வாழும் மக்களுடைய பாராட்டைப் பெற்றுக் கொண்டார். அவருடைய பிரயாணமும் சொற்பொழிவுகளும் வெற்றியாக அமைவதற்குக் காரணமாக இருந்தவர். செல்வி சு.டு ஹரிசன் ஆவார். இலங்கை திரும்பிய சேர். பொன் இராமநாதன் அவர்கள் அம்மையாரைத் திருமணம் செய்து கொண்டார். சங்க இலக்கியங்களிலே காணப்படுகின்ற தலைவன் தலைவியர்கள் போல இவர்கள் இருவரும் ஒத்தகருத்தும் பண்பும், குணமும்உடையவர்களாக விளங்கினார்கள். செல்வி சு.டு ஹரிசன் முன்னம் அவருடைய நாமத்தைக் கேட்டு, அவருடைய வண் ணத்தைக் கேட்டு பின் அவருடைய ஊர் கேட்டு, அவருக்கு மச்சியாகி, அன்னை யையும் அத்தனையும் நீத்து, தன்னை மறந்து, தன்நாமம் கெட்டு தலைவனைச் சேர்ந் தார். இனத்தால் மதத்தால் மொழியால், கலாசாரத்தால் வேறுபட்டிருந்தாலும் அம்மையார் ஒரு சைவப் பெண்ணாக விளக்கி சேர். பொன் இராமநாதனுக்கு ஏற்ற வாழ்க்கைத் துணை நலமாக விளங்கினார்.*

*“தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகை சான்ற*
*சொற் காத்துச் சோர்விலாள் பெண்”*

*என்னும் வள்ளுவரின் குறளுக்கு ஏற்ப வாழ்ந்த பெருமைக்குரியவர் லீலாவதி அம்மையார். இருவரும் இல்லறத்தை இனிதே நடத்தி, அறவழி நின்று, பிறர்நலம் பேணி, வறியவர்களுக்கு வரையாது வழங்கி தமிழையும், சைவத்தையும் வளர்ப்பதே தமது குறிக்கோளாகக் கருதி வாழ்ந்தனர்.*

*இராமநாதன் கல்லூரி பல துறைகளைத் தன்னிடம் கொண்ட ஒரு பாரிய நிறு வனமாகும். தாபகருடைய மறைவுக்குப் பின்னர் தலைவர் என்ற நிலையில் அத்தனை பொறுப்புக்களையும் ஏற்று நிர்வகிக்கும் கடமை அவரைச் சார்ந்தது. தனது துணை வர் எதனை விரும்பினாரோ, எதனைச் செய்தாரோ, எப்படிக் கருமமாற்றுவாரோ, அவ்வாறே தானும் செயற்பட்டார். அவருடைய விருப்பத்துக்கும், கொள்கைக்கும் ஏற்ப பணியாற்றி இராமநாதன் கல்லூரியை இலங்கையிலே தலை சிறந்த ஒரு பெண் களுக்குரிய கல்விக் கூடமாக விளங்கச் செய்தார் இராமநாதன் கல்லூரி, தமிழ்ப் பாடசாலை, ஆசிரிய கலாசாலை, அநாதை இல்லம் என்பன ஒரு குடையின் கீழ் சீரிய நெறியில் இயங்க அவர் ஆற்றிய பணிகள் எண்ணிலடங்கா, கல்லூரியின் நலன் கருதி கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் நிலை நிறுத்திய அதே சமயம் கருணை உள்ளம் படைத் தவராக விளங்கினார். அங்கு தொழிலாற்றும் ஊழியர்களுக்கு உண்டியும் உறையுளும் கொடுத்து உற்சாகப்படுத்திக் கடமையாற்றச் செய்வதில் அவருக்கு நிகர் அவரே. நிதி தொடர்பான விடயங்களிலே மிக அவதானத்தோடு இருக்கும் அதே சமயம் தேவை ஏற்படும் பொழுது பரிவுடன் பணம் வழங்கும் பழக்கம் அவரிடம் காணப்பட்டது.*

*மங்கையராகப் பிறப்பதற்கே - நல்ல*
*மாதவஞ் செய்திட வேண்டும் அம்மா!*
*பங்கயக் கைந்நலம் பார்த்தல்லவோ - இந்தப்*
*பாரில் அறங்கள் வளரும் அம்மா!*

*என்ற கவிமணியின் பாடலுக்கு ஏற்ப வாழ்ந்த பெருமைக்குரியவர்.*

*சேர்.பொன்.இராமநாதன் அவர்கள் இராமாயணத்தை விரும்பிப் படித்த துடன் அதனை வாசித்து விளக்கம் கொடுத்துத் தனது துணைவியாரையும் அதனைக் கற்று மகிழ வழிகாட்டினார். இராமாயணத்தைக் கற்கத் தொடங்கிய லீலாவதி அம்மையார் அதிலே தனது மனதைப் பறிகொடுத்ததுடன் இந்தியாவின் பாரம்பரியப் பெருமை பற்றியும் அறிய முடிந்தது. தனது கணவரின் இவ் வேண்டுகோளுக்கு ஏற்ப இராமாயணத்தை அவர் ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டார். லீலாவதி இராமநாதன் அவர்களின் ஆங்கில மொழிப் புலமை, எழுதும் திறன், தெளிவான நடை என்பன பற்றி இந்நூல் மூலம் அறிய முடிந்தது அந்நியநாட்டவர்களுக்கு அவர் ஆக்கிய நூல் ஒரு வரப்பிரசாதமாக அமைந்ததெனலாம்.*

*தமிழ் இலக்கியங்களிலும் புராணங்களிலும் இதிகாசங்களிலும் காணப்படும். இலட்சியப் பெண்கள் தங்கள் அறிவு, ஆற்றல், நற்பண்புகள், ஒழுக்கம், சேவை மனப்பான்மை என்பவற்றால் தங்கள் குடும்பங்களுக்கு பெருமை தேடிக் கொடுத்தனர் இலக்கியங்களிலே காணப்பெற்ற பெண்களைப் போன்றவர்களை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் சேர். பொன். இராமநாதன் பெண்களுக்கு தனிக் கல்லூரியை அமைத்தார். லேடி இராமநாதன் அம்மையாரும் அமைதியாகவும் அடக்கமாகவும் பணியாற்றி தனது துணைவரின் புகழுக்கு காரணமாக விளங்கினார். இராமனின் புகழ் சீதையாலும், இராமகிருஸ்ணரின் சிறப்பு அன்னை சாரதாதேவி யாலும், உயர்ந்து விளங்கியதென்பது மறுக்கமுடியாத உண்மை. அம்மையாரும் தனக்கு மட்டுமல்ல, இராமநாதன் கல்லூரிக்கும் நிலையான புகழைத் தேடிக் கொண்டார். இருபதாம் நூ ற்றாண்டின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்தின் பல பகுதி களிலுமிருந்து வந்த மாணவிகள் இராமநாதன் கல்லூரியில் கற்பதைப் பெரும் பேறாகக் கருதினார்கள். அங்கு கற்று வெளியேறுவது ஒரு நல்ல தகைமைச் சான்றிதழாகக் கருதப்பட்டது. விடுதியில் தங்கிக் கற்கும் மாணவிகளுக்குப் பல பணிகள் ஒப்படைக்கப்பட்டன. அங்கு அமைந்துள்ள நடராஜர் ஆலயத்தில் சரியைத் தொண்டு கள் செய்தல், பூசைக்கு வேண்டிய ஒழுங்குகளை மேற்கொள்ளல், பூந்தோட்டத்தை அமைத்துப் பாதுகாத்தல் என்பன அவற்றுள் சிலவாகும். மாணவிகளுக்கு விசேட மாக பண்ணிசைப் பயிற்சி, சங்கீதம், நடனம், தையல் என்பன புகட்டப்பட்டன.*

*சேர் பொன். இராமநாதனின் மறைவுக்குப் பின்னர். அம்மையார் சகல பொறுப்புகளையும் தாமே ஏற்றுக் கல்லூரியைத் தனது துணைவரின் குறிக்கோளுக்கு ஏற்ப நிர்வகித்தார் மேலைநாட்டு நாகரிகத்தினைத் தமிழ் மக்கள் விரும்பிப் பின்பற்றி வாழ்ந்த காலகட்டத்தில் அம்மையார் ஆற்றிய பணிகாரணமாகக் கல்லூரி தமிழ்ப் பண்பாட்டையும், சமய கலாசாரத்தையும் நாட்டின் பல பகுதிகளுக்கும் பரவத் துணை புரிந்தது. அவருடைய பணிகாரணமாக இராமநாதன் கல்லூரி கலைகளின் இருப்பி டமாக, சைவத்தின் காவலனாக பண்பாட்டின் கழகமாக விளங்கியது.*

*சைவப் பெண்கள் சமூகத்தில் நற்பணிகளில் ஈடுபட்டு நல்ல அனுபவங்களைப் பெறவேண்டும் என்ற நோக்கத்துடன் சேர். பொன். இராமநாதன் 1924ம் ஆண்டு சைவ மங்கையர் சபையைத் தோற்றுவித்தார். அதன் தலைவராகப் பல காலம் நற் பணி ஆற்றி சொற்பொழிவுகள், கலந்துரையாடல்கள், சமய விழாக்கள் என்பவற்றை முறையாக நடைபெறச் செய்து பெண்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்திய பெருமை அம்மையாருக்குரியது. லேடி. லீலாவதி. இராமநாதனின் சேவையைப் பாராட்டி, அவரைக் கௌரவிக்கும் நோக்கத்துடன் இலங்கைப் பல்கலைக்கழகம் அவருக்கு 1942ம் ஆண்டு கலாநிதிப் பட்டத்தை வழங்கியது.*

*லேடி. லீலாவதி இராமநாதனின் சிந்தனைத்தாக்கம் இராமநாதன் கல்லூரியில் கற்ற மாணவிகளையும் சமய, கலாசார வளர்ச்சிக்குப் பணியாற்ற வழிவகுத்தது. இலங்கையில் பரந்து வாழும் தமிழ் மக்களிடையேயும், அன்னிய நாடுகளிடையேயும் இராமநாதன் கல்லூரி மாணவிகள் அரும்பணியாற்றுவது குறிப்பிடத்தக்கது. இராம நாதன் கல்லூரி பழைய மாணவர் சங்கக் கொழும்புக் கிளையினர் அன்னார் ஞாப கார்த்தமாக திருக்கேதீஸ்வரத்தில் நவக்கிரக மண்டபம் அமைப்பதற்கு நிதி சேர்த்து உதவினர். காலஞ்சென்ற முன்னாள் இராமநாதன் கல்லூரி அதிபர்.திருமதி.த.முத்துக் குமாரு அவர்கள் 1963ம் ஆண்டு நடைபெற்ற பொன் விழாவில் அரிய கருத்து ஒன்றை வெளியிட்டார். கற்ற பெருமக்கள், பழைய மாணவிகள் மத்தியில் பொன் விழாப் பேருரையினை நிகழ்த்தியபோது லேடி. இராமநாதன். நினைவாக மணி மண்டபம் நிறுவுவதற்கு அன்பர்கள், ஆதரவாளர்கள், பழைய மாணவிகள் அனைவரும் தன்னுடன் ஒத்துழைக்க வேண்டும் என்றும் பணியாற்ற வேண்டும் என்றும் ஒரு வேண்டுகோளை விடுத்தார். மேலும் இராமநாதன் கல்லூரி அதிபர். திருமதி. இ. அருணாசலம் 1974ல் நடைபெற்ற வைரவிழாவில் வெளியிடப்பெற்ற வைரவிழா மலரில் திருமதி. த. முத்துக்குமாருவினுடைய வேண்டுகோளை நினைவு மண்டபம் பூர்த்தியாவதற்கு முன் னின்று உழைத்து 1976ம் ஆண்டு அதனை நிறைவு செய்தார்.*

*2.3.82ல் நடைபெற்ற பழைய மாணவர் சங்கக் கூட்டத்தில் இம் மண்டபத் திற்கு "லேடி லீலாவதி இராமநாதன் மண்டபம்" என்று பெயரிடப்படல் வேண்டும் என்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. பவள விழாவின் போது இத்தீர் மானம் செயற்படுத்தப்படும் என எதிர்பார்க்கிறோம்.*

*வடமாநில முன்னாள் வித்தியாதிபதியும் சைவ மங்கையர் சபைத் தலைவருமான திருமதி.இரத்தினா நவரத்தினம் அவர்களின் பெரு முயற்சியால் அன்னாருடைய சேவையை நினைவுபடுத்து முகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்து நாகரிகத் தில் முதுகலைமாணி, கலாநிதிப் பட்டங்கள் பெறுவதற்கு ஒரு புலமைப் பரிசில் வழங் கப்படுகிறது. மேலும் வருடந்தோறும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் இந்து நாக ரிகம், சமய, தத்துவம், கலை கலாசாரம் ஆகிய துறைகளில் ஒரு நினைவுப் பேருரை நடைபெறவும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அரும் பெரும் சேவையாற்றி என்றும் மக்களால் பாராட்டத்தக்க முறையில் வாழ்ந்த அம்மையார் வழிவாழ்வது நமது தலையாய கடமையாகும்.*

*இராமநாதன் கல்லூரி பவளவிழா மலர், 1990*

# பெருமாட்டி லீலாவதி இராமநாதன் அம்மையார்

**திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம்**
*முன்னாள் அதிபர்,*
*இராமநாதன் கல்லூரி.*

*சேர். பொன். இராமநாதன் அவர்களின் பெருமைக்கும் புகழுக்கும் உறுதுணையாக விளங்கியவர் அவருடைய துணைவியார் பெருமாட்டி லீலாவதி இராமநாதன் அவர்களாவார். அம்மையார் குடும்பத்தவர்கள் இங்கிலாந்திலே யோக்சயர் என்ற இடத்தைச் சேர்ந்தவர்கள். அவர்கள் அவுஸ்திரேலியா சென்று அங்கு வாழ்ந்து பொருட்செல்வம் கல்விச்செல்வம் என்பவற்றை நிரம்பப் பெற்றனர். உலகியல் போகங்கள் எல்லாவற்றையும் அனுபவிக்கத் தக்க வசதி இருந்தும் அவர் எளிமையான வாழ்க்கையையும் உயர்ந்த சமய வாழ்வையும் பெரிதும் விரும்பினார். நிலையில்லாத செல்வத்தை அனுபவிப்பதிலும் பார்க்க நிலையான செல்வத்துள் எல்லாம் தலை சிறந்த செல்வமான அருட் செல்வதைப் பெற விரும்பினார். ஒப்பீட்டு முறையில் சமய ஆராய்ச்சி செய்ய விரும்பிய அம்மையார் தனக்கு ஏற்ற ஒரு குருவைத் தேடிய பொழுது சைவ சமயத்தில் அதிக ஈடுபாடும் சைவ சித்தாந்தத்தில் ஆழமான அறிவும் சமய வாழ்வும் உடைய தன்னிகரில்லாத தலைவனாகியசேர்.பொன். இராமநாதனை சந்தித்தார். அம்மையார் சேர். பொன். இராமநாதனின் சிஷ்யை ஆகி குருசிஷ்ய முறையிலே சைவசமயத்தை கற்க ஆரம்பித்தார். சைவ சமய தத்துவம், சமய இலக்கியங்கள், சைவசமயக் கோட்பாடுகள் என்பன அவரைக் சுவர்ந்தன. மேலை நாட்டவரின் ஆடம்பரமான நாகரீக வாழ்வை வெறுத்து எளிய முறையிலேயே தனது வாழ்க்கையை அமைத்துக் கொண்டார். குருவினுடைய சமய வாழ்வு, ஆலய வழிபாட்டுமுறை, திருமுறைகளிலே உள்ள ஈடுபாடு, அந்தணரைப் பேணும் பண்பு, என்பன அம்மையாரிடம் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி அவரைத் தமிழ்ப் பெண்மணி போல வாழ வகுத்தது. அம்மை யாருடைய அறிவு ஆற்றல், நற்பண்புகள் காரணமாக அவரைத் தமது அந்தரங்கச் செயலாளராக நியமித்தார். செயலாளர் என்ற முறையில் நன்கு திட்டமிட்டுச் செயலாற்றிய காரணத்தினால் சேர். பொன். இராமநாதன் எல்லாக் கருமங்களிலும் பெருவெற்றி கண்டார்.*

*சேர்.பொன்.இராமநாதன் அமெரிக்கா சென்று பல இடங்களிற் சைவசித்தாந்தம் பற்றிச் சொற்பொழிவுகளாற்றி எல்லோரதும் பாராட்டுக்களையும் பெற்றார். அவருடைய சொற்பொழிவாற் கவரப்பட்ட அமெரிக்க மக்கள் அவரை மேலும் பல நாட்கள் அங்கு தங்கிச் சொற்பொழிவு ஆற்றும் வண்ணம் வேண்டிக் கொண்டார்கள். ஆனால் சில முக்கிய கடமைகளை நிறைவேற்றும் பொருட்டு அவர் நாடு திரும்பவேண்டி ஏற்பட்டது. இதன்பின் தனது அமெரிக்கப் பிரயாணத்துக்கும் அங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளுக்கும் உறுதுணையாக விளங்கியவர் அவரது அந்தரங்கச் செயலாளராகிய செல்வி சு.ட. ஹரிசன் ஆவார். செல்வி ஹரிசனுடைய கடமை உணர்வு, செயலாற்றும் திறமை, நற்பண்புகள் இராமநாத வள்ளலைக் கவர்ந்தன. ஒத்தபண்பும், கருத்தும், கொள்கையும் உடைய இவர்கள் மணவாழ்வில் ஒன்றுபட்டனர். செல்வி ஹரிசன் சேர். பொன்.*

இராமநாதனுடைய நாமத்தைக் கேட்டு, அவருடைய வண்ணத்தைக் கேட்டு. அவருடைய ஊர் கேட்டு, அவருக்கே பிச்சி ஆகித் தன்னை மறந்து தன் நாமம் கெட்டு தலைவனைச் சேர்ந்தார். இவர்களது திருமணத்துக்குப் பின் அம்மையார் வாழ்க்கையிலே பெரிய பெரிய மாற்றம் ஏற்பட்டது. நடை உடை பாவனையால் ஒரு தமிழ்ப் பெண்போலவும் சைவ அபிமானிபோலவும் விளங்கினார் என்பதில் நாம் பெருமை அடைய வேண்டும்.

தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற் காத்துச் சோர் விலாள் பெண் என்ற குறளுக்கேற்ப வாழ்ந்த பெருமைக் குரியவர். இருவரும் அறவழி நின்று பிறர் நலன் பேணி அந்தணரை ஓம்பி பரமேஸ்வரன் கொடுத்த செல்வத்தை நாட்டுப் பணிக்கு அர்ப்பணித்து தமிழையும் சமயத்தையும் பேணிப்பாதுகாத்து பல்துறைப் பணியாற்றினர். சேர். பொன். இராமநாதனால் நிறுவப்பட்ட இரு கல்வி நிறுவனங்களையும் அவருடைய சொத்துக்களையும் நிர்வகிப்பதில் பெரும் பங்காற்றினார்.

சீமாட்டி இராமநாதன் அம்மையார் ஓர் சிறந்த நிர்வாகியாகவும் விளங்கினார். தனது தலைவரின் மறைவுக்குப் பின் நிர்வாகப்பொறுப்பு முழுவதையும் தானே ஏற்றுச் செயற்பட்டார். தனது தலைவனின் குறிக்கோளில் நின்று சிறிதும் விலகாது அவருடைய இலட்சியங்ளைக் கடைப்பிடித்துக் கடமையாற்றினார். தனக்கு கீழ் கடமையாற்றுபவர்களோடு அன்பாகப்பேசும் அதேவேளை மிகக்கண்டிப்பாகவும் இருந்தார். மேலும் அங்கு கடமையாற்றும் பணியாளர்களுக்கு உணவும் உடையும் வழங்கி நோயுற்ற காலத்தில் மருத்துவ வசதியையும் ஏற்படுத்தி மேலதிக பணமும் கொடுத்து அவர்களது அன்புக்குப் பாத்திரமானார். நிதி சம்பந்தமான விடயங்களில் விடயங்களை நன்றாக ஆராய்ந்து சிக்கனங்களைக் கடைப்பிடித்து பணவிரயம் ஏற்படாதவாறு கடமையாற்றினார்.

இராமாயணத்தைக் கேட்டு அதனாற் கவரப்பட்ட அம்மையார் அதனை ஆங்கிலத்தில் எழுதி சிறந்த எழுத்தாளர் என்பதையும் நிரூபித்துக் கொண்டார். அமெரிக்காவுக்குச் சென்றபொழுது அங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளைத் தொகுத்து கீழ்நாட்டு மாணவர்களுக்கான மேலை நாட்டுக் காட்சிகள் என்னும் நூலை அம்மையார் எழுதி வெளியிட்டார்.

இரு பெரும் கல்வி நிறுவனங்களை நிறுவிய எமது கல்லூரித்தாபகர் இராமநாதன் வளாகத்துடன் இணை பங்களா எனப்படும் பெரிய இல்லத்தை தனது வதிவிடமாக்கினார். அங்கிருந்து கல்லூரி மாணவிகளுடைய விடுதி வாழ்க்கை, ஆலய வழிபாடு. சிவாலயத் தொண்டு, பண்ணிசை என்பவற்றை இருவருமாகக் கண்காணித்து வந்தனர். மேலும் சங்கீதம். பண்ணிசை பிரத்தியேகமாகப் புகட்டப்பட்டன. அக்காலத்தில் சைவப்பெண்களுக்கு ஏற்ற கல்விக்கூடங்கள் போதியளவு இல்லை. எனவே சைவப் பெண்கள் யாழ்பாணத்தின் பல பாகங்களிலிருந்து இங்கு வந்து கற்றனர். இங்கு கற்பது ஒருகிடைத்தற்கரிய பேறாகக்கருதப்பட்டது. இராமநாதவள்ளலுக்குப் பின் பெருமாட்டி லீலாவதி அம்மையார் கல்லூரிப் பொறுப்பைத் தாமே ஏற்று தனது தலைவனின் குறிக்கோளுக்கு ஏற்ப நிர்வகித்தார். இங்கு கற்று, பின் உயர்கல்வி பெற்ற இராமநாதன் கல்லூரி பழைய மாணவிகள் தமிழ்ப் பண்பாட்டையும், சமய கலாசாரத்தையும் நம் நாட்டின் பல பாகங்களிலும் தற்போது கடல் கடந்த அந்நிய நாடுகளிலும் வளர்த்து வருகிறார்கள் என்பதில் நாம் பெருமைப்படவேண்டும்

இராமநாதன் கல்லூரி அதிபராகவும், சைவ மங்கையர் சபைத் தலைவியாகவும் விளங்கிசமய விழாக்கள், சொற்பொழிவுகள் கலந்துரையாடல்கள் என்பவற்றை நடத்தி பெண்களிடையே ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார் இவருடைய பன்முகப்படுத்தப்பட்ட பணியைப் பாராட்டி இலங்கைப்பல்கலைக்கழகம் **1942** ம் ஆண்டு அம்மை யாருக்குக் கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

அவுஸ்திரேலிய மண்ணிற் தோன்றி ஈழமண்ணிற் தமது சேவைகளைத் திறம்பட ஆற்றிய பின் **1953** ஆம் ஆண்டு தைத்திங்களிற் சிவகாமசுந்தரி சமேத நட ராஜப்பெருமான் திருவடி நீழலை அடைந்தார். செயற்கரியன செய்த இப்பெருமாட்டி காட்டிய நன்னெறிகளைக் கடைப்பிடித்தொழுகும் மங்கையர் வாழுங்காலம் வரை அவரது புகழ் பொன்றாது நிலைத்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

*சேர். பொன். இராமநாதன் உருவச்சிலை சிறப்பு விழாச் சிறப்பு மலர். இராமநாதன் கல்லூரி, சுன்னாகம், **1994**.*

*வேடி இராமநாதனின் நினைவுப் பேருரை ஆண்டுதோறும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் நடைபெற்று வருகிறது. அம்மையாரின் நினைவுப் பேருரையினை வழங்கிய யாழ் பல்கலைக்கழக முதலாவது துணைவேந்தர் அவர்களின் நினைவுப் பேருரை இங்கு ஆவணப்படுத்தப்படுகின்றது.*

# இந்து கலாசாரம், சைவசமயம், சைவசித்தாந்தம் திராவிடப் பண்பாடு என்பவை பற்றிய கல்வியினையும் ஆழமான ஆராய்ச்சிகளையும் ஊக்குவிக்கும் பணிகள்.

**பேராசிரியர் கலாநிதி சு.வித்தியானந்தன்.**
**துணைவேந்தர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

*இலங்கையிலே பத்தொன்பதாம் நூற்றாண்டிலே ஆறுமுகநாவலரின் பணிகளின் பயனாக ஏற்பட்ட இந்துசமய மறுமலர்ச்சியிலும் கலாசார அபிவிருத்தியிலும், கல்வி வளர்ச்சியிலும் ஆராய்ச்சிகளிலும், குமாரசுவாமி முதலியாரின் சந்ததியினர் தமது வாழ்க்கையினை இணைத்துக்கொண்டனர். அக்குடும்பத்தவரே, ஒரு நூற்றாண்டுக்கு மேலாக, அரசியலில் இலங்கைத் தமிழரின் தலைவர்களாக விளங்கினர். குமாரசுவாமி முதலியார் முதல் அருணாசலம் மகாதேவா, சு. நடேசபிள்ளை ஆகியோர் ஈறாக அவர் களில் நான்கு தலைமுறையினர் இலங்கையின் சட்டசபையிலே தமிழரின் பிரதிநிதிகளா யிருந்தனர். அவர்களனைவரும், தமது திறமையாலும், கடமையுணர்வினாலும், தேச பக்தியினாலும் பெருஞ்சிறப்பினையும் பாராட்டையும் பெற்றனர். அவர்களுள் இராம நாதன், அருணாசலம் ஆகிய இருவரும் தேசத்தின் முன்னணித் தலைவர்கள் என்ற உன்னத நிலையினை அடைந்தனர். இலங்கையில் வாழும் எல்லாச் சமூகத்தவரினதும் நன் மதிப்பையும் பாராட்டினையும் பெற்ற தகைமையாளராக அவர்கள் விளங்கினார்கள்.*

*சைவசமய வளர்ச்சிக்கும் இந்து கலாசார அபிவிருத்திக்கும் கல்வியறிவின் பெருக்கத்திற்கும் அவர்கள் ஆற்றிய சேவைகள் ஒப்பற்றனவாகும். அவர்கள், தமது இடையறாத ஊக்கத்தினாலும், திறமையினாலும் கல்விஞானத்தினாலும் விழுமியப் பண்பினாலும் அனைவருக்கும் முன்மாதிரியாகத் திகழ்ந்தனர். எமது வாழ்வு வளங்குன்றிச் சீர்குலைந்திருக்கும் இந்நாட்களில் அவர்களின் சாதனைகளையும் சேவைகளையும் நினைவு கூர்வதும் மதிப்பீடு செய்வதும் மிகவும் பொருத்தமானதாகும். அது சமுதாய மறுமலர்ச்சிக்கும் கலாசார நெறிகளின் புனருத்தாரணத்திற்கும் ஏதுவாக அமையக்கூடும். சைவாபிமானம் மிக்க அவர்கள் கோயில்களைப் புதிதாக அமைப்பதிலும் சைவசமய மரபுகளைப் பேணி வளர்ப்பதிலும் பெரிதும் ஈடுபட்டனர். பிரித்தானியர் ஆட்சியிலே ஏற்பட்ட சமுதாய மாற்றங்களின் பயனாக இலங்கைத் தமிழர்கள் கொழும்புக்குச் சென்று குடியேறிய காலத்தில் அவர்களின் கலாசார மரபுகளைப் பேணிக்கொள்வதற்கான சமய,*

கலாசார நிறுவனங்கள் பலவற்றையும் அக்குடும்பத்தினரே அமைத்துக்கொடுத்தார்கள். தம் முன்னோர் விட்டுச்சென்ற செல்வங்களையும் தாம் தேடிய செல்வங்களையும், சமுதாயப் பணிகளிலே செலவிட்டார்கள். அந்த வகையில் இவர்களுக்கு நிகரான வேறொரு குடும்பத்தை நவீனகால இலங்கை வரலாறு கொண்டிருக்கவில்லை என்று உறுதியாகவே கூறலாம். அவர்களின் தகைமைகளும் சேவைகளும் பழமைக்கும் புதுமைக்கும் பாலமாய் அமைந்தன. நவீனமுறைக் கல்விநெறியினையும் நவீன உபகரணங்களையும் அவர்கள் தமது முன்னேற்றத்திலே மிகத்திறமையோடு பயன்படுத்தினார்கள். அதேவேளையில் மரபு வழியான சைவசமய ஆசாரங்களையும் நெறிகளையும் மிகவும் இறுக்கமாகப் பின்பற்றி வந்தார்கள். சாத்திர நூல்களிலும் ஒழுக்க நூல்களிலும் சான்றோ ரொழுக்கம் என்று கொள்ளப்பட்டனவற்றையே தமது இலட்சியமாகக் கொண்டிருந்தார்கள். இந்துமதம் சார்ந்த தமிழர்சால்பினை வளம்படுத்தியதோடு, அதன் சிறப்புகளை இந்நாட்டிலுள்ள பிற சமூகத்தவரும் மேல்நாட்டவரும் மதிக்கத்தக்க வகையிலே, அவற்றை அவர்களுக்கு அறிமுகம் செய்தார்கள். தமது கல்வித் தகைமையினையும் பதவிகளாற் கிடைத்த செல்வாக்கினையும் அந்தோக்கத்திற்காக அவர்கள் பயன்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். இப்பணியிலே முத்துக்குமாரசுவாமி (1833-1879), ஆனந்தக்குமாரசுவாமி (1877-1947), இராமநாதன் (1851-1930 ) ஆகிய மூவரும் சர்வதேசப் புகழ்பெற்றனர்.

பெருஞ் சைவாபிமானியாக விளங்கிய குமாரசுவாமி முதலியார் கொழும்பு வாழ் சைவர்களின் வழிபாட்டுத் தேவைகளுக்காகச் செட்டித்தெருவிலுள்ள முத்து விநாயகர் கோவிலையும், ஜிந்துப்பிட்டிக் கதிரேசன் கோவிலையும் அமைத்திருந்தனர் அவர் சட்டசபையிலே தமிழரின் முதலாவது நியமன உறுப்பினராகவிருந்த காலத்திலே கொழும்பு வாழ் சைவர்களுக்குச் செய்த சேவைகளும் தானதருமங்களும் மிகப்பலவாகும். இங்கிலாந்திற்குச் சென்று, உயர்கல்வி பயின்று, பெரும் அறிவாளியாகப் புகழ்பெற்ற முத்துக்குமாரசுவாமி இந்துகலாசாரத்தின் விழுமியங்களை மேற்குநாட்டவர்களுக்கு அறிமுகஞ்செய்தவர்களுக்கெல்லாம் முன்னோடியாக விளங்கினார். பிரித்தானியாவிலே, ஆசிரியர்களாயுள்ளவருட் கிறிஸ்தவர்கள் மட்டுமே சட்டக்கல்லூரிகளிற் படித்துப் பட்டம் பெறமுடியுமென்ற ஏற்பாடுகளைத் தளர்த்தியமை அவரின் இளமைப் பருவத்துச் சாதனையாகும். அவர் அங்கு வாழ்ந்த காலத்திலே தமது அறிவின் மேன்மையினாலும் தகைசால் பண்பினாலும் மேனாட்டு ஆசாரங்களின் பயிற்சியினாலும் மேன்மக்களின் நல்லுறவையும் பெருமதிப்பினையும் பெற்றிருந்தார். பிரித்தானியப் பிரதமர்களாயிருந்த பாமேஸ்ற்றன், வில்லியம் கிளாட்ஸ்ரன், வெஞ்சமின் டிஸ்றெயிலி போன்றோரின் நன்மதிப்பையும் நெருங்கிய உறவையும் அவர் பெற்றிருந்தார். பன்மொழிப் பயிற்சியும் ஆங்கில மொழியிலே மிகுந்த பேச்சுத்திறனும் பெற்றிருந்த அத் தகைமையாளர் வாய்மையே அறம் என்ற கோட்பாட்டினை அடிப்படையாகக்கொண்ட அரிச்சந்திரன் கதையினை ஆங்கிலத்திலே நாடக நூலாக்கி அரங்கேற்றினார். அது மட்டுமன்றி, அதிலே தாமே அரிச்சந்திரனாகவும் நடித்தார். ஆங்கிலேய அரண்மனையிலே அந்நாடகத்தையேற்றி நடித்த பொழுது விக்ரோறியா மகாராணியார் அதைப் பார்த்துப் பரவசமடைந்து மனமுருகினார் என்பர். சென்னை மாநிலத்து அதிபராகப் பதவியிலிருந்த ஆங்கிலேயத் தேசாதிபதி, முத்துக்குமாரசுவாமியை "ஒரு கோடி தமிழரின் முதல்வன்" என வருணித்தார். அன்னார் பதினேழு வருடங்களாகச் (1862 - 1879 ) சட்டசபையிலே இலங்கைத் தமிழரின்

நியமன உறுப்பினராக விளங்கினார். அம்மன்றத்தில் அமர்ந்திருந்த இலங்கையர்களுள், கல்வியறிவிலும் பேச்சுத்திறனிலும் பிற தகைமைகளிலும் அவருக்கு நிகரானவர் வேறெவருமே இருக்கவில்லை.

குமாரசுவாமி முதலியாரின் மகனாகிய முத்துக்குமாரசுவாமியின் குமாரர் கலாயோகி ஆனந்தக்குமாரசுவாமி ஆவர். இவரின் தாய் ஓர் ஆங்கிலேயப் பெண்மணி. இங்கிலாந்திலே விஞ்ஞானத்துறையிற் பல்கலைக்கழகக் கல்விபயின்று பட்டம் பெற்ற அன்னார் காலப்போக்கிலே பல்கலைகளும் பயின்ற ஞானியாகவும், பன்மொழிகளும் கற்றுணர்ந்த பண்டிதனாகவும் வளர்ச்சி பெற்றார். அவர் கீழைத்தேய மொழிகளான சமஸ்கிருதம், பாளி, தமிழ், சிங்களம் ஆகியவற்றிலுள்ள நூல்களிலும் ஆங்கிலம், பிரெஞ்சு, செருமானியம், கிரேக்கம், இலத்தீன் முதலிய மொழிகளிலுள்ள பனுவல்களிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்தார். தத்துவம், சமயம், கலை ஆகிய துறைகளிலே பேரபிமானங் கொண்டிருந்த அவர், இந்துகலாசாரம்பற்றி மேற்கொண்ட ஆராய்ச்சிகள் இத்துறையிலே ஒரு திருப்புமுனையாக அமைந்தன. புராதன இந்துக்களின் கலாதத்துவத்தினை ஐரோப்பியக் கலைக் கொள்கைகளுடன் ஒப்பிட்டு விபரமாக வர்ணித்து விளக்கியமை அவரின் மிகப்பெரிய சாதனையாகும். பன்மொழிப்பயிற்சியின் பயனாகவும் பிற பல கலாசாரங்களைப் பற்றிய ஆழமான அறிவின் பயனாகவும் ஒப்பீட்டு நோக்கின் அடிப்படையிலே இந்திய சுலாசாரத்தை உன்னதமான வகையிலே அவரால் விமர்சிக்க முடிந்தது. இந்து சமயம், பௌத்தம், இலக்கியம், கட்டிடம், சிற்பம், கலாசாரம் போன்ற துறைகளைப் பற்றி அவர் எழுதிய நூல்களும் ஆராய்ச்சிக் கட்டுரைகளும் நூற்றுக்கணக்கினவாகும். அவை இந்து சமயத்தினதும் இந்துகலாசாரத்தினதும் மேன்மைகளையும் தனிச்சிறப்புகளையும் உலகிற்குணர்த்துஞ் சீரிய சாதனங்களாயிருந்தன. இந்திய, இந்தோனிசியக் கலைகளின் வரலாறு", “சிவ தாண்டவம்” என்னும் நூல்கள் அவருடைய படைப்புகளுக்கெல்லாம் மகுடமாய் அமைந்தன. இந்திய கலாதத்துவம் பற்றி அவற்றிற்கிணையான நூல்கள் வேறெவையும் இதுவரை வெளிவரவில்லை. சிவனை நடராசப் பெருமானாக வழிபடும் மரபு தமிழகச் சைவர்களுக்குச் சிறப்பான தொன்றாகும். நடராசப் பெருமானின் உருவத்தை உலோகத்திலே உன்னதமான கலை வனப்புடன் வடித்த பெருமை சோழப்பெருமன்னரின் கலைஞருக்குரியதாகும். அவ்வுருவத்தின் விளக்கமாய் அமைந்த சிவ நடனம் சைவசமய கலாதத்துவத்தின் இலக்கணமாகும். ஆனந்தக்குமாரசுவாமியின் நூல்கள் இந்துக்களிடையே சமயாபிமானத்தையும் கலாசார மறுமலர்ச்சியையும் ஏற்படுத்த வல்லனவாய் அமைந்தன. புறவுலகிலே அவை இத்துக்களின் கலாசார பாரம்பரியங்கள் பற்றிய அறிவினைப் பரப்புவனவாய் அமைந்தன.

குமாரசுவாமி முதலியாரின் மருகர் (மகளின் கணவர்) பொன்னம்பல முதலியார். அவர் கொழும்புக் கச்சேரியில் மேல்மாகாண அதிபரின் முதலியார் என்ற பதவியினைப் பெற்றிருந்தார். நாள்தோறும் முக்காலமும் சிவனை வணங்கும் பண்பினராகிய அன்னார் பொதுப்பணிகளிலும் சமயத்திருப்பணிகளிலும் ஆர்வங்கொண்டிருந்தார். கொழும்பு வாழ் சைவர்கள் உயிர் நீத்தோரின் சடலங்களைத் தமது சமயாசாரப்படி தகனஞ்செய்ய வசதிபெற்றிருக்காதமை கண்டு அவர்களின் வசதிக்காக ஈமக்காட்டினை அமைத்துக்கொடுத்தார். அவர்களின் வழிபாட்டுத் தேவைக்கென, பொன்னம்பலவாணரின் பெயராற் சிவாலயமொன்றினையும் அமைப்பித்தார். வறியோரை ஆதரித்தும் துறவோரைப் பேணியும் அவர் செய்த அறங்கள் மிகப் பலவாகும். தம் கல்வியறிவாலும் உத்தம

குணங்களினாலும் சைவாபிமானத்தாலும் வல்லமையினாலும் அவரின் குமாரர்களாகிய குமாரசுவாமி, இராமநாதன், அருணாசலம் எனும் மூவரும் எவரும் போற்றும் தகைமைசால் பண்பினராய் விளங்கினர். தமிழ்மொழி வளர்ச்சிக்கும் தமிழர் தம் கல்விவளர்ச்சிக்கும் சைவசமய வளர்ச்சிக்கும் அவைபற்றிய ஆராய்ச்சிநெறியின் விருத்திக்கும் அம்மூவரும் செய்த சேவைகள் மிகச் சிறப்புடையனவாகும். தமிழ் இலக்கியங்களிலே புலமையும் அபிமானமுங் கொண்டிருந்த குமாரசுவாமி, சிலப்பதிகாரம், மணிமேகலை, சீவகசிந்தாமணி என்னும் காப்பியங்களைப் பதிப்பித்து வெளியிடுவதற்குக் கருத்துரைகள் சொல்லியும் பணம் வழங்கியும் சாமிநாதையருக்கு ஆதரவளித்தார்.

பொன்னம்பல முதலியாரின் மக்கள் மூவருள் மிக இளையவரான அருணாசலமே கூடிய கல்வித்தகைமை பெற்றவர். அவர் இளமைப் பருவத்தில் இங்கிலாந்திற்குச் சென்று கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் உயர்கல்வி பயின்று கலைமாணி, முதுகலைமாணி என்னும் பட்டங்களைப் பெற்றார். அவரின் கல்வித்தகைமையும் பன்மொழி இலக்கியப் பயிற்சியும் அவர்தம் காலத்து இலங்கையரிடையே ஈடிணையற்றனவாகும். நிர்வாக சேவையில் அவர் கொண்டிருந்த திறமை பிறருக்கெல்லாம் முன்மாதிரியாக விளங்கியது. தேசாபிமானமும் முற்போக்கு நோக்கும் கொண்ட அவர் இலங்கைத் தேசிய காங்கிரஸ் என்னும் தாபனத்தை நிறுவி, அதன் முதலாவது தலைவராய் விளங்கினார். அவர் தம் முன்னோர்களைப் போன்று சைவசமயத்திலும் தமிழ் இலக்கியங்களிலும் மிகுந்த அபிமானமும் ஈடுபாடுங்கொண்டிருந்தார். சங்கநூல்களும் பக்திப் பாடல்களும் அவரின் மனதைப் பெரிதுங் கவர்ந்தன. திருக்குறள், திருமுருகாற்றுப்படை, திருவாசகம், தாயுமானவர் பாடல்கள் முதலியனவற்றின் சில பகுதிகளைத் தெரிந்து அவற்றை ஆங்கிலத்திலே மொழிபெயர்த்து வெளியிட்டார். பழந்தமிழ் இலக்கியங்களில் அவர் கொண்டிருந்த ஆழமான புலமைக்கும் ஈடுபாட்டிற்கும் அவர் தமிழ் நூல்களுக்குச் செய்த மொழிபெயர்ப்புகள் சிறந்த எடுத்துக்காட்டாய் விளங்குகின்றன. கதிர்காமத் தல வரலாறு, பொலநறுவைச் சைவசமய வெண்கலப் படிமங்கள் என்பன பற்றி அவர் எழுதிய விரிவுரைகள் ஆராய்ச்சிப் படைப்புகள் என்ற வகையிலே தரத்தால் உன்னதமானவை.

இராமநாதன் அவர்களின் தகைமைகளும் சேவைகளும் தனிரகமானவை. இலங்கையின் அரசியலிலே ஐம்பது நூற்றாண்டுகளாகத் தனித்துவம் மிக்க செல்வாக்கினை அவர் பெற்றிருந்தார். தம் முன்னோர்களின் பண்புகளான சாதுர்யம் சமயாபிமானம், நிதானம், பொதுநல வேட்கை என்பனவற்றை இயல்பாகவே, நிரம்பிய அளவிலே, அவர் தம் குணநலங்களாகப் பெற்றிருந்தார். தமிழ், ஆங்கிலம், சிங்களம், சமஸ்கிருதம், பாளி, இலத்தீன், கிரேக்கம் ஆகிய மொழிகளிலே தேர்ச்சிபெற்றிருந்த அவர் ஆங்கில மொழியிலே நாவலராக விளங்கினார். றிச்சட் மோர்கன், மாமனாராகிய முத்துக்குமாரசாமி போன்ற மாமேதைகளின் வழிநடத்தலிற் சட்டம் பயின்ற அவர் சட்டத்துறையிலே பெருவல்லவரானார். அவர் பெற்றிருந்த வாதத்திறமை அவர் காலத்திலே ஈடிணையற்ற தாகும். சென்னையிலே சென்று கல்விகற்ற நாட்களிலே சி. வை. தாமோதரம்பிள்ளையின் ஆதரவினையும் உறவினையும் பெற்றிருந்தார். அதனால் அவரின் தமிழார்வமும் தமிழ் இலக்கியங்கள் மேலான அபிமானமும் வலுவடைந்தன. சைவாபிமானம் மிக்க அவரின் மனதிலே, அருட்பரானந்த தேசிகரோடு கொண்ட தொடர்புகளின் பயனாக, ஞானம் பற்றிய ஈடுபாடு மேலோங்கியது.

*நாவலர் பெருமானின் ஆதரவோடும் ஆசிகளோடும் ஆரம்பமாகிய இராமநாதனின் அரசியல் வாழ்க்கையும் பொதுப்பணிகளும், சாதனைகள் பலவற்றைக் கண்டு மங்கலம் பொலிந்தனவாக நிறைவுபெற்றன. இலங்கைச் சைவர்களின் நவீனகால வரலாற்றிலே ஆறுமுகநாவலருக்கடுத்த சிறப்பிடத்தைப் பெறுகின்றவர் இராமநாதன். நாவலர் பெருமானின் வாழ்வு **1879**-ல் நிறைவெய்தியது. இராமநாதனின் அரசியல் வாழ்க்கையும் பொதுப்பணிகளும் அவ்வாண்டிலே தொடங்கியமை இங்கு குறிப்பிடத்தக்கது. நாவலர் பெருமான் தொடங்கிய பணிகள் சிலவற்றை அவருக்குப் பின், தொடர்ந்து நிறைவேற்றும் தகைமையினையும் வாய்ப்பினையும் இராமநாதன் பெற்றிருந்தார். சைவப் பிரசாரகராகவும் சைவசமய காவலராகவும் விளங்கிய நாவலர், தமது ஈடிணையற்ற நாவன்மையால் நாவலர் என்ற பட்டத்தினைப் பெற்றார். சைவாபிமானமும் சமய ஞானமும் ஒருங்கே அமையப்பெற்ற இராமதாதன் ஆங்கிலத்திலே கேட்போர் அதிசயிக்க வல்ல நாவன்மை கொண்டவர். ஆங்கில மொழியிலே 'நாவலர்' என்று உலகிலே புகழ்ந்து பாராட்டப்பெற்றவர். விக்ரோறியா மகாராணியாரின் வைரவிழா அரங்கில் அமர்ந்திருந்தவர்களை அறிமுகஞ் செய்து விழாவைத் தொடக்கிவைத்த பிரதமர், சலிஸ்பெரி (Salisbury ) பிரபு, தாம் பேசி முடித்ததும் இராமநாதனைப் பேசுமாறு அழைத்தார். அவரை அறிமுகஞ்செய்யுமிடத்து இராமநாதனே பிரித்தானிய பேரரசிலுள்ளவர்களிலே தலைசிறந்த பேச்சாளர் எனப் புகழாரஞ் சூட்டினார். இராமநாதனின் பேச்சைக் கேட்டுப் பெருமையுற்ற மகாராணி அவருக்கு மரகதப் பதக்கமொன்றைப் பரிசிலாக வழங்கிப் பாராட்டினார்.*

***1879**-ஆம் ஆண்டு முத்துக்குமாரசுவாமி மறைந்ததும் சட்டசபையிலே அவரின் இடத்திற்குத் தமிழரின் பிரதிநிதியாகப் புதிய ஒருவரை நியமிக்க வேண்டியிருந்தது. இப்பதவியினைப் பெறுவதற்கு நன்னித்தம்பி முதலியாரின் மருமகனும், பிரபல வழக்கறிஞருமான பிறிற்றோ (Britto) என்பவரும், முத்துக்குமாரசுவாமியின் மருகரும், இராமநாதனும் முற்பட்டனர். இராமநாதனுக்கு ஆதரவாக ஆறுமுகநாவலர் யாழ்ப்பாணக் குடாநாட்டிலே பிரசாரத்தினை மேற்கொண்டார். அரசாங்கம் இராமநாதனையே தமிழரின் பிரதிநிதியாக நியமித்தது. இராமநாதன் தமது பதவியினாற் கிடைத்த செல்வாக்கினையும், தமது தகைமைகளையும் செல்வத்தினையும் ஒருங்கே பயன்படுத்திச் சைவசமயவளர்ச்சிக்கும், கல்வி வளர்ச்சிக்கும் பல பணிகளை ஆற்றலானார். பல காரணங்களினாற் சைவசமயக் கல்லூரிகளை அமைக்கும் தமது திட்டத்தினை நாவலர் பெருமானால் நடைமுறைப்படுத்த முடியவில்லை. அவர் தொடங்கிய கல்விதொடர்பான முயற்சிகள் இராமநாதனின் வழிநடத்தலில் நிறைவுபெற்றன. சைவர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டிலே சைவசமயச் சூழலிலே உயர்கல்வி பெறுவதற்கென இந்துக் கல்லூரிகளை நிறுவினார்கள். இராமநாதன் அவர்கள் இருபத்திரண்டு பாடசாலைகளை அரசாங்கத்தின் உதவியுடன் சைவப்பிள்களுக்கென அமைத்துப் பெரும்சாதனை செய்தார். சைவப்பெண்கள் உயர்கல்விபெறுவதற்கெனச் சுன்னாகத்திற் சகல வசதிகளையும் கொண்டவகையில் இராமநாதன் கல்லூரியினை நிறுவினார். அதுவே சைவப் பெண்களுக்கென அமைக்கப்பட்ட கல்லூரிகளில் மிகப்பழமையானதென்பது இங்கு குறிப்பிடத்தக்கது. **1921**ஆம் ஆண்டில், பரமேஸ்வரக் கல்லூரியினை ஆண்பிள்ளைகளின் உயர்கல்விக்காக நிறுவினார். அது நவீன வசதிகளும், அழகிய கட்டிடங்களும் ஒருங்கே அமையப்பெற்ற கல்லூரியாக அமைந்து அவ்வூரினை*

அணிசெய்தது. அதுவே வாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு அடித்தளமாக அமைத்தமை பெருமைக்குரியதாகும். பெண்கள் கல்வி மேம்பாட்டிற்காக ஆசிரியர் பயிற்சிக்கலாசாலை ஒன்றினையும் அவர் இராமநாதன் கல்லூரிக்கருகில் அமைத்திருந்தார். யாழ்ப்பாணக் குடாநாட்டிலே ஆங்கிலக்கல்வி, மிஷனரிகளின் ஏகபோக உரிமை என்ற நிலையினை மாற்றியமைத்தவராக அவர் விளங்கினர். தாம் அமைத்த கல்லூரிகளிற் பயிலுகின்ற மாணவர்கள் சைவாபிமானத்தோடும் சமய உணர்வோடும் வளர்ச்சிபெற வேண்டுமென அவர் கருதியிருந்தார். அதனால், சிவன்கோவில்களை நிறுவுவதிலும் கவனம் செலுத்தினார். சைவர்களின் கல்வி வளர்ச்சிக்காக அரும்பணிசெய்த அப்பெருமகன் சைவசமய வளர்ச்சிக்கும் பெரிதும் பாடுபட்டார். தமையனாராகிய குமாரசாமி இறந்ததும், தந்தையார் ஸ்தாபித்த பொன்னம்பலவாணேசர் கோவிலின் நிர்வாகப் பொறுப்பு அவரை வந்தடைந்தது. அக்கோவிலை அவர் அழகும் வழிபாட்டு வசதிகளும் கொண்டதோர் ஆலயமாகப் புனருத்தாரணம் செய்தார். அது, இலங்கையில் இந்து கலாசாரத்திற்கு ஒரு ஆரமாக இன்றுவரையில் இருந்துவருகின்றது. அவரது சைவாபி மானத்திற்கும், கலாரசனைக்கும் ஒரு சிறந்த எடுத்துக்காட்டாக அக்கோவிலைக் குறிப்பிடலாம்.

சமயாபிமானம் மிக்கவரான இராமநாதன் இந்துசமய நூல்களையும் தத்துவங்களையும் மிகுந்த சிரத்தையுடன் அணுகி ஆராய்ந்தார். அவற்றுடன் விவிலியநூல், பௌத்தநூல்கள் ஆகியவற்றினையும் நன்கு பயின்றிருந்தார். சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவிற்குச் சென்று சமயப்பிரசங்கங்கள் நிகழ்த்துவதற்கு முன்னரே அத்தேசத்திற்கு வேதாந்த சித்தாந்த தத்துவங்களை அறிமுகஞ் செய்த பெருமை அவரையேசாரும். விவிலிய நூலிலுள்ள மத்தேயு, யோவான் ஆகியோரின் உபதேசங்களுக்கு நுணுக்கமான விளக்கவுரைகளை வெளியிட்ட சிறப்பினையும் அவர் பெற்றிருந்தார்.

சமஸ்கிருத மொழியில் ஈடுபாடும் அதிற் புலமையும் கொண்டிருந்த இராமநாதன் பகவத்கீதைக்குத் தமிழில் உரைசெய்து வெளியிட்டார். அறநூல்களான தர்மசாஸ்திரங்களின் சாராம்சங்களைத் தொகுத்து ‘இராமநாதியம்’ என்ற பெயரில் நூலொன்றும் இவரினால் வெளியிடப்பட்டது. ஆத்திசூடி உரை, நன்நூல் இலக்கண உரை என்பன இவரின் பிறவெளியீடுகளாகும். சமயஞானம், அறிவாற்றல், நாவன்மை என்பவை காரணமாக அவர் தமிழகத்திலும் மிகப்புகழ்பெற்றிருந்தார். ஆறுமுகநாவலருக்குப்பின் தமிழகத்தின் அறிஞர் அவைகளில், புகழாரம் பெற்ற சிறப்பு இவருக்கே உரியதாகும். **1917**ஆம் ஆண்டிலே திருவள்ளுவ மகாசபை, வள்ளுவர் பெருமானுக்கு விழாவெடுத்த போது அவரையே அதற்குத் தலைமை தாங்குமாறு கேட்டுக்கொண்டது. அவர் அங்கு திருக்குறளின் சிறப்புகள் பற்றி நிகழ்த்திய பேருரை மிகுந்த பாராட்டினைப்பெற்றது. மதுரைத் தமிழ்ச் சங்கமும் அவரை அழைத்துக் கௌரவித்தது. தமிழகத்துச் சைவர்கள் தமது சமய நிறுவனங்களுக்கு இன்னல்கள் ஏற்பட்டவேளைகளில் இவரின் ஆதரவினை நாடி நன்மையடைந்தனர்.

தில்லைவாழ் அந்தணர்கள் சிதம்பரத்திலே கிடைக்கின்ற வருவாய்களைக் கையாடுகின்றனர் என்ற பழிமொழிகேட்டு அரசாங்கமானது கோவிலின் நிர்வாகத்தினைப் பொறுப்பேற்க உத்தேசித்தது. இது தொடர்பாக விசாரணைக்குழுவொன்றும் அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டது. இவற்றினால் அச்சம்கொண்ட அந்தணர்கள் இராமநாதனை அணுகி முறையிட்டனர். அவர் அரசாங்க அதிகாரிகளுடன் வாதம்

நிகழ்த்தி, அரசாங்கத்தின் யோசனைகளைக் கைவிடச் செய்தார். திருச்செந்தூர்க் கோவிலிலே திருவிழா நடாத்தக்கூடாதென்ற அரசாங்கத்தின் தடை உத்தரவினை நீக்கச்செய்து சைவர்களின் பாராட்டுதல்களைப் பெற்றார். சென்னைச் சைவசித்தாந்த மகாநாட்டிற்கும் தலைமை தாங்கினார்.

இராமநாதன் அமெரிக்காதேசம் சென்று, சமயதத்துவங்கள் பற்றிப் பேருரைகள் நிகழ்த்திய காலத்தில், இந்து சமயத்திலும் கலாசாரத்திலும் பேரபிமானம் கொண்ட லீலாவதி அம்மையார், அவரின் சீடராகிப் பின்னர் இராமநாதனின் வாழ்க்கைத் துணைவியுமானார். உயரிய சிந்தனைகளும், ஆழ்ந்த அறிவும், மெய்ஞான வேட்கையும், இவற்றுடன் பெண்மையின் பண்புகளும் ஒருங்கே அமையப்பெற்ற அவ்வம்மையார் சைவசமய வளர்ச்சிக்கும், ஆராய்ச்சி அபிவிருத்திகளுக்கும் உறுதுணையாக இருந்துவந்தார். கணவரின் பணிகளைத் தமது கடமையாகக் கொண்டு அருஞ்சேவைசெய்தார். வான்மீகி இராமாயணத்தின் பொருளை ஆங்கிலத்தில் அழகுற எழுதி நூலாக்கிய பெருமை அம்மையாருக்கு உரியதாகும்.

கடந்த அரை நூற்றாண்டு காலத்திலே தமிழ்க்கல்வியிலும் தமிழ் ஆராய்ச்சியிலும் இந்து கலாசாரம், சைவசித்தாந்தம் போன்ற துறைகளிலும் பெருமுன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. பெருந்தொகையான நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன. சைவசமய நூல்களும், சித்தாந்த சாத்திரங்களும் அவற்றின் உரைகளும், ஆதீனங்களினாலும், தென்னிந்திய சைவசித்தாந்த கழகத்தினராலும் வெளியிடப்பட்டன. தமிழகத்திலும் ஈழத்திலும் உள்ள பல்கலைக்கழகங்களிலே தமிழ்த்துறைகள் நிறுவப்பட்டுள்ளன. அவை தமிழ்மொழி, தமிழ் இலக்கியம், தமிழர்சால்பு, வரலாறு, சமயநெறிகள்போன்ற துறைகளிற் பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டுள்ளன. ஈழத்தைப் பொறுத்த வரையில், தமிழியல், சைவசமயம், சைவசித்தாத்தம், இந்துகலாசாரம், கோவில்களுடன் தொடர்புடைய நுண்கலைகள் என்பவைபற்றிய உயர்கல்வியையும், ஆராய்ச்சிகளையும் மேம்படுத்தும் பொறுப்பும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்குச் சிறப்பாக உரியதாகும். இராமநாதன் அவர்கள் நிறுவிய கல்லூரி, பல்கலைக்கழகமாக இன்று வளர்ச்சிபெற்றிருப்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும். அதன் கலைப்பீடத்திலே இன்று இந்தியாதொடர்பான பாடநெறிகள் மிக முக்கியத்துவம் கொண்டமைகின்றன. இந்திய வரலாறு. தமிழக வரலாறு, தமிழ்க்கல்வி, இந்து கலாசாரம், சமஸ்கிருதம் ஆகிய துறைகள் சிறப்பாகக் குறிப்பிடத்தக்கவையாகும். இவற்றினை விருத்தி செய்வதன் மூலம் இராமநாதனின் கனவுகளை நனவாக்குவது நமது கடமையாகும். இக்கடமையை நிறைவேற்றுவதற்குச் சமுதாயத்தின் ஆதரவும் ஒத்துழைப்பும் கிடைக்கவேண்டும். எமது நூலகம் பல்கலைக் கழகப்படிப்பிற்கும் ஆராய்ச்சிகளுக்கும் மிகவும் அடிப்படையானதொன்றாகையால் அதனை ஒரு முழுமையான நூலகமாக உருவாக்கிக்கொள்வது எமது பிரதான பொறுப்பாகும். இராமநாதன் நுண்கலைக்கழகத்தினை ஒரு தனியான நிறுவகமாக அமைத்து, பல்கலைக்கழகத்தின் ஓர் உறுப்பாக அதனை வளர்த்தல் வேண்டும். அதன் மூலமாக இந்துகலாசாரத்தோடு தொடர்புடைய கலைகளை எமது மரபுகளுக்கும் இன்றைய தேவைகளுக்கும் ஏற்ப வளர்த்துக்கொள்ளலாம்.

இராமநாதன் நுண்கலைக்கழகம் இன்று கர்நாடக இசை, பரதம் ஆகிய அவைக் காற்றுகலைகளையே பயிற்றி வருகின்றது. இவைமாத்திரம் போதா. தமிழருடைய மற்றைய அவைக்காற்று கலைகளையும் இங்கு பயிற்றுவித்தல் வேண்டும். குறிப்பாகப்

பண்ணிசையானது மேலும் வளர்க்கப்பட வேண்டிய தொன்றாகும். இதுபற்றி இப்பொழுது இராமநாதன் நுண்கலைக்கழகத்தில் முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

இவை மாத்திரமல்லாது, இந் நுண்கலைக்கல்லூரியிலே சிற்பம், ஓவியம் ஆகியன கட்டாயமாகக் கற்பிக்கப்படல் வேண்டும். இன்று இலங்கையில் இந்த இரண்டு கலைகளையும் தமிழ்மொழி மூலம் பயிற்றுவதற்கான வாய்ப்பே இல்லாதுள்ளது.

இராமநாதன் நுண்கலைக்கழகம் பூரணமான நுண்கலைப்பயிற்சி நிலையமாக முகிழ்த்துக்கிளம்பல் வேண்டும்.

வேதம் பொது, ஆகமம் சிறப்பு என்பது சைவசமய நூல்களில் வற்புறுத்தப்படும் ஒரு கருத்தாகும். வேதங்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. அவற்றினைப்பற்றி ஒரு நூற்றாண்டுக்குமேலாக ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. நூற்றுக்கணக்கான நூல்களும் வெளிவந்துள்ளன. ஆனால் ஆகமங்கள் குறித்துத் தெளிவான விளக்கங்கள் இதுவரையில் வெளிவரவில்லை. ஆகமங்கள் இருபத்தெட்டு என்பது மரபு. அவை சைவ சமய சிந்தனைகளுக் கெல்லாம் அடிப்படையானவை. சைவசமயம் பற்றியும், குறிப்பாக சைவ சித்தாந்தங்கள் பற்றியும், தரமான ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படுவதற்கு ஆகமங்கள் தொடர்பான வெளியீடுகள் அவசியமாகும். அவற்றினைத் தமிழிலே மொழி பெயர்த்தல் ஒரு முதன்மையான தேவையாகும். இப்பணிகளிலே பங்கெடுத்துக்கொள்ளும் விதத்தில், பல்கலைக்கழகத்தினை வழிநடாத்திச் செல்லல் வேண்டும்.

*யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், லீலாவதி இராமநாதன் பெருமாட்டி நினைவுப்பேருரை.*

# சேர்.பொன் இராமநாதனின் துணைவியார் அமைத்த கோடைக்கானல் குறிஞ்சி ஆண்டவர் கோயில்

**பி. எஸ். செட்டியார்**

*மதுரையிலிருந்து 70 மைல் தூரத்தில் 7000 அடி உயரத்திலுள்ள கோடைக்கானலுக்கு நான் பேருந்தில் செல்லும்போது நக்கீரரின் குன்றுதோறா பாடலே ஞாபகத்திற்கு வந்தது கோடைக்கானலை 1821ம் ஆண்டில் ஐரோப்பியர்கள் தங்களுடைய சுகவாச இடமாக அமைத்தார்கள். சேர் வேரே லெவெஞ்* (Sir Vera Levenge) *நதியொன்றிற்கு அணைபோட்டு சுவிட்ஸ்ஸலாந்தை ஞாபகமூட்டக் கூடிய ஏரியொன்றை அமைத்து கோடைக்கானலின் அழகை மேலும் அழகாக்கினார் தூர தர்கினி நிலையமொன்றும் ஏரிக்கு 850 அடி உயரத்திலுள்ள ஜிகுபரக் குன்றில் உள்ளது.*

*கோடைக்கானலின் இயற்கை வனப்பை இராமலிங்க சுவாமிகளின் பின்வரும் பாடல் நன்கு சித்திரிக்கவல்லது!*

*"கோடையிலே இளைப்பாற்*

*றிக் கொள்ளுூம வகை*

*கிடைத்த குளிர்தருவே*

*தரு நிழலே நிழல்கனிந்த கனியே*

*ஓடையிலே யூறுகின்ற*

*தீஞ்சுவைத் தண்ணீரே*

*உகந்ததண்ணீரிடை மலர்ந்த*

*காந்த மலரே.*

*மேடையிலே வீசுகின்ற*

*மெல்லிய பூங்காற்றே*

*மென்காற்றில் விளைசுகமே*

*சுகத்திலுறும் பயனே*

*ஆடையிலே யெனை மணந்த*

*மணவாளா பொதுவில்*

*ஆடுகின்ற அரசே யென்*

*அலக்கலணித்தருளே"*

*கோடைக்கானலில் இறங்கியதும் ஒரே பசி. "ஏதாவது கோயில் இங்கே உண்டா?" என்று விசாரித்தபோது, "ஒரேயொரு கோயிலுண்டு; அதன் பெயர் குறிஞ்சி ஆண்டவர் கோயில்" என்றார்கள். அங்கே சென்று சீதப் புனலாடி உட்புகுந்தபோது*

“சேர் பொன்னம்பலம் இராமநாதனின் புகைப்படமொன்று மகாமண்டபத்தில் தொங்குவதைக் கண்டேன். எனக்கு தூக்கிவாரிப் போட்டது தேவஸ்தான அர்ச்சகர் பி.எஸ்.கிருஷ்ணய்யர் அவர்களை படத்தை பற்றி விசாரித்தேன். யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சேர் பொன்னம்பலம் இராமநாதனின் மனைவியார் சீமாட்டி லீலாவதி அம்மையாரே இக்கோவிலை நிர்மாணித்தாரென்றும் இது தற்பொழுது பழனி ஸ்ரீ தண்டாயுதபாணி சுவாமி தேவஸ்தான ஆட்சிக்கு உட்பட்டதென்றும் சொன்னார்.

கர்ப்பக் கிரகத்தின் புறப்பக்கத்திலுள்ள கல்வெட்டைக் காண்பித்தார். அது வருமாறு: -

“பொன்னும் மணியும்
பொலிவுமிலங்கை மன்னுமீழமண்டலத்
தமிழ்க் குலம் செய்த
தவத்திற் றோன்றிய
செம்மல், பூவுலகெங்கும்
பொன்றாப் பெரும் புகழ்மேவிய
கீர்த்தி மேலானி ராமநாதனென்னும்
ஞானச் செல்வன்
பழுத்தவன் பிற் பழனிக் குன்றிணை
வழுத்திய குலத்தில்
வழிபட்டருள் பெறக்
கருதி யன்னோன் காதற் றேவி
திருவுடை யாங்கிலம் குலத்திடை
யுதித்துப் பழவினைப்
பண்பாற் பரகிவ
நெறிபுகும் விழுமிய
லீலாவதியெனும் விமலை விண்ணென
யாரும் வியக்கும் வியன்
மலை தண்ணளி மேகத்
தவழுஞ் சோலை வின்பெறு காட்சிக்
கோடைக்கானலிற் சிவனருள் குமரன் சின்மய
குருபரன் இகத்தும் பரந்ததன
மெமக் கோடியிர்த் துணை
அகத்தும் புறத்துமிளகு செஞ்சோதி
அன்பர் கட்கிரங்கு
மறு முகத் தெய்வம்
குன்று தோறாடுங் குறிஞ்சி
யாண்டவன் கோயில் கொண்டருள்
குன்றெசைங் குறிஞ்சி
பூத்துப் பிரசம்
பொங்கிய யாண்டினில்
அத்திவாரமடிப்படை

*கோவிச் சித்திரச் சிற்பஞ் சிறந்து*
*பிறங்கச் செப்புங்*
*கவியை யாயி*
*ரத் தொடு சேர் முப்பத் தெட்டாண்டா*
*கிங் தாதுவிற்*
*சித்திரா பௌரணைச்*
*சீர்திகழ் நாளில்*
*இத்திருவாலய*
*மமைத்தனன் சத்தி தன்*
*பாலன் சந்தத*
*மருள்கவே"*

***6.5.1936***

*"ஈழநாடு" வெள்ளி விழாக் கொண்டாடும் இவ்வாண்டிலிருந்த இரண்டாண்டுகளில் ஈழநாட்டின் சீமாட்டி ஸ்தாபித்த கோடைக்கானல் குறிஞ்சி ஆண்டவர் கோவில் பொன்விழா கொண்டாடப் போகிறது.*

*ஈழகேசரி இருபத்தைந்தாவது ஆண்டு பத்திரிகை*

## ஸ்ரீ இராமநாத மான்மியம் நூலில்

# இரண்டாந்தர்மபத்தினி

*நீடமா மதியுங் கோடா நீதியு மமைச்சும் வேந்திற்*
*கூடவே நிதியுஞ் சூழுங் குலங்களுங் கலையுந் தேசு*
*மாடமா ளிகையும் பேறு மக்களுந் திதியு மின்னுந்*
*தேடமா நிலத்தினெல்லாச் செல்வமு மிருந்திட் டாலும்*

*சொல்லிய வொழுக்க மாண்பு தொழுங்குலத் தெய்வ பத்தி*
*நல்லிய லான கல்வி நாயகற் பணிவு தேசு*
*புல்லிய விருந்து காப்புப் பொருந்துமிக் குணங்கள் சான்ற*
*மெல்லிய லிலாத வில்லம் விளக்கிலா வில்ல மொக்கும்.*

*வீறுடை யில்லில் லோர்க்கு மெய்வலி பாதி யில்லை*
*மாறுடை யவையை வெல்லு மாற்றமுந் தானே குன்றும்*
*பேறுடை யெவர்க்கு முண்மை பேசுகிற் சத்தி தன்னோர்*
*கூறுடை யமலற் கேனுங் கூடுமோ தொழில்களைந்தும்,*

*அற்புடைத் தலைநாள் மன்ற லயர்ந்திருந் தறங்கள் காத்த*
*கற்புடைத் தேவி யிந்தக் காசினி துறந்து விட்டா*
*லிற்புடைத் தாக மேவி யினிதுநல் விருந்து பேணும்*
*பொற்புடைத் தான யார்க்கும் புனர்மணம் வேண்டிற் றன்றே.*

*கதித்தசீர்ச் செல்வந் தன்னைக் கல்வியைக் கருத்துக் கொக்க*
*மதித்தநல் லியலி னாளை மாணுமுத் தியோகந் தன்னைத்*
*திதித்மா லுலகிற் றான தேடுதலரிது வேதன்*
*விதித்தவூழ் கூட்டி வைக்கும் விலக்குதல் விதிக்கு மாமோ.*

*சேர்ந்தவூழ் செலுத்தச் சென்றே தேயங்க டொறுந்தான் முன்னா*
*ணேர்ந்தகன் மத்துக் கேற்ற நெறிகொடுப் புரவை முற்றச்*
*சோர்ந்தசட் டங்கண் மாறித் தோற்றிமே னுகரு மித்தை*
*யார்ந்தபே ரறிஞ ரல்லா லஞ்ஞைக ளறியப் போமோ.*

கீழ்கட லிட்ட கிட்டி கிடந்தலைந் தேகி மேல்பா
லாழ்கட னுகத்து ளைக்கு ளணைந்துநேர் கோத்த தொப்ப
வேழ்கட லினுக்கு மப்பா லிருப்பினுங் கன்ம மென்னு
மூழ்கட மாற்ற லாலங் கொருங்குறக் கூட்டு மென்பர்.

ஆறிய முனிவர் கட்கு மகிலமுங் கடந்த ஞான
மேறிய மகத்து கட்கு மிச்சையொன் றுறலு மாகு
மூறிய விச்சை யன்னோ ருறுகினு மிலை ரொப்பர்
தேறிய வுளமேற் கொண்ட தியானமுந் தவறு வாரோ.

தொல்லற மவற்று எந்தத் துறவுவீ டொன்றே நல்கு
நல்லறம் பொருள் வீடின்ப நான்கையுந் தந்து மேலுஞ்
சொல்லறத் துறைகட் கேய்ந்த துணையுமா யெழிது மென்றோ
வில்லற மியுற்று கிற்பா ரிருமையும் பெறுதற் கென்றே.

உலகநல் வினையுந் தான்முன் னுஞற்றுபுண் ணியமு நொந்த
வலகிலவ் வறிஞ ராற்று மருந்தவப் பயனு மான
விலகலில் லாதவூழும் விடுங் கொலோ வெங்கட் காக
விலகு மாயிரத்துத் தொள்ளா யிரத்துநான் கென்னு மாண்டில்.

பான்மலி கடலை விட்டுப் பாரிடைப் பிறந்த செவ்விக்
கான்மலி வல்லி யொன்று காவியைப் பிறையை வில்லைத்
தேன்மலி குமிழைப் பூத்துத் திகழ்வபோற் றிகழும் ரூப
மான்மலி நோக்க லீலா வதியணங் கனைய மின்னே.

ஒங்குல கினுக்கே தன்னோ ருடல் பொரு ளாவி மூன்று
மூங்குளங் களிக்க நல்கு முத்தம ராம நாத
னீங்குள ராச தர்ம மியன்மனைத் தர்மங் காக்கப்
பாங்குள செல்வத் தர்ம பத்தினி யெனக்கொ டெய்வம்.

பெருமைசேர் குலத்தை மாண்பைப் பெருங்குணங் காட்டு மென்று
மருமைசேர் கலையின் சீரை யறிவுதான் றெரிக்கு மென்று

மொருமைசேர் தவத்தின் பேற்றை வாழ்வுதா னுணர்த்து மென்று
மிருமைசே ருலகஞ் சொன்ன விலக்கணத் திலக்கே யாக.

உயர்குடிப் பிறப்பு மோங்கு முத்தம குணமுங் கற்ற
வயர்விலாக் கலையு முன்செய் யருந்தவப் பேறு மேற்ற
பெயர்மனத் தருளு மிந்தப் பேர்ப்பெரு மாட்டி தன்பான்
மயர்வறக் காணு மேனாம் வகுப்பது மிகைதானன்றோ.

பொருந்துநல் லழகாற் பூமின் பொறுமையாற் புவிமான் கொண்ட
மருந்துநேர் கணவற் காப்பால் வயங்குசா வித்தி ரிப்பெண்
டிருந்து நேர் நெறியால் வானிற் றிகழ்வட மீனங் கோம்பும்
வருந்துமில் லொழுக்கத் தாலவ் வாசுகி நிகரா மன்றோ.

தவம்பெறச் சமய தீக்கை தான்பெறச் சின்ன மான
சிவம்பெற வுருத்தி ராக்கத் திருவடந் தரிக்க நீற்று
நவம்பெறப் பூதி பூண நாடரு மனுட யாக்கைப்
பவம்பெறக் கிடைக்கு மேனற் பாக்கிய மிதன்மே லுண்டோ.

ஆரியந் தமிழை மற்றை வாங்கிலக் கலைகள் கற்றுஞ்
சீரிய காட்சித் தாய சித்திர வகையிற் றீர்ந்து
மோரிய நின்ற விந்த வுலகின துண்மை காட்டு
நேரிய ஞான நூல்க ணெறிப்பட வாய்தல் செய்தும்.

ஆனஞர் னங்கை வந்தே யைம்புல னடக்கி யாங்கோர்
தானமேற் கலக்கும் யோக சாதனப் பயிற்சி யுற்று
மோனமேற் கதியா னந்த முத்தியங் கதற்கே யின்னு
மூனமற் றுலக மேத்து முயர்சிவ பத்தி வாய்ந்தும்.

ஓதவந் துயர்ந்து மாத ருவர்க்கெலாந் திலக மொத்தே
பாதவத் திலங்கை காக்கும் பார்த்திப னமைச்சுக் கேய்ந்த
மீதவப் பெருமைத் தான மேன்மைக ணடத்தற் கொத்த
மாதவம் புரிந்த லீலா வதியருந் துணைய தாக.

மானவர் கண்ணி னுள்ளு மனத்துளுந் தோற்றி நிற்போன்
றானவன் ராம நாதன் றருமபத் தினியுந் தானு

*மானவல் லரசுக் கேற்ற வமைச்சியற் கருமத் தோடும்*
*வானவர் வாழ்த்தற் கொத்த மனையற மோம்பி யுற்றார்.*

*உண்ணெகிழ்ந் துவந்து தன்னோ ருடலுக்குந் துணையா மென்றே*
*தண்ணிய குணமு மேழைச் சனங்கண்மே லிரக்கந் தானு*
*நண்ணிய விந்த மாது நற்றுணை யான கால*
*மெண்ணுமா யிரத்துத் தொள்ளாயிரத்துமே லைந்தா மாண்டே.*

*இன்னதோர் நாளிற் றாஞ்செய் யிருந்தவப் பிண்ட மாக*
*நன்னல நிலையிற் கோளு நாளுமங் குலவி நிற்ப*
*வன்னமே வுற்ற வோர்பெண் மகவுவந் துதிக்கக் கண்டே*
*முன்னமுண் மகிழ்வின் மேலு முடிவிலா மகிழ்வு பூத்தார்.*

*அற்பகற் பேணித் தொள்ளா யிரத்துட னிரண்டா மாண்டிற்*
*கற்கட கத்துத் திங்கள் கவினவந் துதித்தா ளுக்குச்*
*சொற்சிவ காம சுந்த ரிப்பெயர் துலங்க விட்டே*
*நற்பக னாடிக் கல்வி நலம்பெறக் கற்க வைத்தார்.*

*பாங்குறக் குழந்தைக் கேற்ற பக்குவ மெய்த வெய்த*
*வாங்கிலந் தமிழொ டின்னு மாரிய மதுவு நாளு*
*மோங்குறப் பயிற்றி மேலு மோதுவார் தம்மை நாடி*
*யீங்குற வழைத்து வைத்தா ரினியதே வார மோத.*

*குத்திர மிலாத கீதக் குலத்துளோர் தம்மைக் கூவிச்*
*சித்திர வீணை நன்னைத் திவவுயாழ் தன்னை யாங்கே*
*பத்திர மாக வைத்துப் பயிற்றினர் நாளு நாளும்*
*புத்திர வாஞ்சை கூரப் போற்றினர் வருவ தானார்.*

*ஸ்ரீமாந் ச.பொன்னம்பலபிள்ளை, ஸ்ரீராமநாத மான்மியம், 1930.*

# லேடி இராமநாதன் அவர்கள் வெளியிட்ட சில நூல்கள் பற்றிய விபரங்கள்

# The Gospel of Jesus

ACCORDING TO ST. MATTHEW

AS INTERPRETED TO

R. L. HARRISON

BY THE LIGHT OF

*THE GODLY EXPERIENCE*

OF


SRI PARÁNANDA

(P Rámanáthan of Ceylon)

"*Make known with boldness the mystery of the gospel.*"
EPH. vi, 19

LONDON
KEGAN PAUL, TRENCH, TRÜBNER & CO. LTD.
PATERNOSTER HOUSE, CHARING CROSS ROAD
1898

FB



Old Bridge. N.J.
2nd Ap. 1906.

The Librarian.
Cornell University.

Dear Sir,
I have much pleasure in forwarding in a separate parcel three of my works for the acceptance of the Cornell University.

I am leaving New York for London on Friday next 6th inst. Any letter addressed to the care of Messrs Richardson & Co, 25 Suffolk St. Pall Mall, London, will reach me.

Yours faithfully
P. Rámanáthan

P.T.O.

# Western Pictures for Eastern Students

By

R. Lílâvati

Being a Description of the Chief Incidents of a Journey made by that Distinguished Scholar, Statesman and Sage, Śri P. Rámanáthan, K.C., C.M.G., from Ceylon to the United States of America in 1905–1906

London :
W. Thacker & Co., 2, Creed Lane, E.C.
Calcutta and Simla : Thacker, Spink & Co.
1907

*All rights reserved*

# PREFACE

MOST of the chapters in this volume were contributed by me as articles to three leading daily newspapers, the *Indian Mirror*, the *Hindu* and the *Ceylon Independent*, published respectively in Calcutta, Madras and Colombo, and have been read with much interest throughout India and Ceylon.

As observed by the Editor of the *Indian Mirror* in his issue of 19th June, 1906, the career of Mr. Rámanáthan, whose journey from Ceylon to the United States of America was the subject of my articles, is "a fit object-lesson to the educated youths of India and Ceylon; for seldom does one come across a man of such phenomenal energy as Mr. Rámanáthan, who is as sound an authority on philosophy, arts, literature and religion as he is on law."

In deference to the desire of my friends in India to have these articles republished in the form of a book, I have carefully revised them, and added three new chapters, viz. the first, second and twentieth.

R. LÍLÁVATI.

PUTNEY, LONDON,
*August 3rd*, 1907.

# THE
# RÂMÂYANA

OR

## THE WANDERINGS OF SHRI RÂMAN, FROM AYOTHYÂ TO LANGKÂ IN THE EARLY PART OF THRÊTHÂ YUGAM, ACCORDING TO SAINT VÂLMÎKI,

BRIEFLY TOLD IN ENGLISH

BY

LADY RÂMANÂTHAN
PRESIDENT OF RÂMANÂTHAN COLLEGE FOR HINDU GIRLS

---

WITH AN INTRODUCTION,
AND WITH NOTES IN THE APPENDIX,

PREPARED BY

SIR PONNAMBALAM RÂMANÂTHAN, KT., K.C., C.M.G.
PRESIDENT OF PARAMESHVARA COLLEGE FOR HINDU BOYS

PRINTED & PUBLISHED BY
W. E. BASTIAN & Co.
COLOMBO.
1931

# PREFACE.

It is over thirty years since I began to study this glorious Epic of India. Sir Râmanâthan brought it to me one day, and began to read aloud and explain it in his own charming way, saying that I would learn much about that ancient land if I would read it. So I took the book and began to read, and soon became absorbed in it. Before long I began to repeat portions of it to Sir Râmanâthan, which he would expound in words of grace and truth, giving me glimpses into the great ocean of wisdom, that is the sacred heritage of India. He then asked me to write the Râmâyaṇa in simple form and I began to write, learning myself the while the stirring songs of Râma and Sîthâ. My love for India has deepened. Most delightful memories have gathered round the Râmâyaṇa, illuminated by the Inner Light of his great soul. During the last days of his life, he devoted his spare moments to the *Introduction* and *Notes*, both of which gave him immense pleasure. He took the Râmâyaṇa everywhere with him. On the way to England and back during his last journey in 1930, he was busy writing *Notes* for it on board the ship. After his return he was engaged in revising them and getting them ready for the press. It will be of great interest to all to know that the last words he wrote when he was feeling better during his last illness were those on page xvi of the *Notes*, where he added to his note on Brahmâ the latter part on Ruthra Mûrthi, and the beautiful words of Mâṇikkavâsaka Svâmi in Thamiḻ from his *Pôtri Thiru Akaval*, beginning

பரம் பரம் ஜோதி, பரனே போற்றி!

These words he quoted from memory. They formed part of his daily prayer. His closing words show how steadfastly his mind was fixed on that Great Light. For him the world had receded very far when he repeated for the last time these much-loved lines from Mâṇikkavâsaka Svâmi. The Great Light enveloped him, and soon afterwards gathered him unto Itself. It is clear that his closing message to those who have ears to

hear is expressed in these beautiful words. At the time I did not realise that they would be his words of farewell, but only after the sad event of the last month or two, during which we have lost our great Teacher, Leader and Friend, have I understood their true significance. These last words are the most fitting close to a life which has been devoted to the service of God and the people. Nothing has been added to his *Introduction* and *Notes*, which were in the revision stage. He had not quite finished his work; therefore, some parts are incomplete. But I am sure that every one would like to have them just as they are, and that those who grieve for him will be consoled by hearing his last message. He has quoted the passage in Thamil in his *Notes*; but, as he had already published his English translation of these lines seven years ago, I give below the full text of the same for the benefit of such of my readers as are not versed in Thamil

## Adoration of Parashivam.

(From Mâṇikkavâsaka Svâmi's *Pôtri Thiru Akaval*)

*Parashivam.*

O Light, Most High, adoration (to Thee) Transcendent!
Unthinkable Thou, O Shiva, adoration!
Everlasting Thou, adoration! Incorruptible Thou, adoration!

*Mahêshvaran.*

Things without forms and things with forms Thou hast become, adoration!
The beginning, the middle, the end, Thou art (of all things), adoration!

*Evolution of the five gross bhûthas out of the five thanmâthrâs.*

Through (material) space Thou pervadest as one (âkâsa thanmâthrâ), adoration!
Through (tangible) air Thou art pleased to stand forth as two (âkâsa and vâyu thanmâthrâs), adoration!
Through (visible) fire, Thou whirlest as three (âkâsa, vâyu and agni thanmâthrâs);
Through (tangible) water Thou movest as four (âkâsa, vâyu, agni and jala thanmâthrâs),
Through (tangible) earth Thou extendêst as five (âkâsa, vâyu, agni, jala and prithvi thanmâthrâs).

| | |
|---|---|
| *Three Mûrthis.* | O Thou who has become the Three Mûrthis (Ruthra, Vishṇu, Brahmâ), adoration!<br>O Thou the first cause of the four Vêthas, adoration!<br>O Thou one who art not to be grasped by word or thought, adoration! |
| *The five divine works of Mercy (pancha kri-thyam) of Mahêshvaran* | O Thou Lord of every people in every country, adoration!<br>Adoration (to Thee), who createth, maintaineth and effaceth!<br>Adoration (to Thee), who removeth all things that hinder us!<br>Adoration (to Thee) who blotteth out the troubles of those who worship Thee! |
| *Confession of faults and appeal for mercy* | Restless in mind, wandering like a dog, thy servant, adoration!<br>Down-hearted, Thy servant, Thine-own, adoration!<br>O Thou Mountain of Grace who hast enfolded me (in Thy love from days of yore), adoration! |
| *Conquest of restlessness, fear and depression* | Mayest Thou say "Fear Not," adoration!<br>Adoration! Adoration! Victory, Victory (have I won), adoration! |

He also intended to write at great length about the poet Vâlmîki and the identity of what is now called Ceylon with Shri Langkâ. In a later edition I may be able to add some notes on the latter subject which were made during one of our pilgrimages to places in this island where the traditions of Shri Râma's journey are still preserved.

I most cordially thank all those who have helped me in innumerable ways during my work. My gratitude is most of all due to Sir Râmanâthan himself, who took such an enthusiastic interest in the publication of the Râmâyaṇa, and gave so much of his time and consideration to it. Through the years that have passed since I came to learn at his feet, he has been my one great Friend, my Beloved Teacher, my Everlasting Light of Grace and Truth, which no words can ever describe.

Râmanâthan College, R. L. RÂMANÂTHAN.

Jaffna.

December, 1980.

சேர் பொன். இராமநாதனின் அறப்பணிகளை நினைவுகூர்ந்து
சைவமங்கையர் கழகம் வெளியிட்ட மலர்.


# SIR PONNAMBALAM RAMANATHAN, Kt., K.C., C.M.G.,

## ALL-CEYLON LEADER AND EDUCATIONAL SEER

A Sketch of
His Life & Work

Published by
The Saiva Mankaiyar Sabai
on the
RAMANATHAN DAY

**December, 1961**



ISBN 624947662-8